Canada's Oldest Tamil Newspaper VLAMBARAM™ www.vlambaram.com

26 வது ஆண்டில்
கனடாவின் முத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com






நதி 26 பாலம் 18 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் SEPTEMBER 15, 2016

# சீனாவில் G20 நாடுகளின் மாநாடு

சீனாவில் உள்ள Hangzhou நகரில் 2016 ஆம் ஆண்டிற்கான G20 நாடுகளின் 11ஆவது மாநாடு 2016 செப்ரெம்பர் 4ஆம் 5ஆம் திகதிகளில் நடைபெற்றது. இரண்டாவது ஆசிய நாடாக சீனா




இந்த G20 நாடுகளின் மாநாட்டை நடத்துகிறது. இதற்குமுன்னர் 2010 இல் G20 நாடுகளின் மாநாடு தென்கொரியாவில் நடைபெற்றது. 2017ஆம் ஆண்டிற்கான G20 நாடுகளின் மாநாடு ஜேர்மனியிலும் 2018ஆம் ஆண்டிற்கான மாநாடு ஆஜன்ரீனாவிலும் நடைபெற உள்ளது.

G20 நாடுகளின் 11ஆவது மாநாட்டிற்குத் தலைமை வகித்த சீனாவின் அதிபர் Xi Jinping 2016 செப்ரெம்பர் 4ஆம் திகதி தனது தலைமை உரையில் G20 நாடுகளின் தலைவர்களை வரவேற்று உலகப் பொருளாதாரம் செழிப்புற்று (Prosperity) சீரான பாதையில் வளர்ச்சியுற்று வலுவான நிலையை அடைய G20 நாடுகளின் தலைவர்கள் எல்லோரும் ஒன்றுபட்டு ஒற்றுமையாக முயற்சி செய்து தற்போதைய சவால்களை முறியடிக்க வேண்டும் என்றார்.

Xi Jinping தனது உரையில் பின்வரும் ஐந்து தீர்மானங்களை முன்வைத்தார். நாங்கள் எல்லோரும் கூட்டாகச் சேர்ந்து தூரப்பார்வையில் பொருளாதாரத்தை (Macroeconomic) சர்வதேசம் எங்கும் வளர ஊக்குவிக்க வேண்டும். பொருளாதார வளர்ச்சிக்காக புதிய பாதையைத் தோற்றுவித்து புதிய வளர்ச்சி வேகத்தை உருவாக்க வேண்டும். உலகப்பொருளாதார ஆட்சிமுறை (Economic governance) அபிவிருத்தி மற்றும் நிதிநிறுவனப் பாதுகாப்புகளை வலுப்படுத்த வேண்டும். ஒரு திறந்த உலகப் பொருளாதாரமுறையை உருவாக்கி வர்த்தகம் மற்றும் முதலீட்டைத் தாராளமயமாக்க வேண்டும். 2030 ஆம் ஆண்டுக்கான ஒரு நிலையான அபிவிருத்தி (Sustainable development) திட்டம் ஒன்றை உருவாக்கிச் செயற்படுத்த வேண்டும்.

இம்மாநாடு நடைபெற்ற Hangzhou நகரம் சீனாவின் தென்கிழக்கில் உள்ள Zhejiang மாகாணத்தின் தலைநகரம் ஆகும். 8.9 மில்லியன்

தொடர்ச்சி 03ஆம் பக்கம்...



















# HOUSE FOR SALE

**7 Summer Ford Dr**




## Bowmanville
**5 Bedrooms,**
**4 Washrooms,**
**2900Sqft**

**22 Havery Jones**




## Bowmanville
**5 Bedrooms,**
**4 Washrooms,**
**3300Sqft**

**21 Berger Ave**




## Markham
**4Bedrooms,**
**4 Washrooms,**

1st , 2nd Mortgage for Home/ Business
We buy old houses for highest price
Home Renovation
Home renovation Loan

**CANADA WEALTH MANAGEMENT INC.**
6055 Steels Ave E. Unit C102, Scarborough, ON. M1X 0A7
**RANGAN Tel: 647.702.2159**

வீடு வாங்க விற்க,
வீடுகளுக்கும், வியாபார ஸ்தாபனங்களுக்கும் 1st,2nd மோட்கேஜ்,
பழைய வீடுகள் பெறுமதி மிக்க விலையில் வாங்கப்படும்.
Home Renovation செய்து கொடுக்கப்படும்.

**FOR ALL YOUR REAL ESTATE & INVESTMENT NEEDS...**

கனவு உங்களுடையது
பொறுப்பு எங்களுடையது

**SALES REPS. WELCOME....**

**Tel: 416-321-6969**



HOMELIFE HIGHER STANDARDS

**Raja Mahendran,P.Eng.**
**(Broker/ Owner)**

**HomeLife/GTA Realty Inc.Brokerage. Inc.** Brokerage
GTA SQUARE 5215 Finch Ave. East. Unit #203 Toronto ON. M1S 0C2
Independently Owned & Operated

**Friends MATRIMONY**



திருமணத் உங்கள் தேடலுக்கோர் முற்றுப் புள்ளி...

சனி, ஞாயிறுகளில்
12:00pm-6:00pm
இலவசமாக திருமண பொருத்தம் பார்க்கப்படும்

- ✓ 5000 மேற்பட்ட பொருத்தமான வரன்கள் உங்கள் தெரிவுக்கு
- ✓ மிக இலகுவாக இணையத்தில் பதிவு செய்யும் வசதி
- ✓ அல்லது தொலைபேசி. தபால். email ஊடாக பதிவு செய்யலாம்

**info@friendsmatrimony.com**
**www.friendsmatrimony.com**
Choose Your Life Partnar Here

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி 10:30a.m- 7:00p.m

| Sri Lanka | Canada |
| --- | --- |
| Ph: 94-112-363663 | info: 647-709-1536 |
| No-11- 2/1, 33rd lane, | GTA Square |
| Wellawatta, | 5215 Finch Ave. E. Unit 257 |

# சீனாவில்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

மக்கள் வாழும் இந்நகரம் Yangtze நதிக்கரையில் அமைந்துள்ளது. இந்நகரம் சீனாவின் சரித்திரப் பிரசித்திபெற்ற ஏழு பழம்பெரும் நகரங்களில் ஒன்று. இந்நகரத்தின் அரசாட்சிமுறை 2,200 ஆண்டுகளுக்கு முற்பட்டகாலத்தில் இருந்து தொடங்குகிறது. இங்கு 8,000 ஆண்டுகளுக்கு முன்னரே மனிதர் வாழ்ந்த இடங்கள் காணப்படுகின்றன.

இம்மாநாட்டின் இறுதியில் 2016 செப்ரெம்பர் 5ஆம் திகதி G20 நாடுகளின் தலைவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 48 விடயங்களை அடக்கிய 14 பக்க அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. அதில் முக்கியமாக வரி ஏய்ப்பிற்கு (Tax evasion) எதிராக எல்லா நாடுகளும் சேர்ந்து போராடுவது பற்றியும், வரி ஏய்ப்பு புகலிடங்களை அடையாளம் கண்டு அவற்றைக் கறுப்புப் பட்டியலில் சேர்த்தல் (Black list) பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

G20 நாடுகள் சர்வதே வர்த்தகத்தை ஆதரிப்பதாகவும் சர்வதேச வர்த்தகத்திற்கு எதிராக பாதுகாப்பு வாதம் பேசுபவர்களை எதிர்ப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பொருளாதார வளர்ச்சிக்காக G20 நாடுகள் நிதி வழங்கி ஊக்கிவிக்க வேண்டும் (Fiscal stimulus) எனவும் கேட்கப்பட்டுள்ளது. G20 நாடுகள் உலக மயமாக்குதலுக்கு (Globalization) எதிரான தாக்குதல்களுக்கு எதிராகப் போராட வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது. இவற்றைவிட அகதிகளுக்கான ஆதரவை பலப்படுத்துமாறும் கேட்கப்பட்டுள்ளது.



கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ இரண்டாவது முறையாக G20 மாநாட்டில் கலந்து கொண்டார். அவர் G20 மாநாட்டிற்கு முன்னர் சீன வர்த்தகப் பிரமுகர்களுடன் உரையாடுகையில் கனடாவுடன் வர்த்தக உடன்படிக்கைகளை செய்வதன் மூலம் சீனாவின் மதிப்பு மேற்குலக நாடுகளில் மேம்படும் என்றார். கனடா பல நாடுகளுடன் திறந்த வர்த்தகத்தில் ஈடுபடுவதாலும் கனடாவிற்கும் சீனாவிற்குமிடையே நீண்டகால நட்புரிமை உள்ளதாலும் இது சாத்தியம் என்றார்.

மாநாட்டிற்கு வந்த இந்தியப் பிரதமர், இங்கிலாந்துப் பிரதமர், ரஷ்சிய அதிபர் உட்பட எல்லோருக்கும் செங்கம்பள வரவேற்பு அளித்த சீனா அமெரிக்க அதிபருக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கவில்லை என ஊடகங்கள் குற்றம் சாட்டியிருக்கின்றன. அமெரிக்க அதிபர் வந்த விமானமான 'Airforce one' சீன விமான நிலையத்திற்கு வந்தபோது



அமெரிக்க அதிபர் வழமையாக வெளியேறும் விமான முன் வாசல் கதவிற்கு நகரும் படியை சீன விமான அதிகாரிகள் கொண்டு வரவில்லை. அமெரிக்க அதிபர் விமானத்தின் அடிப்பகுதியில் உள்ள கீழ்கதவால் இறங்கியே விமான நிலையம் சென்றார். இதன்மூலம் வேண்டும் என்றே சீனா அமெரிக்க அதிபரை அவமதித்துள்ளது என அமெரிக்க ஊடகங்கள் குற்றம் சுமத்தியுள்ளன.
ஆனால் சீனா விமான அதிகாரிகளோ தாங்கள் எல்லாநாட்டுத் தலைவர்களது விமானத்திற்கும் நகரும் படியைக் கொண்டு சென்றோம். அமெரிக்க அதிகாரிகள் தான் நகரும் படியின் ஓட்டுனரிற்கு ஆங்கிலம் தெரியாததால் அனுமதிக்கவில்லை என கூறியுள்ளார்கள். அவர்கள் மேலும் தெரிவிக்கையில் தாங்கள் அந்த ஓட்டுனருடன் ஒரு மொழி பெயர்ப்பாளரையும் சேர்த்து அனுப்பத் தயாராக இருந்தோம். அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகள் அதை ஏற்க வில்லை எனத் தெரிவித்தனர்.

G20 நாடுகளின் என்பது உலகில் மிகவும் பொருளாதார வளம் மிக்க 20 நாடுகள் சேர்ந்து 1999 இல் உலகின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் முயற்சியில் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பாகும். இவை உலக சனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கு மக்களைக் கொண்ட நாடுகள் ஆகும். இவை பொருளாதார உற்பத்தியில் உலகின் 85% பங்கைக் கொண்டுள்ளன.

இவற்றில் 19 நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியமும் இருக்கின்றன. இந்தப் 19 நாடுகளும் ஆஜன்ரீனா, அவுஸ்ரேலியா, பிறேசில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜேர்மனி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், தென்கொரியா, மெக்சிகோ, ரஷ்யா, சவூதி அரேபியா, தென்ஆபிரிக்கா, துருக்கி, ஐக்கிய இராச்சியம் (UK) மற்றும் அமெரிக்கா ஆகும்.

இவ் 20 நாடுகளின் தலைவர்களும் 2008 ஆம் ஆண்டில் இருந்து அடிக்கடி கூடி உலகின் பொருளாதார விடயங்களில் தீர்வுகள் மற்றும் திட்டங்களை வகுத்து வருகின்றனர். இவர்களது 11ஆவது மாநாடே சீனாவில் 2016 செப்ரெம்பர் 04ஆம், 05ஆம் திகதிகளில் நடைபெற்றதாகும்.




Store hours: Mon to Fri 11:00 - 8:00 // Sat 11:00 to 7:00// Sun 12:00 to 6:00 Flyers valid up to September 30th, 2016
TECH LINK COMPUTERS
TLC
SALES SERVICE & REPAIR
www.techlinkcomputers.com
9833 Markham Road, Unit 1A- (905)-554-5400
மாபெரும் திறப்பு விழா!!
உங்களுக்குத் தேவையான
computers, laptops மற்றும் Electronics சாதனங்களை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளவும்
அவற்றை மலிவு விலையில் திருத்திக்கொள்ளவும் எம்மை நாடுங்கள்.
WE FIX COMPUTERS
BLOWOUT
DELL Monitor
USB 2.0 Ports
Fully adjustable stand
Starting From
$39.99
OFF LEASE
Universal A/C Adapter
Includes 8 Pcs Tips Compatible With Most Notebooks
$19.99
REG: $29.99
BRAND NEW
Mini Projector UC28+
Perfect for DVDs, Pictures, and More!
$89.99
REG: $139.99
BRAND NEW
DELL Latitude Business Series
BLOWOUT
Intel Core i5
Starting From
$189.99
OFF LEASE
GS800L CAR DVR
HD Recording 2.7" TFT HDMI
Motion Detection 4x Zoom Built-in Mic.
BRAND NEW
$29.99
REG: $49.99
Mini DisplayPort to HDMI
$9.99
BRAND NEW
REG: $19.99
Bluetooth Stereo Headphone
Hands-free Calling, Soft & Comfortable Ear Muffs
$19.99
BRAND NEW
REG: $29.99
Selfie stick
235 Degree Rotation
BRAND NEW
$5.99
REG: $9.99
iPhone 5 to HDMI
1.8 Meter
$24.99
REG: $39.99
BRAND NEW
Logitech Wireless Keyboard & Mouse MK270
$24.99
REG: $39.99
OPEN BOX
Bluetooth Music Player
Simple And Easy To Operate
Speaker Phone Function
$19.99
BRAND NEW
REG: $29.99
Power Bank
Charge Your Phone/Tablet On The Go
2A & 1A Outputs 10,400 MAH
$19.99
REG: $29.99
BRAND NEW
Lenovo Desktop
BLOWOUT
Lenovo Desktop With DDR3 4GB/160GB/DVD
Starting From
$89.99
OFF LEASE
HP Elite
Core i5 4GBRAM 250HDD
BLOWOUT
Starting From
$199.99
OFF LEASE
14.4" Laptop Sleeve
Compatible With All Types Of 14.4" Notebooks
$3.99
REG: $9.99
BRAND NEW
Wireless-N Wifi Repeater
More Range For Every WLAN Network
$19.99
REG: $29.99
BRAND NEW
MP4 Multimedia Player
$19.99
REG: $29.99
BRAND NEW
Bluetooth Wireless Keyboard
$19.99
REG: $29.99
BRAND NEW
Tempered Glass Protector
Anti-Shock and Anti-Fingerprint Effect
$4.99
REG: $9.99
BRAND NEW
Mini Clear Speaker
Can be used with USB, SD Card, & AUX Cable
Includes FM Radio.
$19.99
REG: $29.99
BRAND NEW
Multi Card Reader
MacBook Series Beautifully Concise Style
$4.99
REG: $9.99
BRAND NEW
Wireless Mouse
$7.99
REG: $14.99
BRAND NEW
Digital Spy Camera Clock
Remote control & Motion detection video
$34.99
REG: $49.99
BRAND NEW
7" Bluetooth Tablet
8GB Memory Includes Case And Keyboard
$49.99
REG: $69.99
OPEN BOX
10 Port USB Hub
480 Mbps
High Speed USB 2.0
$9.99
REG: $14.99
BRAND NEW
Jackly JK 6066-B
33 in 1 Screwdriver Set with Tweezer & 100mm bar
$6.99
REG: $12.99
BRAND NEW
Aluminium Mini Cooler Pad
Slim & Smart Design. Comfortable & Convenient.
$6.99
REG: $12.99
BRAND NEW
Universal All in 1 Adapter
World Travel Adapter covers more than 150 countries
$6.99
BRAND NEW
REG: $9.99
Mini Helicopter
$29.99
REG: $48.89
BRAND NEW
Galaxy MHL to HDMI Adapter 2M
Turns your phone's USB-port into a HDMI-port
$9.99
REG: $16.99
BRAND NEW
Flat TV Mount 14" to 42"
Compatible With most 14" to 42" LED/LCD TVs
$9.99
REG: $19.99
BRAND NEW
HDMI to HDMI 3M Cable
$3.99
REG: $9.99
BRAND NEW
PRODUCTS ARE AVAILABLE IN LIMITED QUANTITIES. PRODUCTS ARE LIMIT 1 PER CUSTOMER. PRODUCTS MAY NOT BE EXACTLY AS SHOWN. PRICES AND AVAILABILITY ARE SUBJECT TO CHANGE WITHOUT NOTICE. TECH LINK COMPUTERS IS NOT RESPONSIBLE FOR ANY MISPRINTS OR ERROR. ALL TRADEMARKS BELONG TO THEIR RESPECTIVE OWNERS. ALL PRODUCTS ARE 3% CASH DISCOUNTED. IF NOT PAYING BY CASH OR DEBIT, 3% WILL BE ADDED TO THE TOTAL AMOUNT.

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto
Brokerage Office : 8121–1396, Don Mills Rd, Toronto, ON, M3CB 0A7 Office Phone : 416-391-3232

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

நல்ல ரேட்ல மோட்கேஜ் செய்ய வேணும்?

பவர் ஒப் சேல் பிரச்சினை ?

பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் செய்ய வேணும்?

லைன் ஒப் கிரெடிட் எடுக்க வேணும் ?

எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க மாத்த வேணும்?

அவசர தேவைக்கு வீட்ட வைச்சு காசு எடுக்க வேணும் ?

வீடு கட்ட மோட்கேஜ் எடுக்க வேணும்?

ரீபைனான்ஸ் செய்ய வேணும்?

2வது, 3வது மோட்கேஜ் எடுக்கவேணும்?



## என் கேள்விக்கு என்ன பதில்?



"மோட்கேஜ் கிளினிக்" ✔

உங்களுக்கு பதில் கொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

## வோக் இன் - திங்கள் - சனி 9.00 - 5.00 மணிவரை



ஜெ(Jey)இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Broker
FSCO Lic # M 09001428

**Cell : 416-624-4843**

1504 Markham Rd, Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

# ஐ.நா செயலரின் இலங்கைப் பயணமும் அதன் விளைவுகளும்!

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ முன் இலங்கைக்குப் பயணம் செய்தமை அண்மைய நாட்களில் இடம் பெற்ற முக்கியமானதொரு நிகழ்வு ஆகும். ஆனால், அவரது இந்த வருகையினால் ஏற்பட்ட மாற்றங்கள் அல்லது விளைவுகள் குறித்து ஆராய்கையில் பெரிதாக எதனையும் குறிப்பிட முடியாத நிலையே உள்ளது.

தமிழ் மக்களது ஆதங்கங்களையும் அரசாங்கத்தரப்பினரினது விளக்கங்களையும் கேட்டுக்கொண்ட பான் கீ மூன் ஒரு சம்பிரதாய ரீதியாகவே அவரது பயணத்தை நிறைவு செய்து கொண்டு திரும்பியுள்ளார்.



கடந்த மாதம் 31ம் திகதி மாலை இலங்கை வந்தடைந்த ஐ.நா செயலர் அன்று இரவே பிரதமர் ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்திருந்தார். அடுத்த நாள் 01ம் திகதி முற்பகல் காலிக்குச் சென்ற அவர், அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இளைஞர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றினார். காலியில் சர்வமதத் தலைவர்கள் குழுவையும் அவர் சந்தித்தார். மாலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனான சந்திப்பு இடம்பெற்றது. இலங்கையில் நீண்ட காலமாக நீடித்த யுத்தத்தில் இருந்து மீள்வதற்கு கால அவகாசம் தேவை என்று ஐ.நா செயலரிடம் தான் கேட்டுக் கொண்டதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐ.நா செயலர் இலங்கையில் நல்லிணக்கப் பொறிமுறையை ஏற்படுத்துவதற்கான கால வரையறை எதனையும் வழங்கவில்லை என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார். அத்துடன் கடந்த 2009ம் ஆண்டு இலங்கை வந்திருந்த பான் கீ மூன் கண்ட இலங்கைக்கும் தற்போதைய பயணத்தின் போது இருக்கின்ற இலங்கைக்கும் தெளிவான வித்தியாசம் இருப்பதாகவும் கூறிய ஜனாதிபதி, இந்த நிலமைகளை பான் கீ மூன் பாராட்டிப் பேசியதாகவும் தெரிவித்தார்.

அன்றைய தினம், பான் கீ மூனின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பௌத்த பிக்குமார் தலைமையிலான குழுவினர் கொழும்பு பௌத்தாலோக மாவத்தையில் உள்ள ஐ.நா அலுவலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர். ஐ.நாவின் செயற்பாடுகளைக் கண்டித்த வாசகங்களைக் கொண்ட பதாதைகளைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்பகுதியில் கலகம் அடக்கும் பொலிஸாரும், விசேட அதிரடிப்படையினரும் குவிக்கப்பட்டிருந்தனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் ஐ.நா அலுவலகத்துக்குள் நுழையாமல் வீதித் தடுப்பும் போடப்பட்டிருந்தது. ஆர்ப்பாட்டக் காரர்களின் பிரதிநிதிகள் சார்பில் அறிக்கை கையளிக்கப்பட்டது. மஹிந்த ஆதரவு அணியினரும் ஐ.நா அலுவலகத்தில் அறிக்கையொன்றைக் கையளித்திருந்தனர்.

பின்னர், 02ம் திகதி அவர் வடக்கில் யாழ்ப்பாணத்திற்கு பயணம் செய்தார். முதலில் வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரேயை அவரது அலுவலகத்தில் சந்தித்தார். அடுத்ததாக, யாழ். பொது நூலகத்தில் வைத்துத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளையும் வடமாகாண முதலமைச்சரையும் தனித்தனியாக பான் கீ மூன் சந்தித்துக் கலந்துரையாடினார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பாக அந்தக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன், எம்.ஏ. சுமந்திரன் மற்றும் சுரேஸ் பிரேமசந்திரன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இவ்வேளையில், அங்கு தமிழ் மக்களின் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றும் நடைபெற்றது. தெற்கில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் ஐ.நா செயலரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாக அமைந்திருந்தது. ஆனால், யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற போராட்டம், ஐ.நா செயலரின் கவனத்தை தம் பக்கம் ஈர்ப்பதற்காகவே நடத்தப்பட்டது. காணாமல் போனவர்களின் உறவினர்கள், தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள், மற்றும், யாழ்ப்பாணத்தில் இன்னமும் விடுவிக்கப்படாத காணிகளின் உரிமையாளர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். ஐ.நா செயலாளர் தங்களின் பிரச்சினைகள் குறித்து நேரில் வந்து கேட்டறிவார் என ஆர்ப்பாட்டக்காரர்கள் எதிர்பார்த்த போதிலும் அவ்வாறு நடைபெறவில்லை. இது அவர்களுக்கு விசனத்தை ஏற்படுத்தியிருந்தது.

ஐ.நா செயலாளருடன் பேச்சு நடத்திவிட்டு, வெளியே வந்த சம்பந்தன், சுமந்திரன் இருவரும் அங்கிருந்த ஊடகவியலாளர்களிடம், கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்துக் கருத்துக் கூறிக்கொண்டிருந்த வேளையில் அவர்கள் இருவருக்கும் எதிராக ஆர்ப்பாட்டக்காரர்கள் கோசமிட்டவாறு இருந்தனர். அதன் காரணமாக, சம்பந்தன், சுமந்திரன் இருவரும் கூட ஆர்ப்பாட்டம் செய்தவர்களிடம் உரையாடாமலேயே சென்று விட்டனர்.

வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையிலான வட மாகாணசபை உறுப்பினர்கள் அடங்கிய குழுவினருடன் நடைபெற்ற சந்திப்பின் பின்னர், முதலமைச்சர் கவனயீர்ப்பு போராட்டம் செய்த மக்களிடம் சென்று நடைபெற்ற சந்திப்பு குறித்து விளக்கமளித்தார். அவர்கள் கேட்ட கேள்விகளுக்கும் அவர் பதிலளித்தார்.

பின்னர், ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த முதலமைச்சர், தன்னை ஐ.நா செயலர் சந்தித்துக் கலந்துரையாடியமை குறைவான நேரமே எனவும், இது பற்றித் தனக்கு முன்கூட்டியே தெரிந்திருந்ததால், எழுத்து வடிவில் தயாரித்து வைத்திருந்தவற்றை அவரிடம் கையளித்ததாகவும், அதில் தற்போது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், ஐ.நா. செயலரிடம் பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்புகள் குறித்தும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பின்னர், ஐ.நா செயலாளர் வலிகாமம் இடைத்தங்கல் முகாமிற்கு பயணம் ஒன்றையும் மேற்கொண்டிருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இச்சந்திப்புக்களை நிறைவு செய்த பின்னர், இறுதி நிகழ்வாக, ஐ.நா செயலாளர் பான் கீ மூன் கொழும்பில் ஊடகவியலாளர்கள் சந்திப்பினையும் நடத்தினார்.

**- விகிர்தன் -**

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் யுத்தக் குற்றச்சாட்டுக்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வசேத்திற்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைய இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் விசாரணைப் பொறிமுறையானது, சர்வதேச தரத்திற்கு அமைவானதாக இருக்க வேண்டும் என, அவர் அச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தினால் அமைக்கப்படவுள்ள விசாரணைப் பொறிமுறையானது உள்ளகப் பொறிமுறையாக அமைய வேண்டும் என ஒரு தரப்பினரும், சர்வதேச பங்களிப்புடனான கலப்புப் பொறிமுறையாக அமைய வேண்டும் என ஒரு தரப்பினரும், முழுமையாக சர்வதேச விசாரணையாளர்களைக் கொண்ட விசாரணைப் பொறிமுறையாக அமைய வேண்டும் என வேறு ஒரு தரப்பினரும் கோரி வரும் நிலையில், இந்த விசாரணை பொறிமுறையானது எவ்வாறானதாக அமைய வேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்கள் என்று ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அவர், இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் விசாரணைப் பொறிமுறை உள்நாட்டு பொறிமுறையாகவோ, வெளிநாட்டு பொறிமுறையாகவோ எவ்வாறு இருப்பினும் அது சர்வதேச தரத்திலான ஒரு விசாரணைப் பொறிமுறையாக இருக்க வேண்டும். இந்த விசாரணைப்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்


CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE - TEL : 416.289.7514 / OWNER SAM - CELL: 416.732.9383
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் தற்போதைய நிலவரம்

2016 பெப்ரவரி 15 விளம்பரம் இதழில் இருந்து அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முறை நான்கு பிரிவுகளை அடக்கியது எனவும் அவையாவன:

1. Prenomination Phase - ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்ய முந்திய காலப்பகுதியாகும்.
2. National Conventions Phase - தேசிய மாநாடு இது ஜனாதிபதி மற்றும் உப ஜனாதிபதியை வேட்பாளரைக் கட்சிகள் தெரிவு செய்யும் மாநாடு. (ஜுலை 2016)
3. General Election Phase - தேர்தல் பிரச்சாரமும் பொதுத்தேர்தலும் (நொவம்பர் 08, 2016 வரை)
4. Electoral College Phase - ஜனாதிபதி மற்றும் உபஜனாதிபதியை உத்தியோக பூர்வமாக தெரிவு செய்து அறிவிக்கும் காலம் (நொவம்பர் 08, 2016இல் இருந்து ஜனவரி 20, 2017 வரை)

எனவும் அவை நான்கையும் விரிவாகப் பார்த்தோம். 2016 ஏப்பிரல் 15 விளம்பரம் இதழில் இருந்து அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் தற்போதைய நிலவரம் பற்றிப் பார்த்து வருகிறோம். இரண்டு கட்சிகளின தும் தேசிய மாநாடுகள் முடிவடைந்து ஜனாதிபதி மற்றும் உபஜனாதிபதி வேட்பாளர்கள் தெரிவும் முடிவடைந்தவுடன் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் முதல் இரண்டு பிரிவுகளும் முடிவடைந்து விட்டன. தற்போது மூன்றாவது பிரிவான தேர்தல் பிரசாரமும் பொதுத்தேர்தலும் நடைபெறுகிறது. இம்மூன்றாவது பிரிவு எதிர்வரும் நொவம்பர் 08, 2016 இல் நடை-பெற இருக்கும் பொதுத் தேர்தல் வரை தொடரும்.

**முக்கிய நான்கு ஜனாதிபதி வேட்பாளர்களும் பின்வருமாறு**

ஜனநாயக்கட்சி - Hillary Clinton
குடியரசுக்கட்சி - Donald Trump
Libertarian கட்சி - Gary Johnson
பசுமைக்கட்சி - Jill Stein

CBC செப்ரெம்பர் 07 ஆம் திகதியின் கருத்துக்கணிப்பின் படி அமெரிக்க மக்களில் வாக்களிக்கத் தகுதி உள்ளவர் களில்
45.1% ஆனவர்கள் Hillary Clinton ஐ ஆதரிக்கிறார்கள்
42.2% ஆனவர்கள் Donald Trump ஐ ஆதரிக்கிறார்கள்
12.7% ஆனவர்கள் ஏனைய கட்சி வேட்பாளர்களை ஆதரிக்கிறார்கள்

கடந்த விளம்பரம் இதழ் வெளிவரும்போது நாடுதழுவிய வாக்குகளில் 4.9% அதிகப் படியான வாக்குகளைப் பெற்றிருந்த Hillary தற்போது 2.9% அதிகப்படியான வாக்குகளையே பெற்றுள்ளார்.

Hillary இன் இந்த 2.9% அதிகப்படியான வாக்குகளை முறியடித்து Donald ஜனாதிபதியாக வரக்கூடிய சாத்திய கூறுகள் உள்ளதாக Donald இன் ஆதரவாளர்கள் கூறிவருகிறார்கள்.



ஆனால் இந்த நாடுதழுவிய வாக்கெடுப்புக் களின் வீதம் ஜனாதிபதியைத் தெரிவு செய்வது இல்லை. மாநிலங்களில் இருந்து தெரிவு செய்யப்படும் தெரிவாளர்களே ஜனாதிபதியைத் தெரிவு செய்கிறார்கள். இதனால் மாநிலங்களில் இருந்து எவ்வாறு



தெரிவாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என Hillary இற்கும் Donald இற்கும் மாநிலவாரியாக கிடைத்திருக்கும் கருத்துக் கணிப்பை வைத்து CBC செய்தி நிறுவனம் செப்ரெம்பர் 07 ஆம் திகதி வெளியிட்ட கருத்துக்கணிப்பைப் பார்ப்போம்.

ஜனாதிபதியைத் தெரிவு செய்ய 270 தெரிவாளர்களது ஆதரவு தேவை. Hillary இற்கு நிச்சயமாக 187 தெரிவாளர்களது ஆதரவு கிடைக்கும். மேலும் 142 தெரிவாளர்கள் அவர்சார்பாக தெரிவு செய்யக்கூடிய விதமாக மற்றைய மாநிலங்களில் அவர் முன்னணியில் நிற்கிறார். அதாவது Hillary இற்கு 329 தெரிவாளர்களது ஆதரவு கிடைக்ககூடிய நிலையில் தற்போது இருக்கிறார்.


Donald இற்கு நிச்சயமாக 139 தெரிவாளர்களது ஆதரவு கிடைக்கும். மேலும் 70 தெரிவாளர்கள் அவர் சார்பாக தெரிவு செய்யக்கூடிய விதமாக மற்றைய மாநிலங்களில் அவர் முன்னணியில் நிற்கிறார். அதாவது Donald இற்கு 209 தெரிவாளர்களது ஆதரவு கிடைக்க கூடிய நிலையில் தற்போது இருக்கிறார். இதனால் Hillary ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவது தவிர்க்க முடியாதது என Hillary இன் ஆதரவாளர்கள் கூறி வருகிறார்கள்.

ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு இடையே யான முதலாவது விவாதம் செப்ரெம்பர் 26, 2016 இல் Hempstead நியூயோர்க்கில் நடைபெற உள்ளது. இதில் மக்களின் கருத்துக்கணிப்பில் குறைந்தது 15% ஆதரவை பெற்ற வேட்பாளர்கள் மட்டுமே பங்கு பற்ற முடியும்.

இதனால் தற்போது 9.6% மக்களின் ஆதரவைப் பெற்று மூன்றாவதாக இருக்கும் Libertarian கட்சி வேட்பாளரான Gary Johnson தனது பிரசாரங்களைத் தீவிரப் படுத்தியுள்ளார். அவரது தற்போதைய நோக்கம் 15% இற்கு கூடிய மக்களின் ஆதரவைப் பெற்று தானும் ஒருவராக ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு இடையே நடைபெறும் விவாதத்தில் பங்கு பற்றுவது ஆகும். இவ்வாறு விவாதத்தில் பங்கு பற்றினால்தான் அவரது செல்வாக்கு மக்களிடையே அதிகரிக்கும். அல்லா விட்டால் விவாதத்திற்குப் பின்னர் விவாதத்தில் பங்கு பற்றாத ஜனாதிபதி வேட்பாளர்களுடைய ஆதரவு குறையத் தொடங்கிவிடும். Gary Johnson சார்பாக சுயேட்சைக்குழு ஒன்று தமது செலவில் $1 மில்லியன் பெறுமதியான விளம்பரங்களை வெளியிட்டு வருகிறது.

தற்போது நான்காவது இடத்தில் இருக்கும் ஜனாதிபதி வேட்பாளரான பசுமைக் கட்சியைச் சேர்ந்த Jill Stein இற்கு இந்த விவாதத்தில் பங்குபற்ற கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை.

இந்த செப்ரெம்பர் 26இல் நடைபெறும் முதலாவது ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு இடையேயான விவாதத்தை தொடர்ந்து மேலும் இரண்டு விவாதங்கள் ஒக்ரோபரில் நடைபெற உள்ளன.



சிவ ஞானநாயகன்
vlambaram@sympatico.ca

BUY, SELL or LEASE
Dinesh Jeganathan
Sales Representative



Cell: 647-895-3466
Email: jdinesh@live.ca
Office: 416.298.3200
Fax: 416.298.3440
HomeLife Higher Standards
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6
*each office independently owned and operated
**Not intended to solicit Buyers/Sellers under representation agreement.




- ஆதித்தன் -

# வடமாகாணக் கல்வி வீழ்ச்சிக்கும், சீரழிவுகளுக்கும் யார் பொறுப்பு?

தற்போது வடக்கில் கவலை தரும் விடயங்களில் ஒன்றாக மாணவர்களின் கல்வி நிலை உள்ளது. கல்வியில் இன்று ஏற்பட்டுள்ள வீழ்ச்சிக்கு சமூகத்தின் பொறுப்பின்மை, மாணவர்களிடையே நிலவும் சீரழிவுக் கலாசாரம், மாணவர்களின் பாதுகாப்பு வரை பல்வேறான பிரச்சினைகள் காணப்படுகின்றன.

வன்னியில் மாணவர்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திக் கொள்வது சமீப காலமாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. இது எதிர்காலச் சந்ததியின ருக்கு மோசமான பாதிப்பாகவே அமையும்.

இந்த நிலைமைகளுக்கு யார் பொறுப்பாளி கள்? தவறு யாரிடம் இருக்கின்றது? என்றெல்லாம் ஆராயும்போது, அனைத்துத் தரப்பினரிடமும் பொறுப்பின்மை காணப்படு கின்றது என்றே கூற வேண்டியுள்ளது. குறிப்பாக, வட மாகாண கல்வி அமைச்சிலிருந்து, பெற்றோர் மற்றும், பாடசாலைகளின் நிர்வாகம் வரையிலும் பொறுப்பின்மை உள்ளது. அர்ப்பணிப்பு உணர்வு என்பது இல்லாமலேயே உள்ளது.

வட மாகாண அமைச்சுக்களுக்கு மத்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிதிகள் சரியான முறையில் பயன்படுத்தப்படாமல் திரும்பிப் போகின்றன என்கின்ற குற்றச் சாட்டு கடந்த காலங்களில் பல தடவை முன்வைக்கப்பட்டுள்ளது. வடமாகாண கல்வி அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டுள்ள இவ்வருடத் திற்கான நிதியில் இதுவரையிலும் குறைந்த அளவான நிதியே செலவிடப்பட்டுள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்த யூலை மாதம் வரையிலான ஏழு மாதங்களிலும் 18 வீதமான நிதியே வடக்கின் கல்வி அமைச்சினால் செலவி டப்பட்டுள்ளதாகவும், மிகுதியான ஐந்து மாதங்களுக்குள் மீதமுள்ள நிதியினை முழுவதுமாகப் பயன்படுத்த முடியாது போகும் என்றும், அதனால் பெருந்தொகை நிதி திரும்பிச் செல்லும் நிலைமையே



ஏற்படும் என்றும் கூறப்படுகின்றது. ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ள இச் செய்திக்கு வட மாகாண கல்வி அமைச்சு எவ்விதமான பதிலையும் இதுவரை வழங்காத காரணத்தால் இத்தகவல் உண்மையாகத்தான் இருக்கும் என்றே கருதப்படுகின்றது.

வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட கிளி- நொச்சி, முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகள் மிகுந்த வளப் பற்றாக் குறைகளுடனேயே இயங்குகின்றன. கட்ட டங்கள் பற்றாக்குறை, ஆசிரியர்கள் பற்றாக்குறை மற்றும் பல வசதியின்மைகள் காணப்படுகின்றன. சில கிராமப்புறப் பாடசலைகளில் இன்றும் மரநிழல்களில் வைத்து மாணவர்கள் கற்பிக்கப்படுகின்றமை யினை அவதானிக்க முடிகின்றது. நிலைமை இவ்வாறிருக்கும் போது, வருகின்ற நிதி பயன்படுத்தாமல் திரும்பிச் செல்கின்றதென் றால் அதற்காக பொறுப்பை வட மாகாண கல்வி அமைச்சே ஏற்க வேண்டும்.

வடக்கிலுள்ள பாடசாலைகள் தோறும் உள்ள குறைபாடுகள், பற்றாக்குறைகள் குறித்த ஆய்வுகளையும், தேவை மதிப்பீடு களையும் மேற்கொண்டு, அவற்றை சீரமைப்பதற்கு துரிதமான செயற்பாடு இன்றியமையாதது. அத்துடன் அர்ப்பணிப்பு உணர்வும் இதற்கு அவசியமானது. பதவி கள் அலங்காரத்திற்கானதல்ல என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் குறைபாடுகளற்ற வசதியான பாடசாலைகள் இருந்தும் - அவற்றில் கல்வி கற்கின்ற மாணவர்கள் பலர் வசதியான குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தும் - பரீட்சை முடிவுகளில் வீழ்ச்சி காணப்படுகின்றதெனில் அதற்கான காரணத்தை ஆராய வேண்டும். பணமும், வசதிகளும் கூட மாணவர்களை திசை திருப்பும் என்பதற்கு யாழ்ப்பாணத் தின் நிலைமைகள் உதாரணம்.

யாழ்ப்பாணத்தில் மாணவர்கள் குடிப் பழக்கத்திற்கும், வேறு போதைப் பழக்கங்க ளுக்கும் ஆளாகின்றனர். பொழுதுபோக்கு சாதனங்களில் முற்றுமுழுதாக மூழ்கிக் கிடக்கும் இளையோரை யாழ்ப்பாணத்தில் அதிகம் காணலாம். இணைய வசதிகளுடன் கூடிய நவீன கைத்தொலைபேசிகள் கை களில் இல்லாத இளைஞர்களை யாழ்ப்பா ணத்தில் காணவே முடியாது. இந்த நவீன சாதனங்களில் உள்ள நன்மைகளிலும் பார்க்க தீமைகளே அவர்களை ஆக்கிரமிக் கின்றன.

இவ்வாறான செயற்பாடுகளால் அவர்களுக்கு கற்றலில் கவனத்தைச் செலுத்த முடியாமல் போகின்றது. பெற்றோராலும் தங்கள் பிள்ளைகளின் பழக்கவழக்கங்களை கட்டுப் படுத்த முடியாத நிலைமை காணப்படு கின்றது. யாழ்ப்பாணத்திலுள்ள பிரதான பாடசாலைக- ளின் மாணவர்கள் வாள்வெட்டு சம்பவங்களில் ஈடுபட்டமையும், அதுவும் படித்தவர்கள் - சமூகத்தில் அந்தஸ்துடன் இருப்பவர்களின் பிள்ளைகள் இச்செயல் களில் ஈடுபட்டதையும் அவதானிக்க முடிகின்றது.

இவர்களை பெற்றோரும், பாடசாலை நிர்வாகங்களும் கட்டுப்படுத்த முடியாத நிலையில், சட்டம் மற்றும் பாதுகாப்பு கட்டமைப்புகள் இவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கும் நிலை தோன்றி யுள்ளது. குற்றச் செயல்களில் ஈடுபடுகின்ற வர்கள் மாணவர்களாக இருந்தாலும் எவ்வித இரக்கம், பாரபட்சமின்றி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் கூறுகின்றார். அவர் அவ்வாறு கூறுவதோடு மட்டும் நிறுத்திக்கொள்ளாமல் நடவடிக்கை களையும் மேற்கொண்டு வருகின்றார்.

இன்னுமொரு புறம் - வீடுகளை விடவும் பாடசாலைகளே பிள்ளைகளுக்குப் பாதுகாப்பான இடமாக இருந்த காலங்கள் போய், இன்று பாடசாலைகளில் பாதுகாப் பற்ற சூழ்நிலை ஏற்பட்டு வருகின்றமை யினையும் இங்கு குறிப்பிட வேண்டும். பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்களை துஷ்பிரயோகம் செய்ததான செய்திகள் தற்போது அதிகம் ஊடகங்க ளில் வெளிவருகின்றன. அவ்வாறான குற்றங்களில் ஈடுபடுகின்றவர்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்படுவ தோடு, அரசாங்கம் அவர்களை பணி நீக்கமும் செய்ய வேண்டும். அவ்வாறு சிலருக்கு தண்டனைகள் வழங்கப்பட்டா லேயே ஏனையவர்கள் அவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுவதைத் தடுக்க முடியும்.

வன்னியில் உள்ள மாணவர்களின் நிலை வித்தியாசமானதாக காணப்படுகின்றது. அவர்கள் வறுமை காரணமாகவே கல்வியில் பின்னடைவுகளை எதிர்கொள்கின்றனர். வீட்டின் வறுமை காரணமாக அவர்கள் பாடசாலைக் கல்வியை பாதியிலேயே இடை நிறுத்தி விட்டு தொழில்களுக்கு செல்கின்ற னர். படிக்க விருப்பமுள்ள பிள்ளைகளை பெற்றோர்களே இடைநிறுத்தி விட்டு அவர்களை கடைகளிலும் வேறு இடங்களிலும் வேலைக்கு அனுப்புகின்றனர்.

இதனைத் தடுக்கவும் இன்று சட்ட நடவடிக்கையே நடைமுறைக்கு வந்துள்ளது. உதாரணமாக, கிளிநொச்சியில், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், கிளிநொச்சி மாவட்ட நீதிபதி, பொலிஸார் ஆகியோர் இணைந்து, பாடசாலை செல்லாத மாணவர்களை கண்டறிந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித் துள்ளனர். பிள்ளைகளை பாடசாலை களுக்கு அனுப்பாத பெற்றோர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அண்மையில் பாடசாலைக்கு பிள்ளையை அனுப்பாத பெற்றோரிடம் சென்று விளக்கம் கேட்டபோது, தனது பிள்ளையை பாடசாலைக்கு அனுப்புவதும் அனுப்பாமல் விடுவதும் தங்கள் உரிமை என வாதிட்ட ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கூண்டில் அடைக்கப்பட்டார்.

கருத்தரங்குகள் மூலம் விழிப்புணர்வு அறிவூட்டல்களை மேற்கொண்ட காலங்கள் போய், இன்று சட்ட நடவடிக்கைகள் மூலம் சமூகத்தைத் திருத்த வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளதென்பதற்கு இவை உதாரணங்கள். யாழ்ப்பாண மாவட்ட நிலைமைக்கும், வன்னி மாவட்டங்களின் நிலைமைக்குமிடையே மாறுபட்ட சூழ்நிலை கள் காணப்பட்டாலும் இரு தரப்புகளையும் சட்ட நடவடிக்கைகள் மூலமாகவே நெறிப்படுத்த வேண்டியுள்ளது.

இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மருத்துவம் மற்றும், விஞ்ஞான பீடங்களுக்கு தமிழ் மாணவர்கள் குறைவாக

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

விளம்பரம் VLAMBARAM™
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
பத்திரிகை முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
தட்டச்சு: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: செல்வி ரஞ்சன், தாரணி இந்திரராஜ்
பதிப்பு: Canyon Press Inc.
Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளி யாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர் கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் ப்ப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமை யாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

# Homes, Condos, Business, Land, Farms, Rural Homes...!

Port Union And Lawson



1/2 Acre 75' X 295' Ravine Home

Concession Rd 5 Rd /Beaverton



Vacant Land, 5 Acres 225k

Whitby./Taunton




Ramara/ Rural Ramara



Vacant Land, 74 Acres 375k

Sheppard Ave E & Hwy404




Investment with Tenant/ or Vacant

Kennedy/Sheppard



Basement apt


3 bm 2 wsrm 60 ft x 125 ft

Oshawa/ Taunton



Luxury Home 629k

Kennedy/ Kingston Rd




STORE PLUS APT

Stouffville

768k




Detached home with Walkout Basement



## Restaurant For Sale In Stouffville

Opportunity Knocks! Be Your Own Boss!! Fantastic Location! Established Clientele. Vipei Bistro( Rated High Score) , Name Negotiable, Has Become The Hub For Local And Out Of Town Patrons. Offering Great Atmosphere With A Blend Of Great Food And Excellent Service!! Recent Renovations Include A Newer Bar, Newer Furniture, Newer Central Air And Furnace!

# 0.5% Listing commission*

## Pat Pushpakanthan **Hall of Famer**

Real Estate Broker

Our MLS listing include:

- Free Professional Photography
- Free Professional virtual tour
- Free custom website of your home
- Free Home Staging
- Free Feature Sheets
- Free UTube Video
- Free Online Marketing............. , Open house and more..

**416-894-1187**

**PAT WILL BEAT ANY DEAL*!!**

*To buy Home, New Condos, commercial, Farms, Lands..*

*Call Me For Free service!*



Century 21 AFFILIATE REALTY INC BROKERAGE*

OFF: 416-290 1200

nhome2025@gmail.com

**Profit from 15 years of Real estate Success!**

*From , valid only upto june 15/16, ^Not intended to solicit existing buyers and sellers, under contract * some conditions apply

# ஒன்ராரியோ மாகாண நாடாளுமன்ற இடைத்தேர்தல் முடிவு




ஒன்ராரியோ மாகாண நாடாளுமன்ற இடைத்தேர்தலில் பழமைவாதக்கட்சியைச் சேர்ந்த Raymond Cho 2,429 அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்றார். இத்தேர்தலில் லிபரல்கட்சியை சேர்ந்த Piragal Thiru 7,264 வாக்குளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் பிதிய ஜனநாயகக்கட்சியைச் சேர்ந்த Neethan Shan 6,883 வாக்குகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

| வேட்பாளர் கட்சி | வாக்கு எண்ணிக்கை | வாக்கு வீதம் |
|---|---|---|
| Raymond Cho - பழமைவாதக்கட்சி | 9,693 | 38.58% |
| Priyan De Silva - பசுமைக்கட்சி | 217 | 0286% |
| Ania Krosinska - ரில்லியம் கட்சி | 36 | 0.14% |
| Dwight McLean - மக்கள் அரசியல் கட்சி | 56 | 0.22% |
| Neethan Shan - புதிய ஜனநாயகக்கட்சி | 6,883 | 27.40% |
| Wayne Simmons - சுதந்திரக்கட்சி | 76 | 0.30% |
| Allen Small - விடுதலைக்கட்சி | 146 | 0.58% |
| Piragal Thiru - லிபரல் கட்சி | 7,264 | 28.91% |
| John Turmel - பிச்சைக்காரன் கட்சி | 37 | 0.15% |
| Queenie Yu - சுயேட்சை வேட்பாளர் | 582 | 2.32% |
| Above Znoneofthe-மேற்கூறிய ஒன்றும் இல்லைக் கட்சி | 135 | 0.54% |

# ஐ.நா செயலரின்..

06ஆம் பக்கத்தொடர்ச்சி

பொறிமுறையானது மக்களின் அபிமானத் தைப் பெறுவதுடன் மக்களுக்கு நீதியையும் நியாத்தினையும் பெற்றுக் கொடுப்பதாக அமைய வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இதில் அவர் 'சர்வதேச தரம்' என்பதை அழுத்திக் குறிப்பிட்டாரே தவிர சர்வதேச பங்களிப்பு, சர்வதேச நீதியாளர்களின் தலையீடு என்பன பற்றி எதனையும் குறிப்பிட வில்லை என்பது இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கது.

மேலும், சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கு ஐ.நா தொடர்ந்தும் இலங்கைக்கு பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்புக்களை நல்கும் எனவும், இலங்கை தற்போது அவ்வாறான பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றது. சகல இனங்களும் புரிதலுடன் மக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒருவருக்கு ஒருவர் மன்னிப்பு வழங்கவேண்டும். இதன் மூலம் நிலையான சமதானத்தையும் நல்லிணக்கத்தையும் அடையும் முடியும் என்றும் அவர் கூறினார்.

போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச பொறிமுறையூடாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தமிழ் மக்கள் தரப்பில் குரலெழுப்பப் படுகின்ற நிலையிலும், சர்வதேச தலையீடுகளுக்கு இடமில்லை என ஜனாதிபதியே கூறிவருகின்ற நிலையிலும் ஐ.நா. செயலர் பான் கீ மூன் அது தொடர்பில் முடிவான கருத்து எதனையும் வெளிப்படுத்தவில்லை.

ஆனால், ஐ.நா செயலர் தனது வாக்குமூலம் போன்று ஒரு விடயத்தை இலங்கையில் வைத்து தெரிவித்துள்ளார். "இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது, ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடு போதுமானதாக இருக்கவில்லை" என்பதுதான் அது. ஐக்கிய நாடுகள் அமைப்பு இலங்கையிடம் இருந்து பல பாடங்களை கற்றுக்கொண்டதாகவும் கூறியுள்ளதும் முக்கியமானதாகும். எனினும், அவரது இந்தக் கூற்றை 'காலம் கடந்த ஞானம்' என்பதாகவே தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

இலங்கை மட்டுமன்றி, ருவாண்டா, பொஸ்னியா போன்ற நாடுகளில் நடந்த யுத்தத்தின் போது, ஐக்கிய நாடுகள் அமைப்பின் தவறுதலால் பல மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார். எதிர்காலத்தில் இப்படி தவறுகள் இடம்பெறாமல், மனித



உயிர்களை காக்க அர்ப்பணிப்புடன் செயற்படப் போவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறெனில், இன்று சிரியா, ஈராக் உள்ளிட்ட சில நாடுகளில் பயங்கரவாதத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும் போர்களில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்படுகின்ற நிலையில் ஐ.நாவின் செயற்பாடு எவ்வாறுள்ளது? என்கின்ற கேள்வியும் இங்கு எழத்தான் செய்கின்றது.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் நல்லாட்சி அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் நல்லிணக்கம் சார்ந்த செயற்பாடுகளுக்கு, ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் பாராட்டுத் தெரிவித்துள்ளார் எனவும் அடுத்த வருடம், மார்ச் மாதம் வெளிவரவுள்ள ஜெனீவா அறிக்கையில் இதன் பலன் தெரியவரும் என அரசாங்கத் தரப்பில் தற்போது தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால், போர்க்குற்றம் தொடர்பிலான சர்வதேச விசாரணை குறித்த பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு ஐ.நா. செயலரின் இலங்கை வருகையின் பின்னர் மேலும் கலங்கலாகி விட்ட நிலையே ஏற்பட்டுள்ளது.

# வடமாகாண...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

உள்ள காரணத்தினாலேயே தென்பகுதி சிங்கள மாணவர்கள் வருகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக யாழ். பல்கலைக் கழக விஞ்ஞான பீடத்தில் மூன்றில் இரண்டு வீதமான மாணவர்கள் சிங்கள மாணவர்களே. வடக்கிலுள்ள மாணவர்கள் விஞ்ஞான பீடத்திற்குத் தெரிவாகாத நிலையில்தான் தென்னிலங்கை மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். குறைந்தளவான தமிழ் மாணவர்களை மட்டும் வைத்துக்கொண்டு ஒரு பீடத்தை நடத்துவது இயலாது. இந்த நிலையில், தெற்கிலிருந்து பெரும்பான்மை இன மாணவர்கள் ஏன் யாழ். பல்கலைக் கழகத்திற்கு வருகின்றார்கள் என்று யாரும் கேள்வி கேட்க முடியாது. நிலைமை இவ்வாறுதான் உள்ளது.

வன்னியில் - கிளிநொச்சி மாவட்டத்தில் தொழில்கல்வி நிறுவனங்கள் சில அமைக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் அனுசரணையில் வெளிநாடுகளின் நிதி யுதவியுடன் இயங்கும் இக்கல்வி நிறுவனங்கள் வன்னியில் போர் காரணமாக கல்வியை இடைநிறுத்திய மாணவர்களை இலக்கு வைத்தே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றில் தொழிற்கல்வியைத் தொடங்கும் மாணவர்கள் கட்டம் கட்டமாக பட்டம் பெறும் அளவிற்கு செல்ல முடியும். ஆனால், அவற்றிலும் இப்பகுதி களிலுள்ள இளைஞர் களும் பெற்றோரும் ஆர்வமற்றவர்களாகவே இருக்கின்றனர். ஆனால், தென்பகுதி மாணவர்கள் அங்கிருந்து வந்து இங்கு தங்கியிருந்து கல்வி பயில்கின்றனர். கிடைக் கின்ற வாய்ப்புகளைக் கூடப் பயன்படுத்த விரும்பாதவர்களாகவே இன்று தமிழர்கள் உள்ளனர்.



இன்றைய இந்த நிலைமைக்கு தமிழ் சமூகத்திலுள்ள அனைத்துத் தரப்பினருமே பொறுப்பேற்க வேண்டும்.



# வன்கூவர் வீட்டின் விலையில் இறக்கம்!

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 471**

வன்கூவர், ரொறொன்ரோ நகரங்கள் போட்டிக்குப் போட்டியாக விலையில் அதிகரிப்பு ஏற்பட்டு வந்தன. ஏறக்குறைய 20 வருடங்கள் இந்நிலைமை தொடர்ந்த போதிலும், குறிப்பாகவும் மிகவும் முக்கியமாகவும் கடந்த 3-4 வருடங்கள், எதிர்பாராத வகையில் விலையின் அதிகரிப்பு இருந்து வந்தது. இதனை விளம்பர வாசகர்கள் இலகுவாக புரிந்து கொண்டிருப்பீர்கள்.

வன்கூவர் மக்களின் தொடர்ச்சியான, நேர்த்தியான போராட்டங்களாலும், 2017 இன் இளவேனிற்காலத்தில் நடைபெற இருக்கும் மாகாண அரசின் தேர்தலினாலும் இன்றைய அரசு புதியதொரு வரியின் மூலம் வெளிநாட்டவர்களின் கொள்வனவிற்கு இறுக்கமான கடிவாளத்தைப் போட்டது. இந்தப் புதிய நிலமாற்றுவரி என அழைக்கும் வரி (Land Transfer Tax) 15% ஆகக் காணப்படுகின்றது.

அதாவது ஒரு மில்லியன் டொலரிற்கு வாங்கும் ஒரு வீட்டிற்கு மேலதிகமாக $150,000 நிலமாற்று வரியாகச் செலுத்த வேண்டிய நிலைமைக்கு வெளிநாட்டவர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். இந்த மேலதிக வரி புதிதாக வாங்கும் வெளிநாட்டவர்களிற்கு ஒரு தாக்கத்தை ஏற்படுத்திய போதிலும், அனேகமாக பொருளாதார ஆய்வாளர் இவ்வாறான வரியை எதிர்பார்த்திருக்கவில்லை என்பதனை அறியக்கூடியதாக உள்ளது. புதிய வரிக்கு பிறகு அதாவது ஓகஸ்ட் 2016 இல் வன்கூவரில் ஏற்பட்ட ஆதன வியாபாரத்தில் பெரிய வித்தியாசத்தைக் காணக்கூடியதாக உள்ளது. அதாவது 2015 ஓகஸ்ட் உடன் ஒப்பிடும்போது 2016 ஓகஸ்ட் மாதத்தில் 26% இறக்கம் ஏற்பட்டுள்ளது.



குறிப்பாகப் பெரும்பாக வன்கூவரில், தனி வீடுகளில் வியாபாரம் 44.6% இனால் இறக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் விலையிலும் இறக்கம் ஏற்பட்டுள்ளது. எனினும் புதிய வரியின் தாக்கத்தை உடனடியாக அறிய முடியாது. சிறிது காலம் எடுக்கலாம்.

இதனால் வாங்குபவர்கள், விற்பவர்கள் எதுவித முடிவும் எடுக்காமல் இருக்கிறார்கள். ஏற்கனவே நிதி நிறுவனங்களும், மத்திய அரசும் அடமானக்கடன் பெறுவதில் இறுக்கமான நிலைப்பாடுகளை ஏற்கனவே எடுத்துள்ளன. புதிய இறுக்கமான நிலைப்பாடுகளை எடுப்பதற்கு அரசு தன்னை தயாராக்கிக் கொண்டு வருவதாகவும் அறியப்படுகின்றது.

ரொறொன்ரோவின் சில வட்டாரங்களில் (உதாரணம் Ward 38) அதன் நகரசபை அங்கத்தவர் (Councillor) தமது வட்டார மக்களிடம் இந்தப் புதிய வரியைப் பற்றி அபிப்பிராயம் எடுக்கத் தொடங்கியுள்ளார்கள். மக்களின் நிலைப்பாட்டிற்கேற்ப நிலைமை மாறுபாடும். ரொறொன்ரொவில் இந்த வரி கொண்டு வரப்படுமா?


CUSTOM BUILD HOME

Build Your Personalized Dream Home

Starting From $139 / sq ft

Quality ! Price !! Peace of Mind !!!



உங்கள் கனவு இல்லத்தை நனவாக்குவதற்கு


அனுபவம் நிறைந்த, நாணயமான,

தரமான கட்டிட நிபுணர்கள்

Industrial Buildings from $75 / sq ft

TAMB CANADA (647) 877-8262 (TAMB)

# முழுமையான நிறைவான வாழ்க்கை என்றால் என்ன? அதனை எட்டிய மனிதரை அறிவதற்கான அளவுகோல் எது?



சத்குரு வாசுதேவ்

**சத்குரு:**

ஒரு சில செயல்களைச் செய்வதால் மட்டுமே உங்கள் வாழ்க்கை, முழுமையை எட்டிவிடாது. வாழ்வின் எல்லா நிலைகளிலும், "இது மட்டும் நடந்தால் என் வாழ்க்கை முழுமையடையும்" என்கிற எண்ணம் உங்களுக்குள் ஏற்பட்டிருக்கும். குழந்தையாக இருக்கும்போது, ஒரு பொம்மை கிடைத்தால் என் வாழ்க்கை நிறைவடையும் என்று நினைத்தீர்கள். அந்த பொம்மை கிடைத்தது. ஆனால் மூன்று நாட்களில், அதைக் குப்பைத் தொட்டியில் வீசிவிட்டீர்கள். உங்கள் வாழ்க்கை முழுமை அடையவில்லை. உங்கள் உள்தன்மை முழுமை அடைந்துவிட்டால், அங்கே செயல்களுக்கான அவசியம் இருக்காது. நீங்கள் பள்ளியில் படித்தபோது, தேர்வில் வெற்றி பெற்றுவிட்டால் வாழ்க்கை முழுமையடையும் என்று கருதினீர்கள். வெற்றி பெற்றீர்கள். ஆனால் எதுவும் நடக்கவில்லை. படித்து முடித்துவிட்டால் வாழ்க்கை முழுமையடையும் என்று நினைத்தீர்கள். படித்து முடித்தீர்கள். ஆனால், சொந்தக் காலில் நிற்காவிட்டால் இந்தக் கல்வியால் என்ன பயன் என்று கருதினீர்கள். வேலையும் கிடைத்தது. மூன்று மாதங்களுக்குப் பிறகு, கழுதை போல் உழைப்பதால் என்ன பயன் என்று எண்ணத் தொடங்கினீர்கள். உங்கள் மனதில் இருப்பவரைத் திருமணம் செய்து கொண்டால், வாழ்க்கை முழுமையடையும் என்று நினைத்தீர்கள், அதுவும் நடந்தது. அதற்குப் பிறகு என்ன நடந்தது என்று உங்களுக்கே தெரியும். கொஞ்சம் வயதானவர்களுக்கோ, தங்கள் மகளைத் திருமணம் செய்து கொடுத்துவிட்டால், வாழ்க்கை முழுமையடைந்துவிடும் என்ற எண்ணம். ஆனால் மகளைத் திருமணம் செய்து



கொடுத்ததும் தான் தொல்லைகள் ஆரம்பமாகின்றன. இது இப்படியே தொடர்கிறது. நீங்கள் என்ன செயல் செய்தாலும், வாழ்க்கை முழுமையடைவதில்லை. செயல்களால் வாழ்க்கை முழுமை பெறாது. உள்தன்மை முழுமைபெறும் போதுதான் வாழ்க்கை முழுமைபெறும். உங்கள் உள்தன்மை எல்லையில்லாததாக இருக்குமானால், உங்கள் வாழ்க்கையும் எல்லையில்லாததாக இருக்கும். நீங்கள் கண்மூடி அமர்ந்திருந்தாலும் சரி, விதம்விதமான செயல்களில் ஈடுபட்டாலும் சரி, வாழ்க்கை முழுமையானதாக இருக்கும். ஒரு மனிதன் தனக்குள் செயல்கள் செய்வதற்குத் தேவையில்லாத நிலையை அடைந்து, வெளிச் சூழலுக்குத் தேவையான செயல்களை மட்டுமே செய்து கொண்டிருந்தால், அந்த மனிதன் எல்லையில்லாத தன்மையை எட்டியிருப்பதாகக் கொள்ளலாம்.

தனக்காக, செயல் செய்ய எந்தத் தேவையும் இல்லாத ஒரு மனிதனை நாம் முழுமையான மனிதன் என்று சொல்லலாம். ஒன்றன்பின் ஒன்றாக நீங்கள் தொடர்ந்து செயல்களில் ஈடுபட்டு வருவது எதற்காக? முழுமை அடைவதற்காகத்தான் இல்லையா? நிறைய செயல்கள் செய்பவர்களிடம், ஏன் இவற்றையெல்லாம் செய்து கொண்டிருக் கிறீர்கள் என்று கேட்டால், "உணவு வேண்டும், மனைவி குழந்தைகளை யெல்லாம் யார் பார்த்துக் கொள்வது?" என்று பதில் சொல்வார்கள். அவர்களிடம், "உணவுக்காக ஏன் இதையெல்லாம் செய்கிறீர்கள்? ஆசிரமத்திற்கு வந்து விடுங்கள். உங்களுக்கும், உங்கள் மனைவி, குழந்தைகளுக்கும் நாங்கள் உணவு தருகிறோம். அங்கே வந்து அமைதியாக அமர்ந்திருங்கள் போதும்" என்று நாங்கள் சொன்னால், அவரால் அங்கு வந்து ஒருநாள்கூட உட்கார முடியாது. ஏன்? மூன்று மணி நேரங்கள் கூட உட்காரமாட்டார். "உங்கள் எல்லாத் தேவைகளையும் பார்த்துக் கொள்கிறோம். அமைதியாக இருங்கள்" என்றாலும் இருக்க முடிவதில்லை. ஏனெனில் உள்தன்மை நிறைவடைந்ததாக இல்லை. சில செயல்கள் மூலம் நிறைவை எட்ட முயல்கிறீர்கள். அந்தச் செயல்களில் நோக்கம் உணவோ, மற்ற வசதிகளோ இல்லை. முழுமைக்கான தேடலே அது. இது விழிப்புணர்வோடு நடந்தாலும், விழிப்புணர்வற்ற நிலையில் நடந்தாலும், அதன் நோக்கம் என்னவோ எல்லையின்மையைத் தொடுவது தான். இது மட்டும் நிச்சயம். உங்கள் உள்தன்மை முழுமை அடைந்துவிட்டால், அங்கே செயல்களுக்கான அவசியம் இருக்காது. வெளிச்சூழலுக்காக சில செயல்கள் செய்ய வேண்டியிருந்தாலும் அவற்றை ஆனந்தமாக செய்வீர்கள். தேவைப்படாத போது, வெறுமனே கண்மூடி அமர்ந்துவிடலாம்.

செயல்கடந்த நிலைக்கு மனிதன் வருவதே முழுமையடைவது என்று சொல்வதன் அர்த்தம், அன்றாடப் பணிகளை செய்ய வேண்டாம் என்பதல்ல. வெளிச்சூழலுக்கு வேண்டியிருந்தால் இருபத்தி நான்கு மணிநேரமும் பணி செய்யலாம். ஆனால் அவரது உள்தன்மைக்கு அது அவசியமில்லை. அவர் செயல்களுக்குக் கட்டுப்பட்டவரல்ல. செயல்கள் மூலம் அடையாளம் காணப்படுபவரும் அல்ல. செயல்கள் இல்லாதபோதும் அவர் தன்மை மாறாமலேயே இருக்கும்.


Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

## 4 day Inner Engineering Program

***led by an Isha teacher trained by Sadhguru in Scarborough and Mississauga from September 22nd to 25th***

***Program Venue***

***Princess Banquet***, 3330 Pharmacy Avenue, Scarborough (Toronto), ON M1W 3V8

***Park Inn by Radisson***, Toronto Airport West, 175 Derry Road East Mississauga (Toronto), ON L5T 2Z7

***Program schedule***

Program timings are as follows for each day:
Thursday Sept 22nd : 6:30PM - 9:45 PM
Friday Sept 23rd : 6:30PM - 9:45 PM
Saturday Sept 24th: 7:30AM - 7:00 PM
Sunday Sept 25th: 7:30AM - 7:00 PM
Contact Information

***Email: toronto@ishafoundation.org / Phone: 416 300 3010***
***Online registrations: www.innerengineering.com/total***




## YOGA - MEDITATION CLASSESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



***GTA Square Mall*** இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: ***Scarborough - Markham -*** செல்வ சோதி - ***416.289.2033***

## கனடா வாழ் துன்னாலை - கரவை மக்கள் மன்றம் நடத்தும் 14வது ஆண்டு ஞானதீபம் 2016 பல்சுவை கலை விழா

September 17, 2016 சனிக்கிழமை, மாலை 5:00 மணிக்கு
Middlefield Collegiate Institute (Highglen & Middlefield)
525 Highglen Ave., Markham, ON L3S 3L5 இல்
அமைந்துள்ள மண்டபத்தில் நடைபெற உள்ளது.

வேல் விவேகானந்தன் 416-418-0477 க. கமலநாதன் 416-291-6884

துன்னாலை–கரவை மக்கள் மன்றம், கனடா

# முதியோர் நிலை

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

நமது உடம்பு இரசம், இரத்தம், மாமிஷம், மேதஸ், அஸ்தி, மச்சை, சுக்கிலம் என்பவற்றால் ஆனது. இப்படியான உடம்பில் முத்தாது என்கின்ற வாத, பித்த, கப செயல்களும் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

இவை திறம்பட இயங்குவதற்கு கால, அர்த்த, கரும, மித்தியா யோகங்கள் முக்கியமாகும். அத்துடன் நாம் உண்ணும் உணவில் இரச குண வீரியங்கள் இரண்டறக் கலந்துள்ளன. 'இரசம்' எனக் குறிப்பிடும்போது அது சுவையைக் குறிக்கும். அவை இனிப்பு, புளிப்பு, கைப்பு, உறைப்பு, கார்ப்பு, துவர்ப்பு என்பனவாகும். இவை உடம்பில் சீதவீரியமாகவும், உஸ்ண வீரியமாகவும் செயலாற்றும். அதாவது எக்குணத்தால் எக்காரியம் செய்யப்படு கின்றதோ அக்குணமே வீரியமாகும்.

இந்த வீரியத் தன்மையினால் நமது உடல்நிலை இயங்கிக் கொண்டு இருக்கின்றது. எனவே நாம் எடுக்கும் அன்ன, ஆகாரங்கள் உடல் நிலைக்கு ஏற்ப அமைய வேண்டும். தவறின் உடல் நிலை பாதிக்கப்படும். முதியோர் நிலையைப் பார்ப்போம்.

பெரும்பாலும் முதியோர்களால் இயங்க முடியாமல் இருந்தாலும் ஒரே இடத்தில் இருக்க விருப்பம் இன்றி வெளியே போய் வர வேண்டும் என்ற எண்ணம் பெரும்பாலோருக்குண்டு.



முதுமை நிலை 35 வயதிலும் சிலருக்கு ஏற்படலாம். இவர்களை விட 80 வயதினை உடைய முதியோர் பலர் சோர்வின்றி துள்ளித் திரிபவர்களாகவும் இருக்கின்றனர். உடலாலும், மனதாலும் இளமையுள்ளவர் கள் போல் காட்சியளிப்பர்.

நாடாளுமன்றங்களில் அரசியல் வாதிகள் 70, 80 வயதினை உடையோர் சிலர் சுறுசுறுப்புடன் நடமாடிச் சேவைகள் செய்து வருகின்றார்கள். எனவே நாம் முதியவர்கள் தானே என புறந்தள்ளி வாழ நினைக்கக் கூடாது. ஒருவர் முதுமையடையும் போது அவரை இயலாதவர், நோய் உற்றவர் என புறந்தள்ள வேண்டாம். அந்நிலை நீண்ட வாழ்க்கைச் சக்கரத்தில் 'ஒரு கட்டம்' தான் என கருதிக் கொள்ள வேண்டும்.

முதுமை அடைவதினால் ஏற்படக்கூடிய சில பாதகமான நிலைகளைத் தடுக்கவோ தள்ளிப்போடவோ முடியும். கௌரவமான வாழ்க்கையையும் அடிப்படை வசதிகளையும், தேவைக்கு ஏற்ப மருத்துவ உதவி களையும் வயதானவர்களுக்கு சரியான தருணத்தில் எடுக்க வேண்டும் அல்லது கொடுக்க வேண்டும்.

உதாரணத்திற்கு ஒன்றைப் பார்ப்போம். வைத்திசாலைகளில் பெரும்பாலும் குழந்தைகளுக்கான மையம் - 'கிளினிக்', கர்ப்பிணிகளுக்கான மையம் - 'கிளினிக்' என இருப்பதை நாம் நன்கு அறிவோம். ஆனால் முதியோருக்கு அப்படியான 'கிளினிக்' எதுவும் இல்லை. இதனால் பெரும்பாலான முதியோர் பலமணி நேரம் தாமதித்துச் சிகிச்சை பெற வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். இவர்களின் உடல் நலம் எப்படி இருக்கும்? எல்லா வற்றையும் நோக்கும்போது முக்கியமாக இவர்களுக்கும் தனிப்பட்ட மருத்துவ மையம் 'கிளினிக்' தேவையாகும்.

எனவே பல முதியவர்களின் ஆதங்கம் தமது ஆரோக்கியம் பற்றியது தான். தாம் நீண்ட காலம் நலத்துடன் வாழ வேண்டும் என்ற விருப்பு எல்லோரிடமும் இருக்கத்தான் செய்யும். ஆனால் அவர்களின் சிந்தனை மேலும் நீளுகின்றது. நாம் நோய் வாய்பட்டு அல்லது விபத்தில் மாட்டுப்பட்டு படுக்கையில் கிடந்தால் அது குடும்பத்திற்கு கஸ்டம். மேலதிக வேலைப்பழு, பொருளாதாரச்சுமை என்பன ஏற்பட்டு விடுமே என அஞ்சுவதற்கும் இடமுண்டு. எனவே ஒரு முதியவர் மற்றவரில் தங்கியிருக்காது சுதந்திரமாக நீண்டகாலம் வாழமுடியுமாயின் அதுவே ஆரோக்கிய

தொடர்ச்சி 15ஆம் பக்கம்


பல்லுப் போனால் சொல்லு போச்சு

CAN YOU AFFORD YOUR DENTIST BILLS ???

WHY YOU NEED TO DO DENTAL, VISION & HEARING PLAN ???

Dental, Vision, Hearing Plan
3 in 1 Combined Coverages

- YEAR 1 : 60% Coverage, YEAR 2 : 70% Coverage, YEAR 3 : 80% Coverage, YEAR 4+ : 90% Coverage
- 10% household discount if two or more people live in same address
- Some coverages cover day one
- Client will qualify for UCT member benefits.

பல், கண், காது
மூன்று உறுப்புகளையும் காப்பதற்கான ஒரே காப்புறுதி



Nimal Subramaniam
Financial Advisor
Dir: 416 816 7994
Web: www.nimalInsurance.com
Email: neel900@hotmail.com

KABIS
KABIS & ASSOCIATES INC.
A Solution Company

UCT LaCapitale iA Financial Group

Life Insurance · Non-Medical Insurance · Critical Illness Insurance · Disability Insurance · Mortgage Insurance · Travel Insurance · Super Visa Medical Coverage · Drug and Dental Plan · TFSA · RESP · RRSP · LIRA · LIF

# இயற்கையின் இரகசியங்கள் (யாவருக்குமான அறிவியல்)

## வெளிச்சத்திற்கு வரும் வெளிச்சம் - சுவாரசியமான அறிவியற் தகவல்களைக் கொண்ட தொடர்


ஒளி அலையா, துகளா என்ற புதிருக்கான தீர்வினை அயன்ஸ்ரைன் எவ்விதம் தீர்த்திருப்பார் என்ற ஆவல் உங்களுக்குச் சென்ற தடவை ஏற்பட்டிருக்கும். தீர்வினைப் பாருங்கள்.

அயன்ஸ்ரைனின் சிந்தனை மிகவும் எளிமையாக இருந்தது. ஒளியானது அலை போலச் சில இடங்களில் தன்னைக் காட்டுகிறது, துணிக்கை போலச் சில இடங்களில் காட்டிக் கொள்ளுகிறது. இரண்டுமே சரியானவையாகத்தான் இருக்கின்றன. எனவே ஒளியானது, சூழலுக்கு ஏற்றவாறு தன் நிறத்தினைக் காட்டும் பச்சோந்தி போல, அலையாகவும், துணிக்கையாகவும் தன்நிலமைக்கு ஏற்ப காட்டிக் கொள்ளும் வல்லமை கொண்டதாக ஏன் இருக்கக் கூடாது எனத் தனக்குள் கேட்டுக் கொண்டவர், அது சரியானதுதான் என வெளியிலும் கொண்டு வந்தார். அதன்படி ஒளியானது இருமை இயல்புடையது என்கின்ற புதிய தத்துவம் உலகினருக்குக் கிடைத்தது. (அர்த்தநாரீஸ்வரர் நிலை நினைவிற்கு வருகின்றதா?) இதுவே குவாண்ரம் கொள்கையாக ஆனது. ஒளியின், துணிக்கையாகவும், அலையாகவும் செயற்படும் இயல்பைக் குவாண்டம் கருதுகோள் எனக் கூறினார்கள். இதுவே பின்னர் அணுவின் குவாண்ரம் கொள்கையாகி, உபஅணுத் துகள்களின் குவாண்டம் பொறிமுறைக்கும் வழிசமைத்துக் கொடுத்தது.

இனி, அயன்ஸ்ரைனின் குவாண்ரம் கருதுகோளினைச் சரியானதெனக் காட்ட வேண்டும். பிளாங்கின் குவாண்ரச் சமன்பாட்டைப் பாருங்கள். $E = hf$ இதில் பிளாங்கின் துகள் காவுகின்ற சக்தியின் அளவில் அதிர்வெண் காணப்படுகிறது. இந்த அதிர்வெண் அலைநீளத்துடன் தொடர்புடையது. எனவே ஒளியின் சக்தியின் அளவில், அதாவது குவாண்ராவில் அலையின் தன்மை காணப்பட வேண்டும். ஒளித் துணிக்கையில் எவ்விதம் அலைநீளம் காணப்படலாம்? எம்மட்டில் இதற்கான விளக்கத்தைப் பார்ப்போம். ஒளியானது சின்னச் சின்ன, தனித்தனி அலைத் துண்டுகளாகச் செல்கின்றது எனலாம். அதாவது ஒளியின் ஒவ்வொரு துண்டுகளும் தனித்தனி சிறிய அலைத் துண்டுகள் எனக் கருதலாம். அதாவது சின்னஞ் சிறிய ஒளித் துணிக்கைகள் ஒவ்வொன்றும் தம்முள் ஓர் அலைவடிவினைக் கொண்டுள்ளன எனக் கருதலாம். இந்த அலைத் துண்டான ஒளித் துகளானது தேவைக்கு ஏற்பத் தன்னை அலைபோலவும் துகள் போலவும் காட்டிக் கொள்கிறது. இந்த விளக்கமானது, ஒளியின் இருமைக் கொள்கையை ஏற்புடையதாக்குகின்றது அல்லவா.

சக்தியைக் காவிக் கொண்டு செல்கிற ஒளித்துகள்களை அயன்ஸ்ரைன் போட்டோன் (Photon) என்றார். போட்டோன்கள் சிறப்பான தன்மையைக் கொண்டவை. அவற்றிக்குத் திணிவு இல்லை. வெவ்வேறு நிறங்களுக்கு (கதிர்களுக்கு) வெவ்வேறு போட்டோன்கள் இருக்கும். ஒவ்வொரு நிறத்திற்குமான போட்டோன்கள் தத்தமது அளவான சக்தியையே எப்போதும் காவுகின்றன. இதனாற்றான் அவற்றினை வேறுபடுத்தி அறியக் கூடியதாக உள்ளது.

ஒளி, மின்காந்த அலையின் ஒரு சிறுகூறு என்பதனை முன்னரே கூறியிருந்தேன். எனவே, மின்காந்த அலைகள் எல்லாமும் ஒளியின் தன்மையைக் கொண்டிருக்க வேண்டும். அதன்படி, மின்காந்த அலைகள் எல்லாமுமே இருமை இயல்பினைக் காட்ட வேண்டும். அதாவது துணிக்கைகளாகவும், அலையாகவும் நடத்தைகளைக் காட்டக் கூடியவையாக இருக்க வேண்டும் என்பது வெளிப்படையாகின்றது. அதனால் போட்டோன் என்ற பதமும் எல்லா மின்காந்த அலைகளுக்குமே பொருத்தமானதுதான்.




சரி, உலக அறிவியலாளர்கள் கொண்டு வந்த வெளிச்சம் பற்றிய சங்கதிகளைத் தெரிந்து கொண்டோம். இயற்பியலில் பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்தது, ஒளி பற்றிய தெளிவான அறிவுதான். எல்லாவற்றிற்குமே தெளிவினைத் தந்தது இந்த வெளிச்சம்தான் என்பதனை இனித் தெரிந்து கொள்வீர்கள். வெளிச்சம் பற்றிய ஆய்வுகள் முற்றுப் பெறவில்லை. இன்னமும் தொடர்கின்றன. அழகான பல கருதுகோள்கள் புதிது புதிதாக வெளிவருகின்றன. எப்போது? யாரால் இன்னமும் வெளிச்சம் துலக்கமடையுமோ எதிர்காலம்தான் பதில் கூறும். ஏனிந்த ஆதங்கமெனக் கேட்கிறீர்களா?

வெளிச்சத்தின் ஈரியல்புத்தன்மையில் அதிக நம்பிக்கையில்லாத அறிவியலாளர்கள் பலர் இருக்கின்றார்கள். ஒளியெப்படி துகளாகவும், அலையாகவும் இருக்க முடியும்? ஏதாவது ஒன்றாகத்தான் இயற்கை அதனைத் தெரிந்திருக்கும் எனக் கூறுகின்றவர்கள் அவர்கள் ஒளியின் செலுத்துகைக்கான இன்னொரு கருத்தையும் முன்வைக்கிறார்கள். இப்போதுதானே ஒரு சிக்கலில் இருந்து தெளிவுற்றோம். அதற்குள் இன்னொரு சிக்கலா? இந்த விஞ்ஞானிகளுக்கு வேறு வேலையே இல்லையா? உண்மையில் ஒளியானது போட்டோன் என்கிற ஒரு துகளாக இருக்கமுடியாது. இரண்டு துகள்களின் பின்னலாக இருக்க வேண்டும் என்கிறார்கள். அடடா, சின்னஞ்சிறிய போட்டோனே இரண்டு இம்மிகளா என மூக்கில் கைவைக்கிறீர்களா? ஆம் அப்படித்தான் கூறுகின்றார்கள். அதனை ‘இரு துகள் கொள்கை’ எனவும் கூறுகின்றார்கள். அப்படிக் கூறித் தமது கருத்தை நியாயப்படுத்துபவர்களில் எம்மவரும் ஒருவர். முத்து சுரேஸ்குமார் என்கிற தமிழர் ஒளியின் இரு துகள் கருத்தில் உறுதியாக இருக்கின்றார். தனது கருத்துக்களை ‘ஒளி இயற்பியல்’ என்கிற தனது தமிழ் நூலிற் காட்டியுள்ளார். மிகவும் எளிய தமிழில், இலகு நடையில் உள்ள சிறிய புத்தகம். விலையும் அதிகமில்லை. தமிழர்களுக்காகவே எழுதப்பட்ட இந்தப் புத்தகத்தினை வாங்கி வாசித்துப் பாருங்கள், உங்களை வியப்பின் உச்சத்திற்கே கொண்டு செல்லும்.

சுரேஸ்குமாரின் கருத்துக்கள் வருங்காலங்களில் ஏற்கப்படக் கூடிய சாத்தியமும் உண்டு. ‘தவறாக இருந்தால் ஆயிரம் தவறுகளில் இதுவும் ஒன்றாக இருந்துவிட்டுப் போகட்டுமே’ எனக் கூறிக் கொண்டு, ஒளியானது அலையா? துகளா? என்ற கேள்வியில் எப்பக்கமும் சாயாது இருக்கும் இக்காலத்தில், தன்னளவிற் பதில் தேடி, தனது நிலைப்பாட்டினை அவர் கூறியிருக்கும் விதம் எவரையும் கவரக் கூடியது என்பதில் ஐயமில்லை.

ஒளியின் இரு-துகள் கருதுகோள் பற்றியும் சிறிது பார்ப்போம். அது கூட இரண்டு வகையில் அமைகின்றது. இரண்டு போட்டோன்கள் ஒன்றை ஒன்று சுற்றிய வண்ணமாக முன்னோக்கி இயங்குகின்றன. அதனாலேயே அங்கு ஒரு அலைப் பண்பும் தெரிகின்றது என்பது ஒரு கருத்து. இதற்கான விளக்கங்களையும் முன்வைத்திருக்கின்றார்கள். இன்னொன்று என்னவெனில் ஒருதுகள் முன்னேறிக் கொண்டிருக்க, மற்றைய துகள் முன்னேறிக் கொண்டிருக்கின்ற துகளைச் சுற்றிக் கொண்டு வருகின்றது. இவ்விரண்டினதும் சேர்க்கையே ஒளியின் செலுத்துகையாக வெளிப்படுகிறது எனக் கூறுகின்றது அக்கொள்கை.

> உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சோடி இயக்கங்கள் இயற்கையில் காணப்படும் சாதாரண நிகழ்வுதான். பல விண்மீன்கள் (கிட்டத்தட்ட 50%) சோடிகளாகத்தான் இருக்கின்றன. இவைபோலவேதான் இந்தச் சோடி இம்மிகளும் இருக்கின்றன எனக் கூறுபவர்கள், நுண்துகள்களுக்கான குவாண்ரம் பொறிமுறை, மின்புலங்கள், காந்தப் புலங்கள், முரண் துகள்கள், கோண உந்தம் போன்ற இயற்பியற் சமாச்சாரங்களின் உதவிகளுடன் தமது கொள்கைகளை உறுதிப்படுத்தப் பார்க்கிறார்கள். அவை சரிதானா என்பதை இருந்துதான் பார்க்க வேண்டும்.

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca




# The minimum wage is going up.

## Here's what you need to know:

| Minimum Wage Rate | Oct. 1, 2015 to Sept. 30, 2016 | Oct. 1, 2016 to Sept. 30, 2017 |
|---|---|---|
| General Minimum Wage: | $11.25 per hour | **$11.40** per hour |
| Student Minimum Wage: Students under the age of 18 who work 28 hours a week or less when school is in session, or work during a school break or summer holidays | $10.55 per hour | **$10.70** per hour |
| Liquor Servers Minimum Wage: | $9.80 per hour | **$9.90** per hour |
| Hunting and Fishing Guides Minimum Wage: Rate for working less than five consecutive hours in a day | $56.30 | **$56.95** |
| Hunting and Fishing Guides Minimum Wage: Rate for working five or more hours in a day whether or not the hours are consecutive | $112.60 | **$113.95** |
| Homeworkers Minimum Wage: Employees doing paid work in their own home for an employer | $12.40 per hour | **$12.55** per hour |

On October 1, 2016, the general minimum wage will increase to $11.40, from the current rate of $11.25. The minimum wage is reviewed on a yearly basis. The rates are published by April 1st and come into effect on October 1st of the same year.

**Find out more about minimum wage:**
**1-800-531-5551 | ontario.ca/minimumwage**

Paid for by the Government of Ontario

Ontario

# முதியோர்...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

மான, சுறுசுறுப்பான முதுமை எனப் கொள்ளலாம். அவர்கள் சுதந்திரமாகவும் மனநிறைவோடும் இயங்க உதவியும் ஒத்தாசையும் இருக்க வேண்டும்.

முதியோர் நல்லநிலையில் வாழ்வதற்கு அவர்களின் குடும்பத்தவர் மதிப்பும் மரியாதையும் வழங்கி தேவையான உதவிகளையும் அவசியமான வசதிகளை யும் செய்தல் வேண்டும்.

முதியோர் சோர்ந்து விடாது இருக்க உடலாலும், மனதாலும் சுறுசுறுப்பாக இயங்கித் தன்னிச்சையாக நடக்க, குடும்பத் தில் உள்ளோர் ஒத்து வருதல் வேண்டும். ஆனால் அவர்களைக் கட்டுப்படுத்தினால் அவர்கள் சோர்ந்து விடுவர்.

முதியவர்கள் நன்கு போசாக்கான உணவு களை உண்ண வேண்டும். இடஞ்சல் இல்லாத ஆடைகளை அணியவேண்டும். வசதியான வாழ்விடமும், தேவையான மருந்து உதவிகளும் கிடைக்கக் கூடியதாக குடும்பத்தில் உள்ளோர் செய்தல் வேண்டும்.

ஒருவர் முதுமையடையும்போது தனது கணவன்/மனைவி இறந்து விட்டநிலையி லும் உடல் நிலை மாற்றம் இன்றி இருந்தாலும் முதுமை பற்றிய பயம், தனிமை உணர்வு யாவும் ஒன்று சேர்ந்து மனச்சோர்வு ஏற்பட இடமாகாலம். இதற்கு தங்கள் வைத்தியர்களை நாடிச் சென்று தகுந்த ஆலோசனைகளையும் மருந்து களையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஒருவர் முதுமை நிலையடைந்தாலும் மற்றோருக்கு பாரம் எனக் கருத வேண்டிய தில்லை. முதுமையிலும் உதவலாம். முதியோரின் வயதும் அனுபவமும் அவர்களுக்கு பலவழிகளில் உதவக்கூடும். எனவே மற்றவர்களுடன் சேர்ந்து பழகிக் கொள்ளல் வேண்டும். அவர்களின் உரைகளை நன்கு கேளுங்கள். உங்கள் அனுபவங்களையும் ஆற்றல்களையும் கேட்டு அவர்கள் சந்தோஷப்பட்டு தங்களுக்கு சாதகமாக்கி கொள்வார்கள்.

உங்கள் மனநிலை ஆறுதல் அடைய உங்களை நன்கு மதிக்கின்ற உங்கள் கருத்துக்களைக் காது கொடுத்துக் கேட்கின்ற நண்பர்களுடனும் உறவுகளுட னும் அதிக நேரத்தை செலவிடுங்கள்.

தங்கள் குடும்பத்தவரிடம் ஆறுதலாக பேச போதிய நேரம் கிடைக்காதவேளை உங்கள் வயதினை ஒத்த நண்பர்களை நாடுங்கள். தொடர்மாடிக் கட்டிடத்தில் நீங்கள் வாழ்பவராக இருந்தால் தங்கள் வயதை ஒத்தவருடன் சென்று தொடர்பு வைத்தால் மனநிம்மதி தோன்றும்.

நீங்கள் ஆன்மீக வழிபாடு உடையவரா னால் தினம் சிலமணித்துளிகள் வழி பாட்டிற்கு ஒதுக்குங்கள். ஆலயங்கள் அண்மையில் இருந்தால் சென்று தெய்வங் களை வழிபட்டு மனநிம்மதி பெறுங்கள். அல்லது தொண்டுகள் செய்வதினால் மனநிம்மதியும் சோர்வும் இன்றி வாழலாம்.



முதியவராகிய நீங்கள் சேவை உணர்வு உள்ளவரானால் உங்கள் பகுதியில் உள்ள சேவை நிறுவனம் ஒன்றில் சேர்ந்து உங்களால் இயன்ற சேவைப்பணிகளைச் சமூகத்திற்கு வழங்கலாம். சேவை என்பது உடலால் மாத்திரம் அன்றி மனதாலும் வார்த்தையாலும் செய்ய முடியும் அல்லவா?

மேலும் தங்களின் சேவையை இருக்கும் வீட்டிலும் செய்யலாம். வீட்டின் வேலை களை ஒத்தாசையாக செய்து கொடுக்க லாம். அண்மையில் உள்ள கடைகளுக்குச் சென்று தங்களால் கொண்டுவரக்கூடிய பொருட்களை கொண்டு வந்து கொடுக்க லாம். மேலும் தங்கள் வீட்டில் உள்ள பிள்ளைகளுக்கும் அருகில் இருக்கும் பிள்ளைகளுக்கும் உங்களால் முடிந்த படிப்புக்குரிய பாடங்களைச் சொல்லிக் கொடுக்கலாம்.

முதியவர்களாகிய எமக்கு இளமையில் உண்ட உணவுகளை தற்பொழுது உண்ண முடியாது. உணவை உண்பதற்கு எம்மிடம் குறைபாடு இருக்கலாம். எனவே நன்கு போசாக்குரிய உணவுப் பொருட்களை தேர்ந்து எடுத்து பாவித்து வந்தால் உடல்நிலை தளர்வடையாது. மேலும் வேலை செய்த காலத்தில் உண்ட உணவை முதிர்வுற்ற காலத்தில் உண்பது மிகக் கடினம். எனவே உடல் நிலைக்கு ஏற்ற சத்துப் பொருந்திய ஆகாரங்களைப் பாவிப்பது நன்மையாகும்.

முதுமையில் பெரும்பாலும் இரத்த சோகை யும் கல்சியக்குறைபாடுகளும் ஏற்படுவதி னால் தகுந்த ஆகாரங்களைக் கைக் கொள்ள வேண்டும். கீரைவகைகளைத் தினம் எடுப்பது நன்று. சூப்பு வகை தயாரித்துப் பாவித்து வரலாம். கீரையில் வேண்டிய இரும்புச்சத்து, கல்சியம் உண்டு. இதனால் எலும்புகள் பலம்பெறும். இரத்த விருத்தி ஏற்படும். மேலும் சர்க்கரை, தேன், பேரிச்சம்பழம் போன்றவற்றில் இரும்புச்சத்து செறிந்து காணப்படுகின்றது. இவற்றையும் இடையிடையே பாவித்து பயன் பெறமுடியும். மேலும் தினமும் பால் ஓரளவு எடுத்து வந்தால் பற்கள், எலும்புகள் பலமடையும். பழவகை அதாவது வாழைப் பழம், அப்பிள், பப்பாசிப்பழம் இவற்றில் நார்ச்சத்தும், உயிர்சத்தும் செறிந்து காணப்படுகின்றன.

முதியவர்கள் இரவு வேளையில் தேனீர், கோப்பி அருந்தக் கூடாது. இது எமது உறக்கத்தை கெடுத்து விடும். ஆனால் படுக்கைக்கு முன் பால் அருந்தலாம். அல்லது கொதித்து ஆறிய தண்ணீர் வேண்டியளவு பாவிக்கலாம். இதனால் காலையில் மலம் கழிப்பதற்கு கஸ்டம் இல்லாமல் இருக்கும். காலையிலும் படுக்கையை விட்டு எழுந்தபின் வாயை நன்கு சுத்தம் செய்து தண்ணீர் வேண்டி யளவு அருந்தலாம். சிலர் இயலாமல் இருந்தாலும் வெளியில் போய் வர வேண்டும் என்பார்கள். வீடுகளில் உள்ளவர்கள் வெளியில் ஏற்படும் பல விளைவுகளைக் கூறினாலும் இவர்கள் கேட்பதில்லை. இவர்கள் வெளியில் சென்று விட்டால் தங்களுக்கு துன்பத்தை ஏற்படுத்தி மற்றோருக்கும் இடஞ்சலைக் கொடுப்ப துண்டு. தவறுதலாக விழுந்து மயக்க நிலையடைந்து வைத்தியசாலைக்கு அவசர சேவை வாகனத்தை அழைத்து சென்று துன்பப்படுவோரும் உளர்.

மற்றவர்களில் தங்கி இருக்காமல் சுதந்திர மாய் உங்களினால் நீண்டகாலம் இயங்க முடியுமாயின் அதுவே ஆரோக்கியமான முதுமையாகும். வயது அதிகரிப்பதினால் சிலருக்கு உடல்ரீதியான குறைபாடுகள் வருவதற்கு இடம் உண்டு. உதாரணமாக கை, கால் பலம் இழக்கலாம். அல்லது உடம்பின் பக்கமே செயல் இழக்கலாம். அல்லது கைகளில் நடுக்கநிலை ஏற்படலாம். இதையிட்டு மனம் தளர்வு அடைவது நன்றன்று. உங்கள் நீண்ட வாழ்வில் எத்தனை பிரச்சினைகளையும், சிக்கல்களையும் எதிர்கொண்டு வெற்றி கண்டு இருப்பீர்கள். அந்த அனுபவங்கள் உங்களுக்கு கைகொடுக்கும்.

முதியோர் சில சந்தர்ப்பங்களில் பாரிச வாதம், தோள்மூட்டு இறுக்கம் அல்லது விறைப்பு போன்றவற்றாலும் சரியாக இருக்க முடியாமல் ஒருபக்க கை, கால் பலமிழந்து இருப்பார்கள். அவர்கள் உடை அணியும் போது பலமிழந்த பக்கத்திற்கு உடையை முதல் அணிய வேண்டும். பின்பு பலமான கைக்கும் போட வேண்டும். சேட்டை பின் கழட்டும்போது செயல் இழந்த கைப் பக்கம் கழட்ட வேண்டும்.

நடக்க முடியாதநிலை வரும்போது இறுக்கம் அற்ற தொளதொளப்பான ஆடை அணிய வேண்டும். இதனால் நடப்பதற்கு இலகுவாக இருக்கும். முதியோர் ஆகிய

தொடர்ச்சி 25ஆம் பக்கம்


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

mhc

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# கழுத்துவலி என்னும் தோள்பட்டை வாதம்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

## Sholder Pain

மனிதனுக்கு வரும்நோய்களைப் பொறுத்த மட்டில் உள்உறுப்புகள் தொடர்புடைய நோய்கள் வெளிஉறுப்புகள் சார்ந்த நோய்களால் உண்டாகும் வலிகள் என இரண்டாகப் பிரிக்கலாம்.

குறிப்பாக முதுகுவலி, கீழ்த்தண்டு முதுகு வலி, கழுத்துவலி, கைகால் மூட்டுவலி போன்றவற்றால் அதிகமானோர் அவதிப்படு வதை நாள்தோறும் காண்கிறோம். நீரிழிவு, இரத்த அழுத்த நோயாளிகள் இத்தகைய நோயின் தாக்கத்திற்கு ஆளாகின்றனர். இந்த வகையில் கழுத்துவலி என்ற தோள்பட்டை வலி நம்மில் அனேகமானோ ரைப் பாதிக்கிறது. 'எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம்' என்பது சித்தர்கள் கூற்று. இந்த தலைப்பகுதியில்தான் மனிதனை இயக்கும் ஐம்புலன்களும் அமைந்துள்ளது. இத்தகைய சிறப்புகள் கொண்ட தலைப்பகுதியை உடலோடு இணைக்கும் பாலம்தான் கழுத்து. உடலுக்கும் தலைக்கும் கழுத்துவழியாகத்தான் இரத்த நாளங்கள் செல்கின்றன.

கழுத்தின் மையப்பகுதியில் ஏழு தண்டுவட நரம்புகள் உள்ளன. இவற்றைச் சுற்றி தசைகளும், தசைநார்களும் இணைந்து உள்ளன. மேலும் கழுத்து எலும்பில் இருந்துதான் கைகழுக்குப் போகும் நரம்புகள் வெளிவருகின்றன. இந்தப் பகுதியில் பாதிப்பு ஏற்பட்டால் நமது அன்றாட செயல்கள் பாதிப்படையும். இது பெரும்பாலும் 40 வயதைத் தாண்டியவர் களுக்கே ஏற்படுகிறது.

### கழுத்துவலிக்கான காரணங்கள்



உணவு செரியாமை, மலச்சிக்கல், வாயுக் கோளாறுகள், குடல் சூடு, மூலச்சூடு என்பனவற்றாலும் அதிகமான சிந்தனை, மனஅழுத்தம், தூக்கமின்மை, கோபம், ஒரே இடத்தில் அமர்ந்து வேலை செய்தல், அதிகநேரம் கணினி (Computer) முன் இருத்தல் போன்றவற்றாலும் இந்தக் கழுத்துவலி ஏற்படுகிறது. நேரம் கடந்த உணவு, அளவுக்கதிகமான உணவு, எளிதில் சீரணமாகாத உணவு, நீண்டநாள் பதப்படுத்தப்பட்ட உணவுகளை உண்பது, வாயுவை அதிகரிக்கும் உணவுகள் என்பன வற்றாலும் கழுத்துவலி உண்டாகின்றது.

இப்படிப்பட்ட உணவுகளை உண்பதால் குடலில் நீரானது சுரந்து செரியாமையை ஏற்படுத்தி பின் அது மலச்சிக்கலாக



மாறுகிறது. இதனால் குடலில் அபானவாயு சீற்றம் கொண்டு குடல்நீரை மேல்நோக்கித் தள்ளுகிறது. இது பின் ஆவியாகித் தலையை நோக்கிச் சென்று அங்கே தங்குகிறது. பின் அது தலையின் பின்பகுதி நரம்புகள் வழியாக கீழ் இறங்கி கழுத்துப் பகுதிக்கு வரும்போது அங்கு தசைகளை யும் நரம்புகளையும் இறுகப்பற்றிக் கொள்கிறது. இது நாளடைவில் வலுவாக இறுகி கழுத்து மற்றும் தோள் பகுதிகளில் வலியை ஏற்படுத்துகிறது. இதுதான் தோள்பட்டை வலிக்கான முதன்மை காரணமாகிறது.

### குணங்குறிகள்

தலைவலி, மூக்கில் நீர்வடிதல், மண்டைக் குத்து, பின்கழுத்து பகுதியில் பிடிப்பு உண்டாதல், குனிந்து நிமிரும்போது தலை சுற்றுதல் போன்ற உணர்வு ஏற்படும். சிலருக்கு உடல் அதிர்ந்து நரம்புகள் இறுகும். எழுந்து நடக்கும் போது மயக்கம், தலைச்சுற்றல் உண்டாகும். கைகள் மரத்துப் போகும். தூக்கமின்மை, அமர்ந்து வேலை செய்யும்போது கழுத்தில் வலி, எழும்போது கைவிரலில் விறைப்பும் ஏற்படலாம். சிலசமயம் நெஞ்சில் வலி ஏற்பட வாய்ப்பும் உண்டு.

### கழுத்து மற்றும் தோள்வலியைப் போக்க

ஆங்கில மருத்துவமுறையில் இதனை முற்றாக குணப்படுத்தத் தகுந்த சிகிச்சை முறைகள் இல்லை. ஆனால் அகத்தியர் அருளிய வர்ம சிகிச்சை முறையில் மூலிகைகளாலான தைலங்கள் கொண்டு தடவுதல், தகுந்த உணவுமுறைகள் போன்றவற்றால் மலச்சிக்கல் நீங்கி, கழுத்துப் பகுதியை சுற்றியுள்ள பசைத் தன்மை இளகி அந்தப் பகுதிக்கு சீரான இரத்த ஓட்டத்தை ஏற்படுத்தும். நாளடைவில் வலி நீங்குவதுடன் மேற்கண்ட குறி குணங்களும் மறையும்.

### உணவுமுறை

தினமும் மதிய வேளையில் கீரை வகையில் ஒன்றைச் சேர்த்துச் சாப்பிட வேண்டும். இரவில் தயிர் மற்றும் குளிர் பானங்களை தவிர்க்க வேண்டும். இரவு உணவு எளிதில் ஜீரணிக்கக்கூடியதாகவும், உப்பு, காரம் என்பன குறைவாகவும் இருக்க வேண்டும். காலை உணவு கண்டிப்பாக சாப்பிடவேண்டும். இதனால் வாயு தொல்லையைத் தவிர்க்கலாம். மிருகங்களின் கொழுப்புச் சேர்ந்த உணவு களை முடிந்தவரை தவிர்ப்பது நல்லது.

### யோகாவும் தோள்வலியும்

இந்த வலியை யோகா மூலம் முற்றிலும் குணப்படுத்த சில எளிய பயிற்சிமுறைகள் உள்ளன. இவை மூலம் தோள்பகுதி யிலுள்ள நரம்புகளின் இறுக்கத்தைக் குறைத்து, எலும்புகளின் உறுதியை உண்டாக்கி அந்தப் பகுதியின் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்கின்றது. மேலும் சில யோகாசிகிச்சை (Yoga Thrapy) முறைகளையும் சேர்த்து ஒரு யோகாசன சிகிச்சை ஆசிரியரின் உதவி யுடன் பழகி 4 முதல் 6 வாரங்களுக்குள் கழுத்து மற்றும் தோள்பட்டை வலியை பூரணமாகக் குணமாக்கலாம்.



### படுக்கை

தலையணை அதிகம் உயரமில்லாது இருக்க வேண்டும். பள்ளம் மேடு இல்லாத படுக்கையிலேயே தூங்க வேண்டும். அதிக குளிர்காற்று உடலில் படும்படி தூங்கக் கூடாது.

### மனஅழுத்தம்

தொடர்ந்து இருக்கும் மன அழுத்தம் காரணமாக தலையிலிருந்து கழுத்து நோக்கிச் செல்லும் நரம்புகள் இறுக்கம் அடைந்து கழுத்துப் பகுதியையும் தோள் பட்டையையும் அசைக்க முடியாமல் செய்து விடுகிறது. எனவே அந்த மன அழுத்தத்திற்குரிய தியானம் (Meditation) மற்றும் மூச்சுப்பயிற்சியையும் மேற் கொண்டு மன இறுக்கத்தையும் நீக்க வேண்டும். நோய் விரைவில் குணமாகும்.




ஆரோக்கிய வாழ்வு
Diploma in Yoga Therapy (India)
C - 416.617.5721
H - 416.289.2033 after 7:00pm

MATH & PHYSICS TUTION

By a well-qualified and an experienced teacher. For all grades from Gr. 4 to 1st year of university.

Special classes in advanced functions, calculus & vectors and data management. Classes available at Scarborough & Stouffville.

Contact: 647 340 9490/ 416 732 2228



ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL
• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca



# மூவகை இன்பம்

இன்பம் எங்கே! இன்பம் எங்கே! என்று தேடு. அது எங்கிருந்த போதும் அதை நாடி ஓடு. இதுவே வாழ்க்கையின் அடிநாதமாக அமைந்துள்ளது. ஓரறிவு முதலாக ஆறறிவு உயிர் வரை இன்பத்தையே விரும்புகின்றன. சிறிய புழு முதலாக பெரிய யானை ஈறாக எல்லா உயிர்களும் இவ்வுலகில் இன்பத்தை நோக்கியே இனிய நடை போடுகின்றன. உலகப் பற்றை விட்டொழிப்பதற்காக உலகம் யாவையும் தாமூலமாக்கிய உன்னத தலைவனைப் பற்றிக் கொண்ட அடியார்கள் கூட 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று பாடி வைத்தனர் என்றால் இன்பம் என்பது அவ்வளவு எளிதில் எந்த உயிரையும் விட்டு விடுவதில்லை என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது அல்லவா?

இன்பம் என்பது நிலையானதல்ல. அது அவரவர் மனநிலை, சூழ்நிலை, ஏற்றுக் கொள்ளும் பக்குவம் ஆகியவற்றைப் பொறுத்து மாறுபடக் கூடியது. ஒருவருக்கு இன்பம் தருவது மற்றவருக்கும் இன்பம் தரும் என்று சொல்ல முடியாது. தந்தை கர்நாடக இசையை கேட்பதை இன்பமாக எண்ணுவார். ஆனால் அவர் மகனோ அந்த இசையை ரசிக்க முடியாமல் துன்பமடைவார்.

இதேபோல ஒரு சமயத்தில் இன்பம் கொடுப்பது அவ்வாறே எல்லாச் சமயங்களிலும் இன்பம் தரும் என்றும் சொல்ல முடியாது. குளிரில் நடுங்கும் போது கம்பளிப் போர்வை இதந்தரும், இன்பம் தரும். ஆனால் கோடை வெப்பத்தில் கம்பளிப் போர்வை இன்பம் பயக்குமா? கண்டிப்பாக இல்லை.

இன்று இருந்து நாளை குறைந்து விடும் அல்லது மறைந்து விடும் இன்பங்கள் நிலையானவை அல்ல. எனவே அவை பொய் இன்பங்கள். நினைக்கும் போதெல் லாம் மனதில் மகிழ்ச்சிப் பூக்களை மலரச் செய்யும் ஆற்றல் படைத்தவை எவையோ ,அவையே மெய் இன்பங்கள் இன்பங்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. உடல் நோயில்லாமல் இருப்பது முதல் வகை இன்பம்
2. மனதில் கவலைகள் இல்லாமல் இருப்பது இரண்டாம்வகை இன்பம்.
3. பிறருக்கு உதவி செய்து வாழ்வது மூன்றவது வகை இன்பம்.

உள்ளம் பெருங்கோயில், ஊன் உடம்பு ஆலயம் உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே என்பது திருமூலர் கூற்று. உடம்பு அழிந்தால் உயிர் அழியும். எனவே உடம்பைப் பேண வேண்டியது அத்தியாவசியம். சுவரை தேடும் சித்திரம் என்பது போல நோயற்ற உடலே முன்னேற்றத்தின் முன்னோடி.

ஏராளமான செல்வம், எண்ணிகை இல்லாத ஏவலாட்கள், இளமை மிக்க மனைவி, இனிய மொழி, அறிவார்ந்த மக்கள், இனிய மொழி பேசும் சுற்றதார், அரண்மனை போன்ற இல்லம், அறுசுவைமிக்க உணவு இவ்வளவு இருந்தாலும் ஒருவனது உடல் நோயுற்று இருந்தால், அவன் படுத்த படுக்கையாக இருந்தால் வாழ்க்கை இனிக்குமா? அவன் நடைப்பிணமேயாவான். நோய் உள்ள உடல் ஒரு ஓட்டைப்பாத்திரம் அதனால் இன்பங்களை துய்க்க முடியாது. எனவே தான் பாரதியார். விசையுறு பந்தினைப் போல் விரும்பியபடி செல்லும் உடல் கேட்டேன்.
என்று பராசக்தியிடம் வேண்டுகின்றார். உறுதி பெற்ற உடலே எண்ணற்ற அரிய செயல்களை எளிதாகச் செய்து முடிக்கின்றது.

விளையாட்டு வீரர்களுக்கும் போர் வீரர்களுக்கும் மட்டும் தான், உடல் உறுதி வேண்டும் என்பதல்ல. அறிவுத் திறமை மிக்க அறிவியல் அறிஞர்க்கும் ஏன் சாதாரண மக்களுக்கும் உடல் உறுதி மிகமிக அவசியம். மூட்டை தூக்கி வாழ்வு நடத்திய டென்சிங், எவரெஸ்டு சிகரத்தை எட்டிப் பிடித்தது. அவரது உடல் வலிமையினால் தான் என்பது நினைவிருக்கட்டும்.

மனம் உள்ளவன் மனிதன். மனதில் கவலை இல்லாமல் இருப்பவன் மகிழ்ச்சியான மனிதன். உள்ளே காற்று நிறைந்த இறப்பர் பந்து அடிபட அடிபட உயரத் துள்ளுகின்றது. இதைப்போலவே மனதில் மகிழ்ச்சியும் இன்பமும் கொண்டவனை புற உலகின் வாழ்க்கை வசத பதவி போன்ற ஆடம்பரங்கள் அடித்த போதும் அவன் துவண்டு விடாமல் துள்ளித் திரிவான். மனதில் இன்பம் நிறைந்திருக்குமானால் வசதியற்ற வாழ்க்கை கூட வழமான வாழ்க்கை போலாகி விடும். வசதி என்பது வாழ்க்கையில் இல்லை. வாழும் மனிதனின் உள்ளத்தின் தான் இருக்கின்றது. மனம் இன்பத்தில் திளைக்கும் போது வேப்பங்கா யும் வெல்லம் போல் இனிக்கும். கலங்கிய நீரும் கற்கண்டாக சுவைக்கும் மனதில் கவலை குடி கொண்டால் தண்ணீரும் வெண்ணீராகி விடும்.

கவலையினால் வசதியான வாழ்க்கை கூட சுவை தராது.

பாலிருக்கும் பழமிருக்கும்
பசி இருக்காது
பஞ்சணையில் காற்று வரும்
தூக்கம் வராது.

பிரிவுத் துன்பத்தால் தவிக்கும் ஒரு காதலியின் உள்ளக் குமுறலை கவிதையில் வடித்துள்ளார் கவிஞர் கண்ணதாசன். இதே கருத்தை சீதையின் நிலையில் வைத்துக் காட்டுகின்றார் கம்பர். இராமபிரான் மீது கொண்ட உன்னத காதலால், பிரிவுத் துயரால் சீதாபிராட்டிக்கு உலகமே கசக்கின்றது. இரவு கடக்கமுடியாத துன்பக் கடலாகின்றது.

நகரின் இசைகளோ அடங்குவதாக இல்லை. பகற்பொழுதோ வருவதாக தெரிய வில்லை. இராமனைப் பற்றிய எண்ணங்களோ நீங்குவதாக இல்லை. இந்தக் கொடிய இரவோ விடிவதாக இல்லை. என்உள்ளத்துத் துன்பங்களோ ஒழிவதாக இல்லை. என் உயிரும் பிரிவதாக இல்லை. என் கண்களும் உறங்குவதாக இல்லை. இதுவா எனது தலைவிதி என்று புலம்புகிறாள் அவள். இது தான் அப்பாடல்.

பண்ணோ ஒழியா பகலே புகுதாது
எண்ணோ தவிரா இரவே விடியாது
உள் நோவு ஒழியா உயிரோ அகலா
கண்ணோ துயிலா இதுவோ கடனே!


துன்பத்தில் இருப்பவர்க்கு உதவி செய்தல் என்பது பெருங்குணம். வாழ்க்கையில் ஒரு முறையாவது பிறருக்கு உதவி செய்து விட



வேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் உள்ளத்தில் குடி கொண்டு இருக்க வேண்டும். அதற்கு இரக்க சிந்தை, தார்மீக சிந்தை, பரோபகாரம் வேண்டும். ஒரு சமூகப் பிராணி எனவே கொண்டும் கொடுத்தும் அவன் வாழ வேண்டும். பிறருக்கு உதவுதல் ஒரு இன்பம்தரும் நிகழ்ச்சியாக இருப்பதுடன் தர்மச் செயலாகவும் அமைந்து விடுகின்றது. பறவைகள், விலங்குகள் தம் சிறிசுகளுக்கு மட்டுமன்றி மனிதர்களுக்கும் உதவுகின்றன. எனவே ஆறறிவு படைத்த மனிதன் அவற்றிற்கு உதவிட வேண்டும் ஏதிலிகளாக இருப்பவர்கள் உதவியையே நாடு நிற்கின்றர். அனாதைக் குழந்தைகள் வளர்ப்புப் பெற்றோருக்காக ஏங்குகின்றனர். உயிர்காப்பான் தோழன் என்பது உதவியின் உச்ச நிலையை உணர்த்துகின்றது. உதவி உரிய நேரத்தில் செய்யப்பட வேண்டும். இதனை காலத்தினால் செய்த உதவி என்பர் வள்ளுவர்.

அரசர்கள் உதவியின் பெட்பினை உணர்த்திப் போந்தனர். கன்றை இழந்த பசுவின் துன்பத்தை உணர்ந்து தனது ஒரே மகனை தேர்க்காலில் இட்டவன் மனுநீதிச் சோழன் புறாவைக் காப்பாற்ற தனது உடலிலிருந்து தசையை அரிந்து கொடுத்தவன் சிபிச் சக்கரவர்த்தி. முல்லைக் கொடி படருவதற்கு தேர் ஈந்தவன் பாரி வள்ளல். எனவே அன்பு அகத்தில் குடி கொண்டிருந்தால் அது உதவிக்கு உந்து சக்தியாக அமைந்து விடும். தேவை இயலாமை இல்லாமை ஆபத்து உதவியின் காரணங்களாக அமைந்து ஒருவரை அதற்கு ஈர்த்து விடுகின்றன.

உலகில் மனிதப் பிறவி எடுத்த நாமனைவரும் உடல் நலம், மனநலம் மற்றவர்க்கு உதவுதல் ஆகிய மூவகை இன்பத்தினையும் பெற்று சமுதாயம் வளம் பெற பாடுபடுவதைக் இலட்சியமாகக் கொள்வோம்.



நா. க. சிவராமலிங்கம்



# இயற்கை அன்னையின் ஓர் அதிசயம் - ஃபண்டி குடா
# *Bay of Fundy is a wonder of mother nature*

கனடாவின் கிழக்குக்கரை மாகாணங்களான நோவா கோஷியா Nova Scotia மற்றும் நியூ பிரன்சுவிக் New Brunswick மாகாணங்களுக்கு இடையே அடைபட்டுள்ள அத்லாந்திக் சமுத்திரத்தின் பகுதியை ஃபண்டி குடா (Fundy Bay) என அழைக்கிறார்கள். நியூ பிரன்சுவிக் மாகாணம் வடக்கு எல்லையிலும் நோவா கோஷியா மாகாணம் தெற்கு மற்றும் கிழக்கு இரண்டு எல்லைகளிலும் மேற்கே அத்லாந்திக் பெருங்கடலை எல்லைகளாகக் கொண்டது இந்த ஃபண்டி குடா (Fundy Bay).



கடல் அலைகள் ஏற்படுவது அதன் மீது வீசும் காற்றின் வேகத்தினால் என்று அறிந்திருக்கிறோம். ஆனால் ஃபண்டி குடா எல்லைக் கிராமங்களிலும் ஃபண்டி குடாவை நோக்கி வந்து சேரும் ஆறுகளிலும் பொதுவான அலைகள் மட்டுமல்ல வெவ்வேறான சில இயற்கை அதிசயங்கள் தினமும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இங்கு நடைபெறும் அதிசயங்கள் உலகில் இவ்வளவு பெரிதாக ஒரு நாட்டிலும் நடப்பதில்லை. ஆதனால் அவற்றை அறிந்து கொள்ள ஆவலாய் இருப்பீர்கள். ஆகவே ஒவ்வொன்றாக ஆராய்ந்து பார்ப்போம்.

எதிர்த்திசை நீர்வீழ்ச்சி (Reversing Rapids): காலையில் கிராமத்தினுள் உள்ள ஆறுகளின் உயரமான பகுதியிலிருந்து பதிவான குடாவை நோக்கி பாய்ந்து கொண்டிருக்கும் ஆற்று நீரை காணலாம். மாலையில் பதிவான குடாவிருந்து கடல் நீர் உயரமான ஆறுகளிலினுள் உயரமான பகுதியை மேல் நோக்கி போய்க்கொண்டிருப்பதைக் காணலாம். என்ன அதிசயம். இந்நிகழ்வை எதிர்த்திசை நீர்வீழ்ச்சி (Reversing Rapids) என அழைப்பார்கள். பகலில் நிகழ்ந்த இதே எதிர்த்திசை நீர்வீழ்ச்சி நிகழ்வு மறுபடி இரவிலும் நிகழ்கிறது. ஒவ்வொரு நிகழ்வுக்கும் சராசரி 6 மணித்தியாலம் 13நிமிடங்கள் வரை எடுக்கின்றதாக அவதானித்துள்ளார்கள். 24 மணித்தியாலம் கொண்ட ஒரு நாளில் 4 தடவை இந்நிகழ்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இவ்வாறான நீரோட்ட திசை மாறும் பொழுது ஆற்றில் கூடிதலான (maximum) 75 மீற்றர் விட்டம் கொண்ட நீர் சுழற்சிகள், நீர் சுழிகள் (whirlpools & rips) போன்றவை தோன்றுகின்றன. பல சுற்றுலாப் பயணிகள் இந்த இயற்கை நிகழ்ச்சிகளும் காட்சிகளும் கவருகின்றன. இந்நிகழ்வை கண்டு களிக்க மிகவும் பொருத்தமான இடங்கள் சென்ட் ஜோன்ஸ் நகரத்திற்கு அண்மையிலுள்ள சென்ட் மார்டீன்ஸ் அல்லது சென்ட் அன்றூஸ் என்ற கிராமங்கள் ஆகும்.

உலகில் அதி உயர்ந்த நீர்மட்ட உயர்ச்சி (World's Highest Tides): பெ(க)ண்டி குடாவில் ஒரே நாளில் நம்பமுடியாத அளவு அதாவது 160 மில்லியன் தொன் எடையான நீரை வெளியேற்றி அதி குறைந்த நீர் மட்டத்தை அடைகிறது. சமுத்திரத்தின் படுக்கை நீர் இன்றி இருக்கும். காலையில் சமுத்திரத்தின் தரையில் உலாவலாம், விளையாடலாம். மாலையில் கிட்டத்தட்ட அதே அளவு 160 மில்லியன் தொன் எடையான நீரை உள்வாங்கி சராசரி 50 அடி அதி உயர்ந்த நீர்மட்டத்தை ஏற்படுத்துகிறது. மாலையில் நீங்கள் உலாவிய தரைக்கு கடல் நீர் ஓடி வருவதை காண்பீர்கள். உடனே நீங்கள் 50 அடிக்கும் உயரமான குன்றுகளில் ஏறிவிட வேண்டும். அங்கிருந்து நீர் உயர்வதைக் கண்கூடாகக் கண்டு களிக்கலாம். வசந்த காலத்தில், 16 மீட்டர் அதாவது 53 அடி உயர அலைகள் அதி உயர்ந்த நீர்மட்டத்தை நோவா கோஷியா மாகாணத்திலுள்ள மினாஸ் பேசின் என்ற கிராமத்தில் உருவாக்குகிறது. இக்காட்சி வருணிக்க முடியாதளவு இயற்கை அழகு கொண்டவை. (The highest tides in the world occur in the Minas Basin, Nova Scotia). பார்வையாளர்கள் இங்கும் ஒவ்வொரு 24 மணி நேரத்தில் சராசரியாக இரண்டு உயர் நீர்மட்டத்தையும் மற்றும் இரண்டு குறைந்த நீர்மட்டத்தையும் காணக்கூடியதாக இருக்கும்.

ஒரே நாளில் அதாவது 24 மணித்தியாலத்துக்குள் 4 தடவை நீர் அங்கும் இங்குமாக திசை மாறி ஓடுவதால் இங்குள்ள மலைகள் மணல்கல் குன்றுகள் நிலஅரிப்புக்களுக்கு உள்ளாகி புவியியல் படிமங்களாகவும், பூச்சாடி வடிவ தீவுகளாகவும் கடல் குகைகளாகவும் சிவப்பு ஈரத்தரைகளாகவும் (The shape of the cliffs, sea stacks, red mudflats, and the caves)

**தொடர்ச்சி 20ஆம் பக்கம்...**


# Opening Soon
# Shirdi Sai School of Canada

We are accepting registration (Kindergarten to Grade 5) for this brand new school opening soon in Scarborough.
To register your interest please go to:

**http://shirdisaischoolofcanada.com/**

# பாலுமகேந்திராவுக்கு கொடுத்த குருதட்சினை!

## நேர்காணல் - சசிக்குமார்



“இயக்குநர் சசிகுமாரை நான் மறந்துவிடவில்லை. இயக்குநராக ‘சுப்ரமணியபுரம்’ படத்துக்குக் கிடைத்த கைதட்டல்தான் என்னை இதுவரை நகர்த்திக்கொண்டு வருகிறது. எனவே, என்னால் அவனை மறக்கவும் முடியாது. இப்போதும் என்னை வைத்து படமெடுக்கும் இயக்குநர்கள் மைக் பிடித்து ‘ஆக்‌ஷன்’, ‘கட்’ சொல்லும்போது நாம் இந்த இடத்தில் இருக்கவேண்டும் என்று ஏக்கம் வருகிறது. நடிகனாக நிறைய வாய்ப்புகள் குவிந்துவிட்டது. அதையெல்லாம் முடித்துவிட்டு படம் பண்ணலாமென்று திட்டமிட்டதால்தான் இவ்வளவு நாட்களாகிவிட்டது. என்னை நம்பிக் காத்திருக்கும் இயக்குநர்களைக் காக்க வைத்துவிட்டு படம் இயக்கப் போய் விட்டால், அந்தப் புதுமுக இயக்குநர்களின் நிலைமை என்னவாகுவது? அதனால்தான் இயக்குநர் சசிகுமாருக்கு சிறு ஓய்வு கொடுத்திருக்கிறேன். அடுத்த வருடம் அவன் மீண்டும் வந்துவிடுவான்.”

‘ஈசன்’ திரைப்படத்திற்குப் பிறகு நீங்கள் படம் இயக்கவில்லையே. நடிகன் சசிகுமாருக்கு கிடைக்கும் கைதட்டல் இயக்குநர் சசிகுமாரை அடக்கி வைத்துவிட்டதா? என்கிற கேள்விக்கான சசிகுமாரின் பதில்தான் இது. உற்சாகமாக இருக்கிறார் மனிதர். இவரது நடிப்பில் சமீபத்தில் வெளியாகியுள்ள ‘கிடாரி’ வெற்றி தந்த உற்சாகம் இது. தாகமுள்ள தாடிக்கார நடிகனாக, தேடலின் தெறிப்புள்ள இயக்குநராக, இன்று கோடம்பாக்கத்தில் வெற்றிக்கு உத்தரவாதமுள்ள சினிமாக்காரர் சசிகுமார் திரையில் மட்டுமல்ல நேரிலும் வசீகரிக்கிறார். சரமாரி கேள்விகளுக்கு தாடியை தடவியபடி மென்சிரிப்புடன் பதிலளித்தார்.

**அதென்ன ‘கிடாரி’?**

யாருக்கும் அடங்காமலும் திமிராகவும் இருப்பவனை சில ஊர்களில் கிடாரித்தனமாக சுற்றிக்கொண்டிருக்கிறான் என்பார்கள். படத்தில் என்னுடைய பாத்திரம் கிட்டத்தட்ட அப்படித்தான். பாத்திரம் பெயரும் ‘கிடாரி’தான் என்பதால் அதையே தலைப்பாக வைத்துவிட்டோம்.

நீண்ட இடைவேளைக்குப் பிறகு நெப்போலியனைப் பார்க்க சந்தோஷமாக இருக்கிறது. கோட்டூர் துரை பாத்திரத்தில் மிரட்டியிருக்கிறார். ‘சீவலப்பேரி பாண்டி’ படத்தில் பார்த்த அதே நெப்போலியனாக இருக்கிறார். எப்படி நடிக்க வைத்திருக்கிறீர்கள்?

‘குட்டிப்புலி’ படத்திலேயே எனக்கு அப்பாவாக நடிக்க அவரிடம் பேசினேன். அப்போது அவர் மத்திய அமைச்சராக இருந்தார். ‘வெற்றிவேல்’ சமயத்திலும் நடிக்கக் கேட்டேன். அப்போது அமெரிக்காவில் இருந்தார். இருந்தாலும் விடாமல் துரத்தி இந்தப் படத்தில் நடிக்க வைத்துவிட்டோம்.

**தொடர்ந்து கிராமத்துப் பின்னணிப் படங்களிலேயே நடிக்கிறீர்களே இது உங்களுக்கு அலுப்பா இல்லையா?**

ஏன் அலுப்பு வரவேண்டும்? வித்தியாசமான பாத்திரங்களின் வித்தே கிராமங்கள்தானே. அங்கேதான் ஒரு குட்டிப்புலி, வெற்றிவேல், கிடாரி இருக்கிறான். அங்கேதான் பல கதைகளும் கதாபாத்திரங்களும் இருக்கிறது. கிராமங்களிலும் எல்லாமே மாறிக்கொண்டு வருகிறது என்று சொல்லும்போது என் திரைப்படத்தில் அதை நினைவுபடுத்தும் வேலையைச் செய்வது ஒன்றும் அலுப்பில்லையே. நான் ஏன் அதை செய்யத் தயங்கவேண்டும்? கிராமம் நகரம் என்று பார்க்காமல் அந்த பாத்திரம் எனக்கு பொருந்துமா, யதார்த்தமா நிற்குமா என்றுதான் பார்க்கிறேன். தொடர்ந்து கிராமக் கதைகளில் நடிப்பதால் நகரம் சார்ந்த கதைகளை நிராகரிப்பதாக அர்த்தமில்லை. இதுவரை அந்தமாதிரிக் கதைகள் அமையவில்லை என்பதுதான் உண்மை.

**நீங்க நடிக்கும் படத்தில் வன்முறையும் சாதி சாயமும் அதிகமாக இருப்பதாக ஒரு கருத்து இருக்கிறது. இதற்கு உங்கள் பதில்?**

**தொடர்ச்சி 20ஆம் பக்கம்**



# பாலுமகேந்திராவுக்கு...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

என் படங்களை இயக்கும் இயக்குநர்கள் அவரவர்களது சொந்த மண்ணில் பார்த்த, சந்தித்தவற்றை அதே யதார்த்தத்துடன் சொல்கிறார்கள். அப்பொழுது அதில் சாதியும் வன்முறையும் தூக்கலாக இருப்பதாகத் தெரிகிறது. ஆனால், அது சாதிய உணர்வையோ வன்முறையையோ தூண்டிவிடக் கூடியது அல்ல. அதில் நான் தெளிவாக இருக்கிறேன். என் படங்களில் ஒரே பிரிவுக்குள் நடக்கிற பிரச்சனைதான் கதையாக சொல்லப்படுகிறது. இரண்டு சாதிக்குள் நடக்கும் பிரச்சனையை கையில் எடுத்துக்கொண்டு கதை சொன்னாதான் தவறு.



**- சிவதாணு -**

வன்முறையை இரண்டு விதமாகச் சொல்ல லாம். உதாரணத்திற்கு குழந்தைக்கு சாப்பாடு ஊட்டும்போது நிலா பார் என்று நிலாவை காட்டியும் ஊட்டலாம் பூச்சாண்டி வருகிறானென்று பயமுறுத்தியும் ஊட்ட லாம். பயமுறுத்தி ஊட்டும்போதுதான் குழந்தை வேகமாக சாப்பிடும். இதில் நான் இரண்டாவது ரகம். வன்முறை வேண்டாம் என்பதற்காகத்தான் வன்முறையை காட்டுகி றேனே தவிர வன்முறையை திணிப்பது எனது நோக்கம் இல்லை.

**தொடர்ந்து ஒரே மாதிரி தோற்றத்திலேயே நடிக்கிறீர்கள்? கெட்டப் மாற்றி நடிக்கும் ஆசை இல்லையா?**

நான் தாடி எடுத்துவிட்டால் வேற ஒரு ஆள் மாதிரித் தெரியும். அந்த அளவுக்கு இந்த முகம் மக்களிடம் பரிட்சயமாகிவிட்டது. இதை மாற்றிக் காட்டவேண்டுமானால் ஒரு படத்தில் தாடி வைத்து ஒரு பாத்திரமும் தாடி வைக்காமல் ஒரு பாத்திரமும் நடித்துக் காட்டிவிட்டு, பிறகு தாடி வைக்காமல் ஒரு படத்தில் நடிக்கலாம்.

**விரைவில் மீண்டும் படம் இயக்குவேன் என்கிறீர்கள். அப்போதாவது பெரிய நடிகர்களை வைத்து இயக்கும் திட்டம் இருக்கிறதா?**

ஆமாம். விஜய், அஜித்தை வைத்து ஒரு படம் பண்ண வேண்டுமென்று ஆசை இருக்கிறது. நிறைய நாட்களாகவே வரலாற்றுப் பின்னணி கொண்ட ஒரு கதையை இயக்கும் திட்டத்தை அசைபோட்டு வருகிறேன். அதில் இவர்கள் நடித்தால் சிறப்பாக இருக்கும்.

**'தலைமுறைகள்' படத்துக்குப் பிறகு பாலுமகேந்திராவோட இன்னொரு கதையை யும் நீங்கள் தயாரிப்பதாக இருந்ததாமே?**

உண்மைதான். வியாபார நோக்கமின்றித் தயாரித்த படம்தான் 'தலைமுறைகள்'. நான் நேசித்த, ரசித்த ஓர் இயக்குநர் எனக்குக் கொடுத்த பெரிய பரிசாகத்தான் அந்தப் படத்தை நினைக்கிறேன். அதை தயாரித்ததில் எனக்குப் பெருமையே. 'இந்தப் படத்தால் உனக்கு லாபமா நஷ்டமா' என்று என்னிடம் அவர் கேட்ட போது, 'உங்களை வைத்துப் படம் பண்ணியதே எனக்கு லாபம்தான் சார்' என்றேன். அது பணம் சார்ந்த விஷயம் அல்ல, மனம் சார்ந்த விஷயம். 'எங்கிட்ட வரவேண்டுமென்று உங்களுக்கு எப்படி சார் தோணிச்சு'ன்னு பாலுமகேந்திரா சாரிடம் நான் கேட்ட போது, 'அது பிரபஞ்சத்தின் சக்தி' என்று சொன்னார். 'தலைமுறைகள்' படத்தை அடுத்து இன்னொரு படம் பண்ணலாம் என்று சொல்லியிருந்தார். அதற்குள் அவர் விழுந்திட்டார். ஆஸ்பத்திரியில் அவரை போய் பார்த்து, 'எழுந்து வாங்க சார் படம் பண்ணலாம்' என்றேன். 'நான் சாகமாட்டேன்.. சாகுற வரைக்கும் படம் எடுக்கவேண்டும். என் சாவை வியூ ஃபைண்டரில் பார்த்துட்டே போகவேண்டும்' என்றார். அது நடக்கா விட்டாலும் கடைசி நொடியிலும் திருப்தி யான எண்ணத்துடன்தான் கண்ணை மூடியிருப்பார். அவர் படத்தைத் தயாரித்ததே நான் அவருக்குக் கொடுத்த குருதட்சனை.

**சில விஷயங்கள் மனம் சார்ந்தது என்கிறீர்கள். உங்கள் குருநாதர் பாலா இயக்கத்தில் நடித்து தயாரித்த 'தாரை தப்பட்டை' முடிவு உங்களுக்கு அதிருப்தியா திருப்தியா?**


என் குரு படத்தில் நடிக்கக் கிடைத்த வாய்ப்பு அது. இதைத்தான் நம்மால் பண்ணமுடியுமென்று நடிகனாக எனக்கு இருந்த சில கூச்சங்களை உடைத்தப் படம்

தொடர்ச்சி 22ஆம் பக்கம்

# இயற்கை...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

காட்சியளிக்கின்றன. இடையேயான நீர்மட்ட ஏற்ற இறக்கம் நிகழும் பரப்பின் மீது படியும் செழிப்பான




சிவப்புச் சேறு மற்றும் கனிவளம் கொண்ட மண்ணில் கிடைக்கும் கனிமங்கள் பறவைகளுக்கு விரும்பிய உணவாகிறது. கோடை காலங்களில் வேறு நாடுகளிலிருந்து 100,000 நீர்ப் பறவைகள் பல வகை கடல் வாழ் பாலூட்டிகளான திமிங்கிலங்களும் டால்பின்களும் இடம்பெயர்ந்து இங்கு விருந்துக்குக் கூட்டம் கூட்டமாக வந்து உண்டு களித்துச் செல்லுகின்றன. இந்நிகழ்வை கண்டு களிக்க மிகவும் பொருத்தமான இடம் ஃபண்டி தேசிய பூங்கா (Fundy National Park) ஆகும். இந்த தேசிய பூங்கா 130 சதுர மைல் பரப்பளவு கொண்டது. நியூ பிரன்சுவிக் மாகாணத்தின் தலைநகர் செண்ட் ஜோன்ஸ்க்கு வடகிழக்காக 110 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.




திமிங்கிலங்கள் உணவுக்கும் இனப்பெருக்கத்திற் கும் கூடும் இடங்களில் ஒன்று ஃபண்டி குடா. 20 வருடங்களுக்கு முன்னர் இக்குடாவில் எண்ணைக் கப்பல்களுடன் மோதுண்டு இறக்கும் திமிங்கிலங் களை அவதானித்ததன் பின்னர் இப்பகுதி எண்ணைக் கப்பல் போக்குவரத்துக்கு தடைசெய்து வைத்திருக்கிறார்கள். வருடாந்தம் சராசரி 22 குட்டிகள் இக்குடாவில் பிரசவிப்பதாகவும் அவதான- ித்துள்ளார்கள். 52 அடி நீளமும் 36 தொன் எடையும் கொண்ட ஹம்வாக் திமிங்கிலங்களும் (Humpback whales), 50 அடி நீளமும் 45 தொன் எடையும் கொண்ட வட அத்லாண்டிக் திமிங்கிலங்களும் (North Atlantic Right whales), 30 அடி நீளமும் 9 தொன் எடையும் கொண்ட மிங்க் திமிங்கிலங்களும் (Minke whales), டொல்பின்களும் (White-Sided dolphins & Harbour porpoises) கூட்டாக பனி காலம் ஆரம்பிக்க முன்னர் தங்கள் குட்டிகளுடன் ஹவாயை (Hawaii) நோக்கிப் புறபட்டு விடுவார்கள். இத்திமிங்கிலக் கூட்டங்களை இங்கு கண்டு களிக்க கோடை காலம் உகந்தவை. மே தொடக்கம் ஒக்ரோபர் வரை சில சுற்றுலா கொம்பனிகள் (whale-watching boat tours) திமிங்கிலங்களை அவதானிக்க 3 - 4 மணித்தியாலப் படகு சுற்றுலா சேவைகளை நாள் பூராகவும் நடத்துகின்றார்கள்.

இங்கு இயற்கை அதிசயங்கள் ஏன், எப்படி நிகழ்கின்றன The science of tides: குறிப்பிட்ட கால இடைவெளியில் ஒரே நேர் கோட்டில் சூரியன் சந்திரன் பூமி மாறி மாறி வரும் போது ஈர்ப்பு சக்தி குறைந்து கூடுவதால் தான் இது நிகழ்கிறது. அதாவது பூமியை சந்திரனின் ஈர்ப்பு சக்தி இழுப்பதால் நீர்மட்ட எழுச்சி ஏற்படுவதாகவும் மற்றும் பூமியை சூரியனின் ஈர்ப்பு சக்தி இழுப்பதால் நீர்மட்ட வீழ்ச்சி ஏற்படுவதாகவும் அறிவியலில் மூலம் விபரிக்கிறார்கள்.

இதனை எல்லோரும் விளங்கிக் கொள்ள சிறு உதாரணம்: குளியல் அறையிலுள்ளது போன்ற தொட்டி ஒன்றை நீரால் நிரப்பி விட்டு தொட்டியின் ஒரு பக்கத்திலிருந்து தொட்டியை நீங்கள் நிற்கும் பக்கம் இழுத்தால் நீர் எதிர் பக்கமாக அசைந்து உயர்ந்து எதிர் பக்க சுவரின் மேல் எழுந்து வெளியே நீர் கொட்டும். உங்கள் பக்கத் தொட்டியின் சுவரின் உள்புறம் நீர்மட்ட வீழ்ச்சி ஏற்படும். இழுத்தலால் ஈர்ப்பு சக்தி கொடுக்க நீர் எதிர் பக்க சுவர் மேல் நீர்மட்ட எழுச்சி ஏற்படும். இப்போ அதே தொட்டியை முன் நோக்கித் தள்ளினால் நீர் உங்கள் பக்க சுவரின் மேல் எழுந்து நீங்கள் நிற்கும் பக்கம் நீர் கொட்டும். எதிர் பக்க தொட்டியின் சுவரின் உள் நீர்மட்ட வீழ்ச்சி ஏற்படும்.

280 கிலோமீற்றர் நீளமும் 105 கிலோமீற்றர் அகலமும் கொண்ட நீர்த்தொட்டி தான் ஃபண்டி குடா என இப்போ ஊகித்துக்கொள்ளுங்கள். ஈர்ப்பு சக்தி இழுப்பதால் இதேபோன்ற நிகழ்வு தான் அங்கு ஏற்படுகின்றன. கனடாவின் கிழக்குக்கரை யில் இயற்கை அதிசயங்கள் ஏன், எப்படி நிகழ்கின்றன என விளங்கிக் கொள்ளலாம்.



**சுந்தரம் இந்திராஜா**

**LAW OFFICE**

**STEFANO FORTINI**

B.A., LL.B., Barrister & Solicitor

*3 Catherine Avenue,*
*Aurora, Ontario*
*L4G 1K4*

*Tel: 416.999.4376*
*Fax: 905.727.7017*
*Email: sfortini@rogers.com*


Another Project By CONCORD
EXCHANGE
At Lake shore and Bathurst
Price starting:
High $200K's
For VVIP Reservation
and Special Prices**
Please Call: 416 321 6969
HomeLife/GTA Realty Inc.,Brokerage*
GTA SQUARE 5215 Finch Ave. East. Unit #203 Toronto ON. M1S 0C2
HOMELIFE
HIGHER STANDARDS
** Some Conditions will Apply
* Independently Owned & Operated

# பாலுமகேந்திராவுக்கு...

20ஆம் பக்கத்தொடர்ச்சி

அது. யாரும் தோற்க வேண்டும் என்பதற்காக சினிமா எடுக்கிறதில்லை. எடுக்கிற திரைப்படம் நல்லா வரவேண்டும் என்றுதான் நினைப்பார்கள். சில நேரம் நாம நினைத்ததற்கு எதிர்மாறாக நடந்தால் அதற்கு ஒன்றும் செய்ய முடியாது. எல்லாம் மக்கள் கையில்தான் இருக்கிறது. அதற்காக நான் வருத்தப்படவில்லை. என்னைப்



பொறுத்தவரைக்கும் 'தாரை தப்பட்டை' பாலா சார் படம் அவ்வளவுதான்.

**கார்ப்பரேட் நிறுவனங்களின் கையில் தமிழ் திரையுலகம் சிக்கிவிட்டதாகவும் அதனால் குறைந்த முதலீட்டுப் படங்கள் பாதிக்கப்படு வதாகவும் சொல்லப்படுகிறதே?**

நல்ல படமாக இருக்கும் பட்சத்தில் யாராலும் அதைத் தடுத்து நிறுத்திவிட முடியாது. மக்களுக்கான படம் மக்களிடம் கண்டிப்பாகப் போய்ச்சேரும். 'காக்கா முட்டை' போன்ற படங்கள் அதற்குச் சாட்சியாக இருக்கிறது. மக்களை நம்பித்தான் திரையுலகமும் அதைச் சுற்றி உள்ளவர்களும் இருக்கிறார்கள். நான் நாயகனாக நிற்பதைக்கூட மக்கள்தான் தீர்மானிக்கிறார்கள்.

**எதை நோக்கி வந்தோமோ அதை அடைந்து விட்டோம் என்று நினைக்கிறீர்களா?**

ஒரு படம் எடுக்கவேண்டுமென்று வந்தவன் தான் நான். நன்றாக வந்தால் இருப்போம் இல்லையென்றால் ஊருக்குப்போய் விவசாயத்தைப் பார்ப்போம் என்று நினைத்திருந்தேன். அப்படிப் பரிசோதனை முயற்சியாக இயக்கிய 'சுப்ரமணியபுரம்' எனக்கு எல்லாவற்றையும் கொடுத்தது. அந்தப் படத்துக்கு பிறகு எனக்கு கிடைத்ததெல்லாம் அதிகம்தான். அதற்காக நான் சும்மா இல்லை. தொடர்ந்து விளையா-டிப் பார்க்கலாம் என்று களத்தில் இருக்கிறேன். வெற்றி அடைவது சுலபம் அதைத் தக்க வைப்பதற்குத்தான் நிறையப் போராட வேண்டும். ஒருமுறை என் அம்மா அழைத்து, 'அதான் ஜெயிச்சிட்டியேடா அப்புறம் என்ன ஊருக்கு வந்திட வேண்டியதுதானே' என்றார். இனிமேதான் ஆரம்பம் என்று எனது பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறேன்.




# உடுப்பிட்டி மக்களின் முன்மாதிரி




நாட்டிலிருந்து வந்த படித்தவர்களும் பேராசிரியர்களும் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களிடம் பணத்தை அனுப்பி நாட்டிலுள்ள இளைஞர்களை சோம்பேறி களாக்காமல் ஏதாவது வேலை வாய்ப்புக் கான தொழிற்சாலைகளை உருவாக்குங்கள்



எனத் திரும்பத்திரும்ப வலியுறுத்தியதற் கிணங்க உடுப்பிட்டியை சுற்றி வாழும் மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குவ தற்காக உருவாக்கப்பட்டதே ***NLite*** சின்னத்தைக் கொண்ட ஆடைகளை உற்பத்திசெய்யும் தையல் ஆலை.

கடந்த காலங்களில் ஈழத்தமிழர்களின் தொழிற்தேவையையும் அத்தியாவசிய பொருட்களின் தேவையையும் இலங்கை யின் தெற்கே பூர்த்தி செய்து வந்ததாலும், போர்க்காலத்தில் இருந்த சில தொழிற் சாலைகளும் தரைமட்டமாக்கப்பட்ட தாலும் அவர்களது சொத்துக்கள் செல்வங்கள் அழிக்கப்பட்டதாலும் வடகிழக்க்கில் வாழும் மக்கள் சுயமாக தாமே உற்பத்திகளை செய்யலாமென்பதை எண்ண முடியாதவர் களாகவே வாழ்கின்றனர்.

வல்லை உடுப்பிட்டியில் அமைக்கப்பட்ட தையல் ஆலை 30 பேருக்கு வேலை வாய்ப்பை வழங்கக்கூடியதாக 2013ம் ஆண்டிலிருந்து இயங்கி வந்தாலும் அந்த ஆலை உற்பத்தி செய்யக்கூடிய வடக்கின் தேவைகள் இன்னமும் தெற்கிலிருந்தே பெறப்படுகின்றது. குறிப்பாக கல்லூரிகளின் விளையாட்டிற்கான ஆடைத்தேவைகள், கல்வித் திணைக்களத்தின் ஆடைத்தேவை கள் பெரிய நிறுவனங்களின் promotional Tshirts என்பன இன்னமும் தெற்கிலேதான் தயாரிக்க முடியும் என நம்புகின்றனர்.

வல்லை தையல் ஆலை முதற்கட்டம் முழுமையாக செயற்படக்கூடிய அத்தனை இயந்திரங்களுடனும் உருவாக்கப்பட்டுள் ளது. அது வெற்றிகரமாக இயங்கும் பட்சத்தில் இரண்டாங் கட்டமாக அதிக இயந்திரங்களை நிறுவி ஏற்றுமதிக்கான தொழிற்சாலையாக மாற்றுவதோடு மூன்றாங் கட்டமாக தையலுக்குத் தேவையான



துணிகளை வல்லையிலேயே நெய்யவும் திட்டங்களை வைத்துள்ளார்கள்.

எமது பலத்தை நாமே உணராததுதான் எமது பகுதிகள் வளர்ச்சியடையாமைக்கு காரணம் என்பதை முதலில் புரிந்து கொண்டு புலம்பெயர்ந்த மக்கள் தாய் நாட்டில் வாழும் உறவுகளின் தொழில் வாய்ப்புக்காக உருவாக்கிய முதலாவது தொழிற்சாலையை வெற்றிகரமாக இயங்க வைப்பதின் மூலம் புலம்பெயர்ந்து வாழ்வோரின் பல முதலீடுகள் வெவ்வேறு தொழிற்சாலைகள் என வடக்கு கிழக்கில் உருவாக வழிசெய்வோம்.

இதற்காக இந் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு பலவகைகளிலும் உதவி புரிந்து வருப வர்கள் எங்களிடம் எதிர்பார்ப்பது எமது ஊர்ப்பாடசாலை களிற்குரிய விடையாட்டிற் கான வருடா வருடம் உபயோகிக்கும் ஆடைகளை இவர்களின் உடுப்பிட்டியில் அமைந்துள்ள இந்நிறுவனத்திலிருந்து பெறுதல். அதற்கு உங்களது உதவியை வேண்டி நிற்கிறார்கள். இவர்களின் இம் முயற்சியை வெற்றிபெறச்செய்வது எமது கடமையாகும். இதன் வெற்றியே மேலும் பல நிறுவனங்களை உருவாக்கவும் அதனால் பலரிற்கு தொழில் வாய்ப்புகள் கிடைக்கக்கூடிய அரிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தலாம். இதுபற்றிய மேலதிக தொடர்புகளுக்கு ***sorna_v@hahoo.ca*** ***indra.ponnampalam@nelson.com***

# DYNAMIC EDUCATORS

*"where ordinary becomes extraordinary"*

## Award Ceremony 2016



*Ms. Aparna B. Srikanthan Welcomes Mr. Neethan Shan, Chief Guest of Honor*



*Mr. Neethan Shan Delivers a Thought-Provoking Speech about the Importance of Education*



*Mr. Ramesh Poobalan, Director and Head of the Mathematics and Science Department, Gives a Speech*



*Ms. Aparna B. Srikanthan, Director and Head of the Language Department, Delivers Welcome Speech*

நீங்கள் கல்வி, தொழிலில் தகுதியும், அனுபவமும் உடையவர்களா? அப்படியானால் நீங்களும் கனடா வரலாம். உங்களின் தகுதிக்கு அமையக் கூடிய வேலை வாய்ப்பை சரியான நிறுவனங்களில் இருந்து சகல சட்ட விதி முறைகளுக்கும் அமைய ஒப்பந்தங்களுடன் ஒழுங்கு செய்து தரப்படும்.
மேலதிக விபரங்களுக்கு: **647.478.9510**

# JOB JOB JOB

### DRIVER & GENERAL

***HELP WANTED IMMEDIATELY***

Output insulation laminate insulation tile insulation செய்வதற்கு ஆட்கள் தேவை. 20 வயதிலிருந்து 45 வயதிற்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: **416.671.2756**

# ஆட்கள் தேவை

### MARKHAM & STEELES

லிங்கம் cream house இல் coustomer service க்கு முழு நேர / பகுதி நேர வேலைக்கு ஆட்கள் தேவை. Srilankan & South Indian cook wanted.
தொடர்புகளுக்கு: **416.879.4190**

### CASHIER & HELP WANTED

Scarborough & Mississauga location Cash & Carry whole sale place wanted Cashier & General helper.
Contact: **416.418.4723**

### DRIVERS WANTED

### DOUBLE DOUBLE PIZZA

Delivery Driver Wanted.

### KENNEDY & FINCH

Contact : **416.412.0944**

### DRIVERS WANTED

Part Time Drivers Wanted In GTA.
D-Z License Preferred.
2 Years Experience.
Contact : **416.569.4065**

### தையல் வகுப்புக்கள்/Orders

***MARKHAM & LAWRENCE***

Saree Blouse, Salwar Kameez, Skirt & Blouse, Ladies Items மற்றும் Saree Blouse Block எடுத்து தைப்பதற்கும் கற்றுக் கொடுப்பதுடன், order க்கும் தைத்துக் கொடுக்கப்படும். மணப்பெண்ணுக்கும் Saree blouse தைத்துக் கொடுக்கப்படும்.
**416.438.2552 / 647.853.5524**

### புரட்டாதி சனி விரத SPECIAL சாப்பாடு TAKEOUT

15 க்கு மேற்பட்ட பதார்த்தங்களுடன் ஸ்பெசல் மரக்கறி சாப்பாடு ரேக் அவுட். முன்கூட்டியே ஓடர் செய்து தாமதத்தை தவிர்த்துக் கொள்ளுங்கள். 100% தூய சைவ உணவகம்.
***SULASIE FOODS & SWEETS***
3011 Markham Road # 57
Markham Mcnilcoll Centre
**416.879.2725 / 416.712.2020**

### DRIVERS WANTED

Pizza Delivery Drivers Wanted.
1987, Queen Street East.
Full time or Part time
Contact: **647.268.3852**

### வீட்டு சமையல்

***MCCOWAN & STEELES***

சுத்தம் சுகாதாரமான வீட்டு சமையல், பலகாரங்கள் செய்து கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: **647.620.5208**

### BUSINESS FOR SALE

Existing Business for sale in Markham.
Women's Clothing in New Town Square Plaza.
All fixtures and inventory for sale.
Bring all offers, Very reasonable rent
Call: **416-831-7038**

### RESTAURANT FOR SALE

***INDIAN / SRILANKAN***

Restaurant for sale in Stouffville Town. Newly built with brand new funitures. LLBO lic hold up to 60 seats. 1700 sq.ft. It is a great busy Location can be changed to Indian, Srilankan, Sushi, Hakka, Italian, Mexican, Canadian and or any type of food business chain. Very low rent with no competition around.
***Contact 416-818-3032***

### STORE SALE

***Scarborough Golf Club & Lawrence*** இற்கு அருகாமையில் அமைந்துள்ள Convenience Store Sale. Western Union, ATM, lotto மற்றும் சகல வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு.
$39,000 + STOCK
**416.723.3352/647.222.5373**

### காணி விற்பனை

கந்தரோடை வீதி, மாசியப்பிட்டி சண்டிலிப்பாயில் உள்ள, ஏக்கர் காணி (பனை, தென்னை) விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: இராசமணி
**647.677.5434**

### HOUSE FOR RENT

### KENNEDY & EGLINTON

3 Bedroom banglow house (main floor) for rent. Close to all facilities. Avail. October 01, 2016.
தொடர்புகளுக்கு: **416.659.6092**
**416.751.6092**

### HOUSE FOR RENT

***ROSSLAND AND RAVENSCROFT***

4 Bedoom housefor rent.
Parking, laundry. Immaculate condition partially finished basement. Close to HWY 401, shopping mall, new spicy land. Avail. immediately.
**416.820.2539 / 647.502.3633**

### HOUSE FOR RENT

### MCCOWAN & LAWRENCE

3 Bedroom house for rent with 02 bedroom bsmt. Sep. entrance, parking, laundry,kitchen,washroom. Close to school, hospital, shopping & TTC. Avai. immediately.
தொடர்புகளுக்கு: **647.877.7570**

### HOUSE FOR SALE

***MCLEVIN & MORNINGSIDE***
***3 + 1 Bedroom + 4 Washroom Town house for sale.***
***WESTNEY & ROSSLAND***
***4 Bedroom semi detached house + 3 washroom for sale.***
தொடர்புகளுக்கு***: Kannan Kankesu***
**416.834.4200**

### உடனடி வாடகைக்கு

Markham Rd & HWY 407 அருகில் 4 BR+ 3 WR Detached வீடு, மற்றும் Mcowan & HWY 401க்கு அருகில் 2 BR கொண்டோ யூனிட் உடனடி வாடகைக்கு உண்டு. Newly Renovated Kitchen with Breakfast area, Nice Backyard with Deck, Closer to Catholic & Public School, Costco, Banks, Restaurants, Shopping Mall ... Steps to Markham Rd & HWY 407.
2BR+1WR Condo Unit near scarborough Town Centre available for immediate lease.
Many Upgrates.
***(Call): 647-712-4843 /416-816-9011***

### ANBU HOME SERVICES

Capet / Car Interior / Sofa
Party Hall Cleaning
Moving & Transport
Airport Transport Services
Canada Wide Transport Services
**647.290.7284 / 416.276.5067**

### SAREE BLOUSE & SAREE

***TAZZLES MAKING***

சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் கட்டியும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: **905.492.0259**

மேலும் பக்கங்கள் 28, 29, 30, 32

## MORNINGSIDE AND OASIS

1 Bedroom basement for rent.

Sep. entrance, parking, laundry, cable. couple preferred. Close to all facilities. Avai. immediately.

1 Room also available with food. Female preferred.

**416.505.7922 / 647.399.0513**

## TEMPS EMPLOYMENT AGENCY

**LOOKING FOR GENERAL LABOURERS FOR D/A/N SHIFT WORK**

1) APPLY AT 211-805 MIDDLEFIELD ROAD SCARBOROUGH ON M1V 4Z6 BETWEEN 10AM TO 2PM

OR

2) PHONE **647.270.8944** BETWEEN 10AM TO 2PM

3) E MAIL RESUME TO ***tempemployagency@gmail.com***

## HELP WANTED

***Ideal square*** இல் வேலை செய்வதற்கு

***Stair Installer (தச்சுவேலை)***

***(GENERAL HELP WANTED)*** அனுபவம் உள்ளவர்கள் தேவை. Full time or Part time. With Benefit.

தொடர்புகளுக்கு: ***416.830.3932***

## LAND FOR SALE

**காணி விற்பனை**

கிணற்றுடன் கூடிய ஒரு ஏக்கர் காணி வவுனியா உப்புளாங்குளத்தில் விற்பனைக்குண்டு.

**தொடர்புகளுக்கு: 011.94. 77. 214.4436**
**647.271.2719**

## OFFICE SPACE FOR RENT

Large Furnished office space with separate washroom and standing shower available for rent.

5310 Finch Ave.East, Unit 16

***Markham & Finch***

***Contact : 416.414.2240***

## RESTURANT FOR SALE

***MALVERN TOWN CENTRE ( SCARBOROUGH)***

Busy location with inside & outside excess family oriented business. Including all furniture & fixtures. ***Contact:***

***416.419.8299 / 416.418.9390***

## ஸ்ரீ வெங்கடேஸ்வரர் திருமண மாலை

முற்கட்டணம் இல்லை. எங்களிடம் எல்லா

வகுப்பினருடைய படமும், ஜாதகமும், விவாகரத்தானவர்களுடையது உட்பட உள்ளது. இந்தியாவிலிருந்து 40 நாளில் ஜாதகமும் 48 மணி நேரத்தில் திருமண பொருத்தமும் சரியாக கணித்துத் தரப்படும். இந்தியாவிலிருந்து உங்களோடு சாஸ்த்திரம் பேசுவார்.

ராம் அலெக்சாண்டர் : ***47.630.5304 647.389 4130 / 647.947.2852***


# தர்மதுரை...

**27ஆம் பக்கத்தொடர்ச்சி**

சம்மதிக்கிறார். ஆனால், வட்டிக் கடை நடத்தும் அவனது சகோதரர்களால் திருமணம் நின்றுவிடுகிறது. இதனால் அதிர்ச்சியடையும் அன்புச்செல்வி தற்கொலை செய்துகொள்கிறாள். தர்மதுரை குடியில் மூழ்கி, தன் இந்த நிலைக்கு காரணமான சகோதரர்களை இம்சை செய்கிறான்.

மீண்டும் மதுரை மருத்துவக் கல்லூரி... சுபாஷினியையும் ஸ்டெல்லாவையும் தேடுகிறார் தர்மதுரை. சாலை விபத்தொன்றில் ஸ்டெல்லா இறந்துவிட்ட தகவல் தெரிகிறது. சுபாஷினிக்கு திருமணமாகி விட்டிருக்கிறது. ஆனால், அவருக்கும் கணவருக்கும் இடையே இணக்கமான சூழ்நிலை இல்லை. எனவே, விவாகரத்துக்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறார். இந்நிலையில், விவாகரத்துக்குப் பின்



திருமணம் செய்துகொள்ளலாம் எனத் திட்டமிட்டு, சுபாஷினியும் தர்மதுரையும் சேர்ந்து வாழத் தொடங்குகின்றனர். இவர்களுக்குத் திருமணம் ஆனதா, தர்மதுரைக்குத் தெரியாமலே அவரோடு சுற்றிக்கொண்டிருக்கும் சீட்டுப் பணம் என்ன ஆனது என்பது மீதிக் கதை.

நாயகன் தர்மதுரையாக வருகிறார் விஜய் சேதுபதி. பல காட்சிகளில் அனாசயமாக நடிக்கிறார். 'மிஸ்டர் கோபால்' என்று இழுத்து அவ்வப்போது ஆங்கில வார்த்தைகளைக் கலந்து கடிப்பது. அரிவாளோடு அறைக் கதவை உடைத்துக் கொண்டிருப்பவர், தாய் குரல் கேட்டவுடன் பெருங்குரலெடுத்துக் கதறி, தாயைக் கட்டிப்பிடித்து அழுது என மனதை உருக வைக்கிறார்.

சுபாஷினி - தமன்னா. இவ்வளவு திறமையான நடிகையை, வெறும் கவர்ச்சிக்கு மட்டுமே பயன்படுத்தி, இவ்வளவு காலமும் வீணாக்கியிருக்கிறதே தமிழ் திரையுலகம் என்று மலைப்புத்தான் தமன்னா நடிப்பைப் பார்த்தும் ஏற்படுகிறது. விஜய் சேதுபதி மீதான ஒருதலைக் காதலை சொல்லாமல் தவிப்பதில் நம்மையும் தவிக்க விடுகிறார். நீண்ட இடைவெளிக்குப் பிறகு சந்திக்கும் போது, 'காலேஜ்ல படிக்கும்போது நீ என்னை லவ் பண்ணியா?' என்று விஜய் சேதுபதி கேட்டவுடன் எழும் ரிதமும் தமன்னாவின் நடிப்பும் உச்சம்.

ஸ்டெல்லாவாக வரும் சிருஷ்டி டாங்கே, தண்ணியடித்துவிட்டு 'என்னைக் காதலிக்கிறியா..?' என்று கேட்டு விஜய் சேதுபதியிடம் அலம்பல் செய்யும் போது அசத்துகிறார். பாண்டியம்மா கதாபாத்திரத்தில் ராதிகாவும், காமக்காப்பட்டி அன்புச்செல்வியாக 'காக்கா முட்டை' ஐஸ்வர்யா ராஜேஷும் அழுத்தமான நடிப்பைத் தருகிறார்கள். துணைக் கதாபாத்திரங்களில் வரும் எம்.எஸ்.பாஸ்கர், ராஜேஷ், கஞ்சா கருப்பு உள்பட மற்ற நடிகர்களிலும் எவரும் நடிப்பில் குறை வைக்கவில்லை.

ஒளிப்பதிவு: எம். சுகுமார். படத்தின் துவக்கத்தில் வரும் அந்த ஏரியல் ஷாட் தொடங்கி இறுதிவரை ஒவ்வொரு காட்சியும் மனதில் தங்குகின்றன. மதுரை மருத்துவக் கல்லூரியின் வெளிப்புறம், தேனி மலைப் பகுதிகள், காமாக்கப்பட்டி அன்புச்செல்வி வீடு மற்றும் சுற்றுப்புறத்தின் கொள்ளை அழகுகளுக்கு இவரது கேமராவே காரணம்.

இசை: யுவன் ஷங்கர் ராஜா. 'மக்கா கலங்குதப்பா', 'ஆண்டிபட்டி', 'நான் காற்றிலே' மூன்றுப் பாடல்களும் சுகம். பின்னணி இசையிலும் யுவன் கலக்கியிருக்கிறார்.

# சிவதாணு

கதை, திரைக்கதை, இயக்கம்: சீனு ராமசாமி. காதல், மோதல், குடும்பம், பாசம், அன்பு, குரோதம் என எல்லா உணர்ச்சிகளையும் கொண்ட, தமிழ்த் திரைப்படத்திற்கான அனைத்தையும் உள்ளடக்கிய படம்தான். தமிழ் திரையில் பலமுறை ஏற்கனவே பார்த்துவிட்ட அம்மா, அக்கா, வட்டிக்கடை சகோதரர்கள், குடிபோதையில் தன் காதலைச் சொல்லுபவள் கிறித்தவப் பெண்ணாக இருப்பது, இரண்டு கதாநாயகிகளில் ஒருவரை சாகடிப்பது, நாயகன் அல்லாமல் வேறொருவரை மணக்கும் நாயகியின் கணவன் மோசமானவனாக அமைந்து அவரது திருமண வாழ்வே சிக்கலாக இருப்பது என தேய்வழக்கான பல விடயங்களும் உள்ளன. ஆனாலும், வித்தியாசமான அனுபவத்தைத் தன் திரைக்கதை மூலம் சாத்தியமாக்கிறார் சீனு ராமசாமி.


கிராமத்து ஜனங்களுக்குத் தேவையான மருத்துவ உதவி கிடைக்காத நிலையைச் சுட்டிக்காட்டுவதுடன், மருத்துவர்கள் கிராமப் பகுதிகளுக்குச் சென்று பணியாற்றத் தயங்கக்கூடாது என்றும் படிக்காத நோயாளிகளுக்குப் புரியும்வகையில் தமிழிலும் மருந்துகளை எழுதுங்களேன் என்றும் தமிழகத்துக்குத் தேவையான செய்தியையும் சொல்லியிருப்பதற்காகவே எல்லா குறைகளையும் மறந்து சீனு ராமசாமியை பாராட்டலாம்.

# காட்டுப்பூனையும் பாம்பும்

காடு ஒன்றில் காட்டுப் பூனையும், பாம்பு ஒன்றும் பகைவர்களாக இருந்தன. அவை எப்பொழுதும் உணவுக்காக மற்ற மிருகங்களை வேட்டையாடுவதில் போட்டி போட்டுக் கொண்டு இருந்தன. இரவில் அவற்றின் பலம் அதிகம் என்பதால் இரவிலேயே வேட்டையாடின.

காட்டிற்குப் புதிதாகப் பறவை ஒன்று வந்து அங்குள்ள மரம் ஒன்றில் கூடு கட்டியது. அதுவும் முட்டை போட்டு விட்டுத் தன் முட்டைகளைக் காத்துக் கொண்டு இருந்தது. பாம்பு, பூனை திரிகின்ற இடம் என்பதால் அப்பறவை வசித்த மரத்தில் இருந்த வேறு மிருங்கள் பறவையைக் கவனமாக இருக்க அறிவுரை செய்தன. இவை தன்னை இம்மரத்தில் இருந்து விரட்டக் கூறுகின்றன எனவும், தான் வாழும் கொப்பில் அவை வந்து இருக்க விரும்புகின்றன எனவும் நினைத்து அவை கூறிய அறிவுரையைப் பறவை பெரிதாகக் கவனிக்கவில்லை. ஆனாலும் அது முட்டை போட்டபடியால் முழு நேரமும் தன் கூட்டிலே இருந்து அடை-காத்தது.

பாம்பு ஒரு நாள் அப்பக்கம் செல்லுகையில் அது பறவையின் கூட்டில் முட்டைகள் இருப்பதை அவதானித்தது. அதுவும் ஒரு இரவு முழுக்கப் பறவை கூட்டை விட்டு வெளியே செல்லும் எனக் காத்திருந்தது. பறவையும் கூட்டை விட்டுப் பறக்கவில்லை. பாம்பிற்கும் கூட்டினுள் நுழைந்து முட்டை உண்பதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.



அதுவும் திருப்பி தன் வீட்டிற்குச் செல்லுகையில் பாம்பு காட்டுப் பூனையை எதிர்பாராமல் சந்தித்தது.


'எங்கிருந்து வருகிறாய்?' எனப் பூனை கேட்ட போது பாம்பு நடந்ததைக் கூறியது. பூனையும் தானும் பறவையைப் பார்த்தாதக் கூறியது. பறவை கூட்டைவிட்டு வெளியே வராததால் அதைப் பிடித்து உண்ண முடியவில்லை என்றது. இவ்வாறு பூனை கூறியவுடன் பாம்பிற்கு ஒரு யோசனை வந்தது.

'நாம் இருவரும் சேர்ந்து நாளை இரவு சென்றால், நீங்கள் பறவையை விரட்டி உண்ணலாம், நானும் முட்டைகளைச் சாப்பிடலாம்' என்றது. பூனையும் சம்மதித்தது. இருவரும் அடுத்த நாள் இரவு பறவையின் கொப்புக்குக் கீழே காவல் இருந்தன. பூனையும் பறவையினை நோக்கிச் சீறிப்பாயத் தயாராகியது. பாம்போ, 'நீ துள்ளிக் கூட்டைத் தட்டிவிட்டால் எனக்கு உணவு இல்லை! நான் முதல் செல்கின்றேன்' என்றது.


பூனையோ, 'இல்லை நீ கூட்டினுள் சென்றால் பறவை பயந்து ஓடிவிடும், எனக்கும் உணவு இருக்காது! நானே முதல் செல்வேன்!' என்றது இருவரும் மாறி மாறி வழக்கம் போல விவாதித்தன. இரவு முழுவதும் விவாதித்ததால் அவைகளுக்குப் பொழுது விடிந்தது தெரியவில்லை. இவை செய்த விவாதத்தின் சத்தத்தாலும் சூரியன் உதிக்க ஆரம்பித்ததாலும் பறவையும் எழும்பியது. அது பாம்பும் பூனையும் கீழே இருப்பதைக் கண்டு பயத்தில் கத்தியது.

மரத்தில் இருந்த பிற மிருகங்கள் எழும்பி, சூரிய வெளிச்சத்தில் இலகுவில் பூனையையும், பாம்பையும் கொத்தி விரட்டின. பறவையும் மற்ற மிருகங்களுக்கு நன்றி கூறி அவைகளுடன் ஒற்றுமையாக வாழ்ந்தது. அதன் பின்னர் பூனையும், பாம்பும் அந்தப் பக்கம் வரவில்லை.

**நீதி - ஊருடன் கூடிவாழ் - ஆத்திசூடி**



ஞா. ஆரணி
அகவை 18

**Engineering Drawing Package for Custom Build Home to Obtain Site Plan Approval and Building Permits - $11,995+HST**

Our Engineering Drawing Package for Custom Build Home includes the all the Applicable Drawings, Plans and Reports including Site Plan, Site Grading & Erosion Control Plan, Site Servicing Plan, Floor Plans, Elevations, Cross Sections, Foundation & Roof Details, Boundary & Topographical Survey, Arborist Report, Heat Loss Calculations, Duct & Ventilation Design to obtain the Site Plan Approval and Building Permits.

**Create Your Dream Home. We offer Total Project Management for Custom Build Home, including Site Plan Approval, Building Permits, Arranging Construction Loan, and Construction Management for $22,975+HST**



சகலவிதமான கட்டிட நிர்மாண வரைபடத் தேவைகளுக்கு நம்பிக்கையுடன் நாடுங்கள்

**M.BASKARASINGHAM**, P.Eng.
**MEGHAL RAVAL,** M.Sc (Eng)
**CHARLES AARON JAYAKAR,** B.Arch **JOON PARK,** M.Sc(Eng)
416 **332 1743** www.**buildingexpertscanada**.com






Math tutorial 330

Answers to tutorial 329

1)y3-3xy-5=0 ,Differentiating

$3y2\frac{dy}{dx}$ -3y $-\frac{dy}{dx}$(3x)=0 ,at(2 ,-1)

$3\frac{dy}{dx}$ +3 $-6\frac{dy}{dx}$-=0 ,dy/dx=1 therefore the eqn. Of tangent at(2,-1) is y=x-3

2)v $=v_0(0.85)^t$,where t is the time in years, .For half its life

$0.5v_0=v_0(0.85)^t$, log0.5=tlog0.85

t=$\frac{log0.5}{log0.85}$=4.265 yrs

3)If the sound is1000 000 times as loud as one you can hear,$I/I_0$ $=10^6$,THE LOUDNESS OF THE SOUND IS GIVEN BY L=10log{$I/I_0$}

Loudness of sound =10x6=60 decibles

4)$\log_a b=p^3$ . so $\log_b a=1/p^3$ .But $\log_b a=4/p^2$, so$4/p^2=1/p^3$

Therefore=1/4

Questions tutorial330

1)A Student writes" The inverse ofy=-$\sqrt{(x+2)}$ is y=$x^2$ -2 " Explain why this statetment is not true

2)Find the inverse of y=$2x^2$+4x

3)Count all of the arrangements of the letters of the word DESCARTES that end with s.

4)A box of 100 electronic components contains three that are defective .If a sample of 5 components tested , what fraction of the possible samples contain at least one defective item?

5)Find the value of the constant b so thatthe function f(x) =$\sqrt{x+1}+\frac{b}{x}$ has a point of inflection at x=3

By

MrS.f.Xavier(Teacher)tel6473409490/4167322228

# பாரா ஒலிம்பிக் போட்டியில் தமிழக வீரர் மாரியப்பன் தங்கவேலு தங்கம் வென்றார்!

பிரேசில், ரியோ நகரில் நடைபெறும் பாரா ஒலிம்பிக் போட்டியில் இந்திய வீரர்கள் உயரம் தாண்டுதல் போட்டியில் தங்கம் மற்றும் வெண்கலப்பதக்கம் வென்று சாதனைப் படைத்துள்ளனர். ரியோ நகரில் பாரா ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. 18 ஆம் திகதி வரை நடைபெறும் பாரா ஒலிம்பிக்கில் 162 நாடுகள் கலந்து கொள்கின்றன. மொத்தம் 23 விளையாட்டுகளில் 528 போட்டிகள் நடத்தப்படுகின்றன. பாரா ஒலிம்பிக் போட்டியின் ஆண்களுக்கான உயரம் தாண்டுதல் போட்டியில் பங்கேற்ற இந்திய வீரர் மாரியப்பன் தங்கவேலு 1.89 மீட்டர் உயரம் தாண்டி தங்கப்பதக்கத்தை வென்றுள்ளார். பாடி வருண் சிங் 1.86 மீட்டர் உயரம் தாண்டி வெண்கலப்பதக்கத்தையும் வென்று இந்தியாவிற்கு பெருமை சேர்த்துள்ளனர். உலக சாதனைக்கு ஊனம் தடையில்லை என்று நிரூபித்துள்ளனர் மாரியப்பனும், பாடி வருண்சிங்கும்.

மாரியப்பன் தங்கவேலு, சேலம் மாவட்டம், தீவட்டிப்பட்டியை அடுத்த பெரியவடகம்பட்டி என்ற குக்கிராமத்தைச் சேர்ந்தவர். இவரது பெற்றேர் தங்கவேல், சரோஜா. செங்கல் சூளை மற்றும் காய்கறி வியாபாரம் செய்து வருகின்றனர். 21 வயதான மாரியப்பன் சேலம் தனியார் கல்லூரியில் பிஏ படித்து வருகிறார். இவருக்கு ஒரு சகோதரி, இரண்டு சகோதரர்கள் உள்ளனர். மாரியப்பனுக்கு ஐந்து வயது இருக்கும்போது, வீட்டின் அருகேயுள்ள கோயில் மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்தபோது, அவ்வழியாக வந்த பேருந்து மோதியதில் அவரது வலது கால் கட்டை விரலை தவிர மற்ற கால் பகுதிகள் சிதைந்துவிட்டன. அதன்பிறகு 5 வயதுக்கு உரிய காலாகவே அது மாறிப்போனது. குணமடையவும் இல்லை. வளரவும் இல்லை. விளையாட்டில் மிகுந்த ஆர்வமுள்ள மாரியப்பன் உயரம் தாண்டுதல் போட்டிகளில் பங்கேற்று பரிசுகள் பெற்றுள்ளார். பள்ளிப் பருவத்தில் உயரம் தாண்டுதலில் அசாத்தியமான அவரது திறமையை அறிந்த உடற்கல்வி ஆசிரியர் ராஜேந்திரன், ஊக்கம் கொடுத்து பயிற்சி அளித்தார். மாவட்ட மற்றும் மாநில அளவில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாரியப்பன் கடந்த 2012ம் ஆண்டு முதல் 2015ம் ஆண்டு வரை சர்வதேச அளவில் நடைபெற்ற போட்டிகளில் பங்கேற்று தங்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.



ரியோ நகரில் நடைபெற்று வரும் பாரா ஒலிம்பிக் போட்டியில் இந்திய அணியில் மாரியப்பன் தங்கவேலு, வருண் சிங் பாத்தி, சரத் குமார், ராம்பால் ஷாகர் (உயரம் தாண்டுதல்), பூஜா (வில்வித்தை), சுந்தர் சிங் குர்ஜார், தேவேந்திரா ஹஜ்ஹாரியா, ரிங்கு, நரேந்தர் ரன்பிர், சந்தீப் (ஈட்டி எறிதல்), அமித் குமார் சரோஹா, தரம்பிர் (கிளப் த்ரோ), தீபா மாலிக் (குண்டு எறிதல்), அங்குர் தமா (1500 மீட்டர் ஓட்டம்), பாஷா பர்மான் (பளு தூக்குதல்), சுயாஷ் நாராயண் யாதவ் (நீச்சல்), நரேஷ் குமார் சர்மா (துப்பாக்கி சுடுதல்) ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

JOBS! JOBS! JOBS!

வேலை இல்லை என்ற கவலை இனி வேண்டாம். அனைத்து விதமான வேலைகளும் எம்மிடமுண்டு. கனடாவிற்கு புதிதாக வந்தவர்கள், மொழிப் பிரச்சனை உள்ளவர்கள் தமிழில் உரையாடி உங்களின் வேலைத் தேவைகளை நிறைவேற்றலாம். உங்களுக்கு ஏற்ற விதத்தில் பதிவுகள் செய்து தரப்படும்.

JOB OPENINGS IN TORONTO, MISSISSAUGA, BRAMPTON,CONCORD & SCARBOROUGH

- General Labourers in Bakeries, Laundries & Other Factories.
- Mixers
- Window Assemblers.
- Forklift Opetators.
- CNC Machine set-up/ Operators.
- Packagers & Assembly line Workers.
- Welders MIG & TIG.
- Wood & Upholstery Workers.

PLEASE APPLY IN PERSON WITH YOUR SIN & PHOTO ID
AND TALK TO OUR CUSTOMER SERVICE REPRESENTATIVE AS SOON AS POSSIBLE

STAFF MASRER INC.
5109 STEELS AVE W. UNIT 105
TORONTO ON. M9L 2Y8
TEL: 416-551-1626
staff.master.inc@gmail.com

STAFF MASTER INC.

# EDUCATION

## Review Questions16-18

➢ **PHYSICS 11 &12**

**Two cars A and B, travel in straight parallel lanes and passes an intersection (P )with constant speeds of 45km/h and 54 km/h respectively. At the same time an another car moves towards the car A and B in opposite direction parallel to A and B. The car C passes an intersection (Q) with a constant acceleration.**
**The distance between the intersections P and Q is 1200m.**
**The car A crosses the car C, 315m from P.**
**The car B crosses the car C , 365m from P.**
**Determine the speed of car C when it passes the intersection Q and P?**

➢ **PHYSICS 12**

**A solid iron ball of mass 900 kg is used on a building site. The ball is suspended by a rope from a crane. The distance from the point of suspension to the centre of mass of the ball is 15 m.**

**(a) Calculate the tension in the rope when the ball hangs vertical and stationary.**
**The ball is pulled back 20° from the vertical and then released. Calculate the speed of the ball just before impact and the tension in the rope just before impact.**

**(b) If the ball is brought to rest in 0.2 s., determine the maximum force *F*max exerted by the ball on the wall.**

**ADV. FUNCTIONS 12**

**Determine the x- values in the interval [0,2 π] that satisfy the inequality**

$0 < \sin x \leq \frac{\sqrt{2}}{2}$

## Answer Key : 16-17

➢ **CHEMISTRY 11**

**Number of moles of $NO_3^-$,**

**(i)50 ml, 0.03 M $Ca(NO_3)_2$ = 2× 0.02×0.05.**

**(ii) 25ml,0.01M $Al(NO_3)_3$ = 3× 0.03×0.025.**
**(iii) 25ml,0.01M $KNO_3(aq)$ = 1× 0.01×0.025**

**Total $NO_3^-$ = 0.0045 mol.**

**Total volume = 100 ml = 0.1 L**

**Therefore the concentration of $NO_3^-$**

$\frac{0.0045}{0.1} = 0.045 mol/L$

**and the concentration of $K^+$**

$\frac{0.00025}{0.1} = 0.0025 mol/L$

➢ **Organic Chemistry 12**

**Boiling points:**

- **2,4-dimethyl pentane< n- heptane <2- hexanone <1- hexanol**
- **Molecular size : 2,4-dimethyl pentane < n- heptane**
- Greater London dispersion force in n- heptane .
- 2- hexanone is having dipole –dipole attraction in addition to London dispersion forces.
- 1- hexanol is having hydrogen bond due to the presence of hydroxyl group.

➢ **CHEMISTRY 12**


**(A)Disproportionation- one substance undergoes reduction and oxidation simultaneously in redox reactions**
**Comproportionation – two reactants each containing same element with different oxidation number forms a product where the same elemnt reach same oxidation number.**

**(B) Balanced equations are**

**(i)$FeS + 3NO_3^- + 4H^+ \rightarrow Fe^{3+} + 3NO + SO_4^{2-} + 2H_2O$**

**(ii) $17HNO_3 + 2HCl + NH_4Cl \rightarrow 18NO_2 + Cl_2 + HClO_4 + 11H_2O$**

**(iii)3-(2,3-dimethy butyl)-4-methyl phenol.**




Answer key
16-18 - next issue
☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj
KEEN TUTORING CENTRE

# இயன்முறை சிகிச்சை (Physiotherapy)

'இயன்முறை சிகிச்சை' என்று தமிழில் கூறினால் பலருக்கு என்னவென்றே தெரியாது. 'பிசியோ தெரபி' என்றால் விளங்கிவிடும். இன்று முதியவர்களிடம் கதை கொடுத்தால் எல்லாருமே தாங்கள் 'Physio'வுக்கு போறதாகவே சொல்வார்கள். பழையகார்கள் கராஜ்ஜுக்கு போவது போன்றதுதான் இதுவும். பிறந்தவுடன் கையையும் காலையும் அசைத்து விளையாடி, கண்களால் வேடிக்கை காட்டி தளிர்நடை நடந்து, ஓடி விளையாடி எத்தனையோ கூத்துக்களை செய்த எமக்கு முதுமை என்று ஒன்று வந்தால் போதும். இருந்தால் எழும்ப முடியாது, எழும்பினால் நடக்கமுடியாது. எந்த நேரமும் படுக்கவே விருப்பம் வரும். ஆனால் தாயகத்தில் வாழ்வே இயன்முறைச்சிகிச்சை தான். கிணற்றில் துலா மூலம் தண்ணி அள்ளுவது, குளிப்பது, சைக்கிள் ஓடுவது, வேலிப்பொட்டுக்குள்ளால் குனிந்து போவது, மரங்களில் ஏறுவது எல்லாமே எமக்கு இருந்த இயல்பான செயல்கள். அங்கு 'Physio' சிகிச்சை செய்யத் தேவையிருக்கவில்லை. அதற்கான கிளினிக்குகளும் இல்லை. இங்கு மூலைக்கு மூலை இப்படியான கிளினிக்குகள் இருக்கும். முதியவர்கள் மட்டுமல்ல பாடசாலை மாணவர்கள், பனியில் சறுக்கி விழுந்தவர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் இச்சிகிச்சைக்காக அங்குமிங்குமாக அலைந்து திரிவதை காண முடிகிறது.

'இயன்முறை சிகிச்சை என்பது எமது உடலின் செயற்பாடுகளை நெறிப்படுத்தி பழைய நிலைக்குத் திரும்பக் கொண்டு வரும் ஒரு முறையாகும்'. இதற்கு முதலில் குறிப்பிட்ட பிரச்சினையை அறிதல், அதற்குரிய உபகரணங்களை தெரிவு செய்தல், தொடர் சிகிச்சை அளித்தல் வேண்டும். இப்படியான சிகிச்சையாளர்களை 'Physiotherapist' என்றே எல்லா நாடுகளிலும் குறிப்பிடுவர். இதற்கென்று சில விசேட பயிற்சி பெற்றவர்களே இவர்களாவர்.



உண்மையில் இயன்சிகிச்சையில் பலரின் பங்களிப்பு இருக்கும். குடும்ப வைத்தியர் நோயாளிகளின் பராமரிப்பாளர்கள், வேறும் சுகாதார ஆலோசகர் இடம்பெறுவர். சிலவேளைகளில் பல உதவியாளர்கள் (PTA) தேவைப்படுவர். பிறந்த குழந்தை முதல் முதியவர்கள் வரையில் இவர்கள் சேவையை வழங்குவர். நோயாளி வரும் போது சில அறிக்கைகளுடன் வரவேண்டி வரலாம். நிழலுரு (Xrays) படங்கள், CT Scan, MRI பிரதிமைகள் இதற்குத் தேவைப்படும். இச்செயல்பாட்டுக்கு நரம்பியல், இதயத்தின் அறிவு, எலும்பு நிபுணத்துவம் குழந்தை நோய் அறிவு என்பன தேவை. இவ்வகையான சிகிச்சைகள் அதிகம் தனியார்களாலேயே நடத்தப்படுகின்றன. அத்துடன் பாடசாலைகள், ஆராய்ச்சி நிலையங்கள், மறுசீரமைப்பு வைத்தியநிலையங்கள் போன்றவற்றிலும் இவ்வசதிகள் உள.

இயன்முறைச் சிகிச்சை 'ஹிப்போகிரட்ஸ்' என்னும் மருத்துவர் காலம் முதல் நடைமுறையில் இருந்துள்ளது. 18 ஆம் நூற்றாண்டில் எலும்பு மருத்துவ பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. 19ஆம் நூற்றாண்டிலே தான் நவீன சிகிச்சை முறைகள் ஆரம்பித்தன. உலக யுத்தங்கள் இடம் பெற்ற வேளையில் இதன் தேவை அதிகரித்தது. 1921இல் 'American Physical Therapy Association' பல வெளியீடுகளை செய்திருந்தது. படிப்படியாக 1948 அளவில் உடற்பயிற்சி, மசாஜ், இழுவை முறை (Traction) போன்ற பல முறைகள் வந்துள. 1974இல் அமெரிக்காவில் பல விசேடமுறைகள் புகுந்தன. அதேவருடம் 'International Federation of Orthopaedic Manipulative Physical Therapists' என்ற சர்வதேச சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டன. சர்வதேசத்திற்கும் இது பொதுவானது.

தொடர்ச்சி 38ஆம் பக்கம்...

# பீனிக்ஸ் பறவைகள் போல் மீண்டும் உயிர்பெறும் முல்லைத்தீவு






முல்லைத்தீவு மாவட்டம் - புதுக் குடியிருப்பு 10ம் வட்டாரத்தில் உள்ள பொதுநோக்கு மண்டபத்தில் 27-08-2016 சனிக்கிழமை 1. "பீனிக்ஸ் மாற்றுத் திறனாளிகள் சங்கம்", 2. "கணினிக்கல்வி மையம்", 3. "வன்னீஸ்வரம் இசைக்குழு" ஆகிய மூன்று அமைப்புகளின் அங்குரார்ப்பண நிகழ்வு, மறுவாழ்வு - கனடா அமைப்பினரின் ஏற்பாட்டில் வடமாகாண சபையின் கௌரவ அமைச்சர் டெனிஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ள சங்கத் தலைவர் இ. பிரபா-கரன் தலைமையில் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

முதலில் சங்கத்தின் பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்துவைத்த அமைச்சர் "நாங்கள் வீழ்ந்துவிட்ட இனமல்ல, மாற்றுத் திறனாளிகளாய் இருந்தாலும் கூட பீனிக்ஸ் பறவைகள்போல் நாங்கள் மீண்டும் எழுவோம் என்பதை இங்கு நீங்கள் நிரூபித்துள்ளீர்கள்" என்று குறிப்பிட்டார்.



அடுத்த நிகழ்வாக புதியதொரு கணினிக் கல்வி நிலையம் பத்துக் கணினிகளோடு மேசை கதிரைகள் உட்பட்ட தளபாட வசதிகளோடு 20 மாணவர்கள் பங்கு கொள்ள கௌரவ அமைச்சரால் மங்கல விளக்கேற்றித் திறந்து வைக்கப்பட்டது. அப்போது உரையாற்றிய அமைச்சர் "உலகம் கணினி மயமாகி உள்ளது. கணினிக் கல்வி இல்லாமல் எமக்கு எதிர்காலம் இல்லை. அனைத்தின் ஆதார மாக இன்று கணினிதான் பயன்படுகிறது. முல்லை மக்களின் கல்விக்கு கணினி அறிவின் அத்தியாவசியத்தை உணர்ந்து தான் மறுவாழ்வு - கனடா அமைப்பினர் இந்தக் கல்வி நிலையத்தை உருவாக்கி யுள்ளனர். கூடியளவு மாற்றுத் திறனாளி களையும் போரால் பாதிக்கப்பட்டோரையும் அரசியற் கைதிகளின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களையும் இந்த வகுப்புகளில் சேர்த்துக்கொள்ள வேண்டும்" என்று கூறினார். அமைச்சர், ஆசிரியர் மாணவர் களோடு கலந்துரையாடி ஆலோசனைகளை வழங்கினார்.

தொடர்ந்து அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்த "வன்னி ஸ்வரங்கள்" இசைக்குழுவின் அங்குரார்ப் பணம் அங்கே அமைக்கப்பட்டிருந்த மிக அழகிய மேடையில் பல்லாயிரம் மக்கள் கூடியிருக்க கோலாகலமாக ஆரம்பிக்கப் பட்டது. கௌரவ முதலமைச்சர் திரு. விக்னேஸ்வரன் தமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணங்களினால் வரமுடியா மைக்கு வருத்தம் தெரிவித்து தமது சார்பில் நீண்ட உரை ஒன்றை அனுப்பி வைத்திருந்தார். அதை முழுமையாக வாசித்த அமைச்சர் டெனிஸ்வரன் இந்த முயற்சியை மிகவும் பாராட்டி இதற்கு அனுசரணை வழங்கிய மறுவாழ்வு - கனடா அமைப்பிற்கு தமது மனமார்ந்த நன்றியை யும் பாராட்டுகளையும் தெரிவித் தார். இந்த இசைக்குழுவின் மூலம் மாற்றுத் திறனாளி கள் உட்பட பலர் தமது வாழ்வாதாரத்தை பெறவுள்ளதோடு அவர்கள் தமது வருமானத்தின் மூலம் இன்னுமின்னும் பலருக்கு சுயதொழில் வாய்ப்புகளை தாமே ஏற்படுத்திக் கொடுக்க இருப்பதை அறியும் போது இத்திட்டம் பற்றித் தாம் மிகவும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைவதாகக் குறிப்பிட்டார். ஒரு வயலினை எடுத்து சங்கத் தலைவர் பிரபாகரனிடம் கொடுத்து இசை நிகழ்ச்சிகள் ஆரம்பமாவதாக கௌரவ அமைச்சர் அறிவித்ததைத் தொடர்ந்து இசைநிகழ்வுகள் முழங்கின. நடு இரவு கடந்து 1:30 மணிவரை மக்கள் திறந்தவெளியில் ஆர்வமாக அமர்ந்திருந்து இசைமழையை ரசித்து மகிழ்ந்தார்கள். அனைவர் உள்ளங்களிலும் ஒரு புது நம்பிக்கையும் உற்சாகமும் மகிழ்ச்சியும் உருவான நிலையில் நிகழ்வு இனிதே நிறைவுற்றது.





# இயன்முறை...


36ஆம் பக்கத்தொடர்ச்சி

ஓர் இயன்முறை சிகிச்சையாளர் (Physical Therapist) என்பவர் மிகவும் கடுமையான பல பயிற்சிகளை மேற்கொள்பவராவர். அமெரிக்காவில் 'Doctor of Physical Therapy' என்ற பட்டப்படிப்பு உள்ளது. (Master of Physical Therapy) உம் சில நாடுகளில் உள்ளது. 4 வருடங்கள் பல்கலைக்கழகங்களில் இவர்கள் படிக்க நேரிடுகிறது. இவர்களுக்கென அனுமதிப் பத்திரம் எடுக்க வேண்டும். இப்படியான கல்வி மேற்கொள்பவர்களுக்கு பரந்த பாடத்திட்டங்கள் உள. இதயநோய்கள், குடல்வியாதிகள், மூச்சுப்பிரச்சினைகள், நரம்பியல் வேறுபாடுகள், ஏற்கனவே சத்திர சிகிச்சை செய்தவர்கள் பற்றிய அறிவுகள் தேவைப்படலாம். இவர்களுக்கு நோயாளி வரும் போது எத்தகைய பிரச்சினைகள் உள்ளன என்பதனை அறிதல், நோயாளியின் வரலாறு, மூட்டுகளின் அசைவுகள், தசைகளில் ஏற்பட்டுள்ள நெரிசல்கள், உடல் இயக்கம், சமநிலை, உடற்பலம், நரம்பியல் இயக்கம், நோவு என்பன பற்றிப் பரிசோதனை செய்ய வேண்டும். மதிப்பீடு என்பது அடுத்த நிலையாகும். நோய் பற்றிய சூழ்நிலை, எப்படியாக சிகிச்சை செய்ய வேண்டும்? என்று அறிந்து சரியான உபகரணங்களைப் பயன்படுத்தி நோயாளியின் உடலை பழையநிலைக்குக் கொண்டு வர வேண்டும். இத்தகைய சிகிச்சையாளர்கள் பட்டப்படிப்பு முடிந்தால் உள்ளக முறையில் (Clinical Internship) பணியாற்றுவது அவசியம்.

கனடாவில் 15 பல்கலைக்கழகங்களில் இது சம்பந்தமான பட்டப்படிப்பு உளது. இங்கு முழுமையாக பட்டம் பெற 5 வருடங்களும் மேலதிகமாக 2 வருடங்கள் 'Masters' பட்டமும் அதாவது 'Masters of Physical Theraphy' பெற எடுக்கும் காலமாகும். இது தவிர 'National Physiotherapy Compete Examination' (NPCE) என்ற பரீட்சையிலும் சித்தி பெற வேண்டும். இதன் பிறகே இவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. எனவே நாம் சாதாரணமாக நினைப்பது போல் இத்துறையில் சேவையாற்ற அனுமதிக்கப் படுபவர்கள் இத்துறையில் பூரணமான அறிவு பெற்றவர்களாவர்.

'Canadian Physiotherapy Association' இதற்கேற்ற பாடத்திட்டங்களை வகுத்துள்ளது. ஒரு இயன்மருத்துவ சிகிச்சையாளரின் கீழ் பல உதவியாளர்கள் சேவை செய்யலாம். இவர்களுக்கும் உடற்கூற்றியல், மனித உடலமைப்பு, நரம்பியல், நடத்தை விஞ்ஞானம், பௌதீகம், ஆராய்ச்சி போன்ற பல துறைகளில் கற்பிக்கப்பட வேண்டும். அண்மைக் காலங்களில் இத்துறையில் நல்ல வேலைவாய்ப்புகள் இருக்கின்றன.

உடல் பற்றிய அறிவுடன் பல சத்திர சிகிச்சை செய்தவர்களை வைத்துப் பராமரிக்கும் சூழ்நிலைகள் இவர்களுக்கும் ஏற்படலாம். ஒவ்வொரு இயன் சிகிச்சையாளரும் வேறுதுறைகளில் தங்கள் விசேட அனுபவங்களை பெறுகின்றனர். இதய நோய் சிகிச்சையாளர்களின் பராமரிப்பு, Coronary by pass சிகிச்சை செய்கைகள், மாரடைப்பு போன்ற நோய்க்கு உட்பட்டவர்கள் எல்லோரும் ஒரு பிரிவுக்குள் அடங்குவர். இதனை 'Cardiovascular and pulmonary physio-therapy' எனலாம். மின்சாரமூலமான சிகிச்சைகளும் உள. 'Electrotherapy' இதில் அடங்கும். முதியோர்களுக்கான 'geriatric' பயிற்சிகளும் உள. மூட்டுவலி (Arthritis), மூட்டுத் தேய்வு (Osteoporosis), புற்று நோய், அல்சைமர் நோயாளிகளுக்கும் தனிச்சிகிச்சை செய்ய வேண்டியுள்ளது. முதுமை பற்றி அறிவுள்ள சிகிச்சையாளர் மட்டுமே இதில் உதவுவார்.



தோல் சம்பந்தப்பட்ட நோய் உள்ளவர்களுக்கும் சிகிச்சை தேவைப்படலாம். இதனை 'Integumentary' எனலாம். இதில் புண்கள், எரிகாயங்கள் உள்ளவர்களும் உளர். இதனால் சில சத்திர சிகிச்சை உபகரணங்களும் தேவைப்படலாம். உடல் பயிற்சி மூலம் இவர்களுக்கும் சிகிச்சை செய்ய நேரிடும். நரம்பியல், பிரச்சினை உள்ளவர்கள் பலர். இப் பயிற்சியில் உளர். பக்கவாதம், கடுமையான முதுகுவலி, அல்சைமர் நோய், பாக்கின்சன், தலையில் காயம், முதுகெலும்பு நோய் இப்படி பல இதில் அடங்கும். இதனை 'Neurological Therapy' எனலாம். எலும்பு நோய் நிபுணர்கள் பலரால் சில பயிற்சிகள் வழங்கப்படலாம். எலும்புகளில் சத்திர சிகிச்சை செய்ய பின்பு இவர்களின் உதவி தேவைப்படும். இதனை 'Orthopedic Physical Therapy' எனலாம். இதிலும் விளையாட்டினால் ஏற்படும் காயங்கள், எலும்பு விலகல், கழுத்து வலி, முள்ளந்தண்டு எலும்பு வலி என்பன அடங்கும்.

விளையாட்டில் ஈடுபடும் மாணவர்களுக்கு கூடுதலான சிகிச்சை தேவைப்படுகிறது. Physical Therapists எனப்படும் சிகிச்சையாளர்கள் 5 விதமான துறைகளில் ஈடுபவர். முதலில் மிகவும் கவனித்தல், ஆரம்ப காயங்களை கண்டறிதல், சிகிச்சைக்கான தொழில்நுட்பங்களை வழங்குதல், முழுமையாக மீளமைத்தல் மேலும் காயங்கள் ஏற்படாதிருக்க ஆலோசனை வழங்கல், முன்னறிவிப்பான சில கல்வியறிவை வழங்குதல் என்பனவாகும்.

பெண்களுக்கென சில விசேடமான சிகிச்சையுள. புற்று நோயாளர்கள், கர்ப்பிணிகள், வேறும்பல விசேட நோயாளிக்கென தனியான சிகிச்சைகள் உள. தொழில்சார் (Occupational) சிகிச்சை முறைகளும் விரிவடைந்து வருகின்றன. இவர்களுக்கு குளித்தல், மலம் கழித்தல், உடை உடுத்தல், உணவு விழுங்குதல், பால் கொடுத்தல், நடத்தல், சொந்தப் பொருட்களைப் பாவித்தல் பற்றியெல்லாம் அறிவினை வழங்குகின்றனர். தினசரி வாழ்வில் ஒருவர் தனது வீட்டில் எப்படி வாழ வேண்டும் என்பது பற்றி நேரே சென்று உதவ முடிகின்றது. பிராணி வளர்ப்பு, குழந்தை வளர்ப்பு, தொடர்பாடல், உணவு தயாரிப்பு, பாதுகாப்பு, பொருட்கள் வாங்குதல், நித்திரை செய்தல், சமூக தொடர்பு என்பன இதில் அடங்கும்.

இந்த சிகிச்சையாளர்களும் இத்துறையில் பட்டம் பெற வேண்டும். இவர்களை 'Occupational Therapist (OTS)' எனலாம். இவர்கள் மன ரீதியில், உடலியல் ரீதியில், மனஎழுச்சி ரீதியில் ஒவ்வொருவரதும் இயல்பை அதிகரிக்க முயல்வர். நிரந்தரமான வலு இழந்தவர்கள், சக்கர நாற்காலிகளில் செல்பவர்கள் மற்றும் சொந்த வேலைகளை செய்ய முடியாதவர்கள் எல்லோருக்கும் இவர்களே உதவுகின்றனர்.

இன்றுள்ள முதியோர்களுக்கு Ohip மூலம் தங்கள் இயன்முறை சிகிச்சையை செய்ய முடியும். 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அல்லது 19 வயதுக்கு குறைந்தவர்களுக்கு, வைத்தியசாலையில் ஓர் இரவு தங்கி சிகிச்சை பெறலாம். ஒன்ராரியோவில் இயன்சிகிச்சை தேவைப் படும், வலது குறைந்தவர்கள் இலவசமாக சிகிச்சை பெறலாம்.

இயன்முறை செய்வதற்கு ஒரு குழுவே தேவைப்படலாம். இதில் இயன்முறை சிகிச்சை நிபுணர், தொழில்சார் சிகிச்சையாளர், பதிவு செய்யப்பட்ட மசாஜ் சிகிச்சையாளர் இயங்காற்றல் நிபுணர் (Kinesiologist), சாதாரண மருந்து ஆலோசகர்கள், எலும்பு நோய் ஆலோசகர்கள், மூட்டுவலி ஆலோசகர்கள், உளவியலாளர்கள் அடங்குவர். அத்துடன் வீடுகளுக்குச் சென்று மதிப்பீடு செய்தல், வேலைத்தளம், உடலியல் இயல்பு (Ergonomic) என்பனவற்றிலும் உதவுவர். தனிப்பட்ட ரீதியிலும் பல்வேறு சிகிச்சைகள் உள. 7000 க்கு மேற்பட்ட உடல் அப்பியாசம் (Exercise) உள என்றால் நம்ப முடிவதில்லை. இதனை வயதுக்கு ஏற்ற முறையில் அமைத்துள்ளனர்.

கனடாவில் உள்ள தொடர்பு நிலையங்கள் பலவாகும். கனடிய இயன்சிகிச்சை நிறுவனம் (Canadian Physiotherapy ) College of physiotherapists of Ontario college of massage therapists of Ontario, college of traditional chinese medicine practitioners and acupuncturists of Ontario எனப்பல நிறுவனங்கள் தொடர்புள்ளன. ஓர் இயன் சிகிச்சையாளரின் சராசரி சம்பளம் 70,234 டொலர் ஆகும். இங்குள்ள ஒவ்வொரு வர்மமுறை மருத்துவர் (Chiropractor) 73,894 டொலர் சம்பளம் சராசரியாகப் பெறுகின்றார்.

இயன்முறை சிகிச்சையால் பல நன்மைகள் ஏற்படுகின்றன. உற்சாகமாக, நலமான வாழ்வு உள்ளதாக எல்லோரும் மாற முடிகிறது. பல முதியவர்கள், இயலாமை அல்லது மிக கடுமையான நோயாளிகள் பலன் பெறுகின்றனர். இம்முறையால் நோவினை அகற்றி, காயங்களை மாற்றி சமூகத்தில் மகிழ்வு பெற முடிகிறது. சுதந்திரமாக இயங்க முடிகிறது. வீட்டிலும், வேலைத்தளங்களிலும் பொழுதுபோக்கு நிகழ்வுகளில் பங்கு கொள்ள முடிகிறது. இதயம், நுரையீரல் நோய்கள், விளையாட்டு காயங்கள், உறுப்புக்களை அகற்றுதல், ஆதரைட்டிஸ் மூட்டுகள், பக்கவாதம், மூளைக்காயம், முள்ளந்தண்டெலும்பு எல்லாவற்றிலுமே இதன் சேவை தேவையாகும்.



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

# இக்கரையும் அக்கரையும்



(கரையில்)

கும்மிருட்டில் தெரிகிறதா
மின்மினி வெளிச்சம்
ஏதோ ஒன்று அவள்
கண்களை கவர்கிறதே
இருள் சூழ்ந்த விடியா நாட்களுக்கு
ஒளி தருமா இந் நகரும் விளக்கு
ஏற்றி வைக்க பாடுபட்டாள் ஒளி தீபத்தை
அன்பெனும் நெய் பதமாக ஊற்றி
சட்டென்று வீசிய கொடுங் காற்றில்
அணைந்ததுவே பரிதாபமாக
ஆனாலும் அதோ தொலைவில்
தெரிவதும் படகு தானா
அணையா விளக்கை
அங்கு இதமாக ஏற்றிவைக்க
நம்பிக்கை உண்டு
அவள் மனதினிலே

(படகில்)

நீல நிற கடலினிலே
கனவுகள் சிறகடிக்க
ஆவலுடன் ஏறிச் சென்றவள்
அலையடித்து அடங்கிப் போனாள்
ஏக்கத்துடன் காத்து நின்றாள்
தூரத்தில் தெரிவது கரை தானா
கரை தொடும் நாளும் வருமா

நம்பிக்கையை மனதில் ஏற்றி
காத்து நின்றாள்
விழி நிறைய



மீரா - ஜேர்மனி

# ஆசிரியர் தினம்



தாய்மொழியின்மேல் காதல் தங்களால்
துளிர்த்தது!
ஆங்கிலேயருக்கு அச்சமூட்டவே
ஆங்கிலம் கற்றுத்தந்தீர்கள்!
கடினமான கணிதத்தையும் கனிவாய்க்
கற்றுக்கொடுத்தீர்கள்!

இயற்பியலையும் இயல்பாய்
இணைத்து எடுத்துரைத்தீர்கள்!
விஷமாய் இருந்த வேதியலும் உங்களால்
வேதமாய் மாறியது!
தாவரங்கள், விலங்குகளையும்
தோழனாய் விளக்கினீர்கள்!

சமூகஅறிவியல் மட்டுமல்லாது
சமூகத்தைப்பற்றியும்
சொல்லித்தந்தீர்கள்!

வகுப்பறைப்பாடங்கள் மட்டுமல்லாது
வாழ்க்கை பாடமும் கற்றுத்தந்தீர்கள்!

மெழுகுவர்த்தியாய் ஒளிர்ந்து அறியாமை
இருள்போக்கி அறிவொளி தந்தீர்கள்!
ஏணிப்படிகளாய் ஏற்றிவிட்டு ஏற்றம் கண்டு
இன்பம் கொண்டீர்கள்!

உங்களால் செதுக்கப்பட்டதால்
சிலையானோம்!
தலையெழுத்தை மாற்றி
எழுத்தறிவத்ததால் நீங்களும்
இறைவன் தான்!
குருவே சரணம்!

- அபிநயா, துபாய் -

# ஆசிரியர் தினம்



உலகறிவு நூல் அறிவுதனை உணரவைக்க
உயர் மனதராய் மாணவராய் எமைக்கூட்டி
அகரம் முதல் அகேனம் வரை அறியவைத்து
அறிவை வளர்த்த ஆசான்களே ஆசிரியர்


அறியாமை என்னும் இருளில் சிக்கி வாழ்க்கையில்
அவதியுறும் மாணவர்களை எல்லாம் முயன்று
கல்வி அறிவுதனை வளர்ப்பதற்காய் தொடர்ந்து
கடும் பாடு பட்டவர்களே ஆசிரியர்கள்

அன்போடு எம்மை அரவணைத்து உயர் தமிழை
அமுதமென எமக்கு எடுத்தூட்டி எமது
இன்பமிகு வாழ்வினுக்கோர் வழிகாட்டிய
இலங்குமுயர் ஆசிரியர் தினமின்று

பலநாட்டுக் கலை கலாச்சாரங்களை பயிலவைத்து
பண்புடைய பாதையிலே அழைத்துச்சென்று
நிலவுபுகழ் பெற்று இனிதே எம்மை வாழவைத்த
நேர்மை மிகு ஆசான்களே ஆசிரியர்கள்

அறிவாளிகளாய், அதிகாரிகளாய் நாம் ஆவதற்கு எமது
அறிவை வளர்த்திட அரும்பாடுபட்டவர்கள்
ஏணியாய் இருந்தெம்மை ஏற்றம் பெறவைத்து தாம்
ஏறாமல் இருந்து எமக்குப்பாடம் புகட்டியவர்கள்

வாத்தியார் வாத்தியார் என்று வாயாரச் சொன்ன அந்த
வார்த்தையால் இன்று வாழ்த்துவோம் வாருங்கள்



கவிநாதம் பரந்தாமன்


**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**
**இலவச ஆலோசனை வழங்கப்படும்**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் எண்ணையினாலும் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும்.

இலவச ஆலோசனைகளுக்கு: 647.456.9796

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada) Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician LG.Ayurvedic Medical Services (SriLanka)



**TUTORING**

KEEN TUTORING CENTRE

By Qualified & Experienced Tutors
- CHEMISTRY, PHYSICS, BIOLOGY
- FUNCTIONS, ADV. FUNCTIONS
- CALCULUS & VECTORS, DATA MGT
- SCIENCE, MATH, ENGLISH

உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு

✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB &AP PROGRAMME
✓ M CAT Classes
✓ EQAO GR 3 & 6

GR 9-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"

Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com


Irudaya Dance Company
Sathangai Narthanalayam Students Association
PRESENTS
JOURNEY
A Glimpse into Tamil Cinema
Exclusive Media Sponsor:
ATN
Powered By:
Lankasri fly
Saturday, September 17, 2016
Doors Open at: 5:00 pm
Chinese Cultural Centre of Greater Toronto
5183 Sheppard Ave E, Scarborough, ON M1B 5Z5
General= $20 VIP= $50 VVIP= $100
(647) 967-1994 (416) 319-0164 (416) 567-8415 (647) 401-1874
Proceeds will be donated to the Canadian Cancer Society and
the Mahadeva Suwamigal Childrens Home in Killinochi, Sri Lanka
PLATINUM SPONSORS
Vela Subramaniam
Dir: 416-786 0760
ROSEMOUNT REALTY
AND ASSOCIATES LTD. BROKERAGE
Your Partner in Real Estate
416.290.6000
www.ramanans.com
REALTOR RAMANAN
MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN
416-908-5656
SIVA NAGAMANY
I CAN FIND THE BEST MORTAGE FOR YOUR HOME
CALL TODAY!
UTHA JEYANANDAN
416-953-1473
mortgageguardian.ca
OHM
DEVELOPMENTS
AVR AUTO COLLISSION LTD
Tel: 416.640.2991
Jyothi
Experience the Taste
Tel. (416) 477- 5345
www.jyothifoods.com
SILVER SPONSORS
SUBAN SINNADURAI
CIBC
ARYA
CANADA INC
MORTGAGE CONSULTANT
Nilogini Thurairajah
(905) 239 - 6845
Ohm COMPUTERS
SIVA & JOY
einthusan.com


தரத்தில் சிறந்தவை...
இல்லத்தரசிகளின் முதல் தெரிவு...
நிரு பிராண்ட் தயாரிப்புகள்
Organic
Extra virgin
COCONUT OIL
- 100% Natural
- No Preservatives
- No Genetically
Modified Organism
Perfect For:
- Frying
- Cooking
- Baking
COCONUT
Niru
ORGANIC EXTRA VIRGIN
Coconut
Oil
100% NATURAL, NO PRESERVATIVES, NON-GMO
PERFECT FOR FRYING, COOKING & BAKING
தமிழ் மளிகைக்
கடைகளில்
கிடைக்கும்
416 750 1976 www.niru.com email: info@niru.com
Niru
Niru
Niru
நிரு

# JRS AUTO TECH

**OPEN 24 HOURS 7 DAYS A WEEK**

MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS

VISA

- Free Inspection & Diagnostics
- Complete Car & Truck Care
- Licensed Mechanics
- Insurance Work Done
- All Fluid Top Ups & A/C Repairs
- Fuel Injection Service & Muffler/ Turbos
- Courtesy Drop Off & Pick Up Available
- Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash



**SENIOR'S SPECIAL**
Free Shuttle Available for Seniors

**TIRE SPECIALS**
NEW TIRES FROM $75
USED TIRES FROM $35

**FREE OIL CHANGE WITH RUST PROOFING**
$99 Car
$120 SUV

**BRAKE JOB**
STARTING FROM
$159

**WATER PUMP TIMING BELT & LABOR**
STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans

Castrol
REGULAR OIL CHANGE $29.95
CASTROL OIL CHANGE $39.95
SYNTHETIC OIL CHANGE $49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR $149.95

**TRANSMISSION FLUSH**
*Starting From…*
*Imports $74.95*
*Radiator Flush $79.95*
*Domestic $149.95*

**ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS**
CHECK
LEXUS
FREE DTC Code Run and Inspection

## 2655 Lawrence Ave. East, Unit 5
(Midland & Lawrence, rear of the building)

**CALL SUBAS DIRECT → 416-206-9489**


**Tel: 416-628-4399**

Email: jrsautotech@hotmail.ca

Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech

*Prices subject to change. Valid with flyer. Cannot be combined with any other offers.

designed by: panchaldesigns.com 647.294.2963


IP
IP GOLDHOUSE LTD
Design your dreams with us
NEW TOWN PLAZA...
...STREET FEST
Aug 20 & 21, 2016
PLATINUM, ROSE GOLD WHITE GOLD YELOW GOLD DIAMOND BANDS SPECIALITY BANDS
பிரசித்திபெற்ற 22கரட் தங்கநகை விற்பனையாளர்கள்
40 New Delhi Drive Unit 56 Markham, Ontario L3S 0B5
Tel: (905) 554-5890




















**Free Real Estate Class -** Call: **416.321.6969**










விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு

***www.vlambaram.com***

***www.tamilvanakkam.com***

